# மொழிபெயர்ப்புக்கலை

அ. க. சுப்பிரமணியம்



"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்"

418
சுப்பி
SL1PR

கம்பளை

**கி.மு.நல்லதம்பி** பாவலர்

விட்டுச் சென்ற இந்நூல்கள்

அன்னாரின் ஞாபகார்த்தமாகக்

கொழும்புத் தமிழ்ச்சங்கத்திற்கு

அன்பளிப்பாக அன்னாரின்

குடும்பத்தாரால்

22.09.2002 அன்று

வழங்கப்பட்டது

இறைவன் துணை

# மொழிபெயர்ப்புக் கலை

"இந்துசாதன" ஆங்கில தமிழ்ப்பிரசுரங்களின் முன்னாள் உதவி

ஆசிரியரும் இலங்கை அரசாங்க பொது

அலுவலகச் சிரேட்ட தமிழ்

மொழிபெயர்ப்பாளருமாகிய

அ. க. சுப்பிரமணியம்

எழுதியது

(சகல உரிமைகளும் ஆக்கியோனுக்கே)

1954 26763 விலை ரூபா 2/-

தனிவிநியோக நிலையம் :—

விவேகானந்தசபைப் புத்தகசாலை,

34, மேட்டுத்தெரு, கொழும்பு—13.

The

# Art of Translation

( in Tamil )

by

**A. K. SUBRAMANIAM**

Late Asst. Editor "Hindu Organ" and "Inthu-sathanam" and Senior Tamil Translator, Official Languages Bureau, Ceylon.

(ALL RIGHTS RESERVED)

1954

**Price Rs. 2/-**

Sole Distributors :—

**The Vivekananda Society Book Depot**

34, Hill Street, COLOMBO-13

# அர்ப்பணம்

தேன்பனிக்குஞ் செந்தமிழைத் தித்திக்க
வூட்டியிருங்
கோன்பணிக்கின் ருளாகக் கோலியவன்—நோன்பி



திருஞானசம்பந்தச் செம்மலடிக் கிந்நூல்
ஒருஞான வர்ப்பணமென் றேது.

*To*

Pandit

## M. V. Thirugnanasambandha Pillai

( V. T. SAMBANDHAN )

at whose feet

The author of this treatise

From his Boyhood

Sat And Learned Tamil

*This Book is respectfully*

*DEDICATED*

# அணிந்துரை

தமிழின் மறுமலர்ச்சியின் நோக்கங்களைக் குறிப்பிடும்பொழுது பாரதியார், "பிறநாட்டுநல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" என்று பாடியுள்ளார். இக் கலைச் செல்வங்களை தமிழன்னைக்கு அறிமுகப்படுத்துங் கலை தனிக் கலையாக விளங்குகின்றது. அக் கலையின்கண் ஆற்றுப்படுத்தும் சிறு நூலே அன்பர் அ. க. சுப்பிரமணியம் அவர்கள் எழுதிய மொழி பெயர்ப்புக்கலை என்னும் இந்நூல்.

காலத்துக்கேற்ற இந்த அரிய நூலிலே மொழி பெயர்ப்பின் பல பிரிவுகளைப்பற்றித் தெளிவாகவும் விரிவாகவும் ஆசிரியர் எழுதியுள்ளார். எதிர்காலத்திற் பயன்படக்கூடிய பல துறைகளையும் தமது நீண்டகால அநுபவத்தினைக்கொண்டு எடுத்துக் காட்டியிருக்கிறார். ஆசிரியர், மாணாக்கர் ஆகியவர்களுக்கும் அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கும் இந்நூல் பெரிதும் பயன்படத்தக்கது என்பது எமது நம்பிக்கை. இவருடைய முயற்சி வெற்றி பெறுவதற்காக இக்கலையில் ஈடுபடுவோர் அனைவரும் இந்நூலைப் படித்துப் பயன் எய்துவராக.

சேவியர் தனிநாயகம்

கொழும்பு 16-3-54

# சிறப்புரைகள்

*யாழ்ப்பாணம் உரோமன்கத்தோலிக்க பாடசாலைகளின் மகா முகாமையாளர் மிகுவந். சுவாமி J. மதுரநாயகம் O.M.I., B.A. அவர்கள்:—*

இக்காலத்தில் சுதந்திரம்பெற்ற நாடுகள் யாவும் அந்நிய மொழிகளைவிடுத்துத் தத்தம் தேசீய மொழிகளிற் கருமங்களையாற்ற முனைந்திருக்கின்றன; அஃதியற்கை. அங்ஙனம் செய்யுங்கால் ஆங்கிலம் முதலாம் பிறமொழிகளில் உள்ள சட்டம், வைத்தியம், விஞ்ஞானம் ஆகிய அருங்கலைகளையும் தமிழ் மொழியிற் பெயர்ப்பது அவசியமாகிறது.

இந்நாட்களில் மொழி பெயர்க்கப்பட்ட பொருள்களையடக்கிய புதினத்தாள்களும் புத்தகங்களும் ஏராளமாக வெளிவருகின்றன. அவற்றில் மிகப் பல தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளனவாயினும், வாசிப்போருக்கு மயக்கத்தையும் விளக்கமின்மையையும் தமிழ் இனிமையையும் புறக்கணிப்பனவாயின.

மொழிபெயர்ப்பு ஒரு தனிக் கலை என்பதனையும் அதற்குக் குறிக்கப்பட்ட சில இலக்கணவரம்புகள் உண்டென்பதனையும், மொழிபெயர்ப்புத்துறையில் ஈடுபடுவோர் உணருதல்வேண்டும். திரு. அ. க. சுப்பிரமணியம் அவர்கள் எழுதிய மொழிபெயர்ப்புக் கலை என்னும் இவ்வரியநூல் மொழிபெயர்ப்பாளருக்குக் கிடைத்தற்கரியவொரு வரப்பிரசாதமாகவமைந்துள்ளது. இதில் மொழிபெயர்ப்பாளர் ஊன்றிக் கவனிக்கவேண்டியனவாகிய உணர்ச்சி, மொழிமரபு, இலக்கணவழுவின்மை, எளிமை, இனிமை, கலைச்சொற்றெரிவு என்பனபோன்ற பிரதான அங்கங்கள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

இந்நூலைத் தமிழகம் விரும்பி யேற்றுப் பெரும்பயன் எய்தும் என்பதும் இதனால் மொழிபெயர்ப்புக் கலையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படுமென்பதும் எனது திடமான நம்பிக்கையாகும்.



*தபால் தந்திப் பகுதி அமைச்சர் கௌரவ திரு. சு. நடேசபிள்ளை B.A., B.L., F.R.E.S. அவர்கள்:—*

இக்காலத்தில் தமிழ் வளர்ச்சிக்கு மொழி பெயர்ப்பு ஒரு முக்கிய சாதனமாகும். மொழி பெயர்ப்புக் கலை என்னும் இந்நூல் இக்காலத்துக்கேற்றவகையில், படிப்போர் இன்புற்றுப்பயன் அடையத்தக்கமுறையில் எழுதப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்புத்துறையில் நீண்டகாலமாக ஈடுபட்டிருக்கும் திரு. அ. க. சுப்பிரமணியம் அவர்கள் தமது அநுபவம் பிறருக்கும் உதவுமாறு இந்நூலை வெளியிடுகின்றார். இவரது தமிழார்வம் போற்றத்தக்கது.

*கைத்தொழில், வீடமைப்பு, சமுதாய சேவைகளின் அமைச்சர், கௌரவ சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள்:—*

திரு. அ. க. சுப்பிரமணியம் அவர்களின் பலவாண்டு அனுபவத்தை அடிப்படையாகக்கொண்டு வெளிவந்த மொழிபெயர்ப்புக் கலை என்னும் நூலைப்படித்து மகிழ்ச்சியடைந்தேன். நூல் சிறிது: ஆனால் அது நமக்குத் தரும் விளக்கம் பெரிது மாத்திரமன்றிப் புதிதுமாகும்.

வெவ்வேறு அரசாங்கப் பகுதிகளில் இன்று மொழிபெயர்ப்பு வேலையில் ஈடுபட்டுள்ள அன்பர்கள் அவசியம் தெரிந்திருக்க வேண்டிய விஷயங்கள் பல பொருத்தமான உதாரணங்களுடன் இந்நூலில் அடங்கியுள்ளன. நூலின் 27 ம் பக்கத்தில் உதாரணத்திற்காக ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள எனது அமைச்சுக் கடிதத்தையும் அதற்கெனவுள்ள இரு வித மொழிபெயர்ப்புக்களையும் பார்த்தபோது மொழிபெயர்ப்பாளர் ஆரம்பத்தில் படுங் கஷ்டம்

தெற்றென விளங்கிற்று. நான் பெற்ற அனுபவமே பிறரும் பெறுவார்களென்பதில் ஐயமில்லை.

அரசியல்துறையில் ஆங்கிலத்துக்கு இதுவரை இருந்துவந்த மதிப்பை இனி சிங்களமும் தமிழும் பெறவேண்டுமானுல் இதுபோன்ற நூல்கள் பல இந் நாட்டில் வெளிவரல் வேண்டும். அவற்றுக்கு ஆதரவு அளிக்கவேண்டியது தாய் மொழிப்பற்றுள்ள ஒவ்வொருவரதும் கடமையாகும்.

---

சைவ சித்தாந்த அறிஞரும் கொழும்பு கச்சேரியில் பாலனத்துணைவராகப் பதவிவகிப்பவருமான முதலியார் செ. சின்னத்தம்பி அவர்கள்:—

அறிவின் எல்லைகள் நாளுக்குநாள் விரிந்து கொண்டேவருகின்றன நவீன ஆராய்ச்சித்துறைகளும் பல்கிப் பெருகிக்கொண்டேவருகின்றன.

தமிழ் மொழியானது நெஞ்சையள்ளும் காவியங்களும் கவிதைகளும் பெற்றுவிளங்கும் வனப்பில் பெருநிலையடைந்திருப்பது உண்மையேயெனினும் விஞ்ஞானம், பொருளாதாரம், சட்டம், அரசியல் முதலிய அறிவியல் துறைகளில் வளர்ச்சிபெறுதிருப்பது மிகப் பெரும் குறையேயாகும். இக்குறையைத் தீர்த்துவைக்கும் கைங்கரியமே தமிழ் மக்களது முதற்பெருங் கைங்கரியமாக இப்போது இருத்தல் வேண்டும்.

நாம் பெற்றுள்ள அரசியற் சுதந்திரத்தின் விளைவாக தேசீய மொழிகளுக்கே முதன்மை கிடைத்திருக்கின்றது. ஆரம்பக் கல்வி முதல் பல் கலைக் கழகக் கல்வி வரையும் நாட்டு மொழிகளையே பயன்படுத்துவதெனத் தீர்மானித்துத் திட்டங்களும் வகுக்கப்பட்டுவருகின்றன. நாட்டு மொழிகளே அரசாங்க மொழிகளாகவும் அமையப்போகின்றன. இந்த நிலைமையில் மொழிப் புலமையும் விஞ்ஞானப் புலமையும் வாய்ந்த நல்லறிஞர்கள் பலர் மொழி



பெயர்ப்புத் துறையில் விரைந்து உழைத்தாலொழிய எமது திட்டங்கள் வெற்றிபெறமாட்டா.

அன்பர் அ. க. சுப்பிரமணியம் அவர்கள் தந்துள்ள மொழிபெயர்ப்புக் கலை என்னும் இந் நூல் இத்துறையில் உழைப்போர்க்கெல்லாம் நல்ல தோர் விளக்காக அமைந்திருக்கின்றது.

மொழிபெயர்ப்பு எளிதானதன்று: மிகவும் கஷ்டம் நிறைந்தது: அதில் ஈடுபடுவோருக்கே அதன் கஷ்டங்கள் விளங்கும். அன்பர் அ. க. சுப்பிரமணியம் அவர்கள் தமிழ்மொழி பெயர்ப்பில் வெற்றியடைந்த ஒரு நல்லறிஞர். அவரது ஆழமான தமிழ்ப் புலமையும், ஆங்கில அறிவும், எல்லாவற்றுக்கும் மேலாக அவரது நீண்டகால அனுபவமும் அவரடைந்துள்ள வெற்றிக்குக் காரணமாகும்.

மொழி மரபு, இலக்கண அமைதி முதலியவற்றைச் சிந்திக்காது காலவேகத்தின விளைவாக மனம் போன போக்கில் மொழிபெயர்ப்பு நிகழும் இக் காலத்தில் மொழிபெயர்ப்பாளர் கருத்திற்கொள்ள வேண்டிய அடிப்படைக் கட்டுப்பாடுகளைத் தெரிவுறுத்தா நிற்கும் இந்நூல் தமிழன்னைக்கு இதன் ஆசிரியர் காலத்தினுற் செய்த பெரு நன்றி எனப் பாராட்டப்படும் தகுதிவாய்ந்ததாகும். ஆசிரியர் மாணவர் முதலிய யாவர்க்கும் பயன்படும் இந்நூலை யாவரும் ஆதரிப்பர் என நம்புகிறேன்.

---

ஆத்ம ஜோதி பத்திரிகையின் கௌரவ ஆசிரியரும் அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராக இருந்தவரும் இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதிப் பாலனத் துணைவராக இருப்பவருமான திரு. க. இராமச்சந்திரன் அவர்கள்:—

தனது இனத்தாரின் மானத்தையும் மரியாதையையும் காப்பாற்றும்பொருட்டு திரு. தவசிமுத்து நாடார் சத்தியாபிமானி என்னும் வாரப் பத்திரி

கையை காரைக்காலில் ஆரம்பித்தபோது அதன் ஆசிரியர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு திரு. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் அழைக்கப்படா திருப்பின், அன்னார் வாழ்நாள் முழுவதும் வயிற்றுப் பிழைப்புக் காரணமாக நாகபட்டினத்தில் அன்டேசன் கொம்பனியில் தலைமைக் கணக்கு இலிகிதராகவே கழிந்திருக்கும். "அபிதான கோசம்", "ஆங்கில—ஆங்கில தமிழ் அகராதி" முதலாய சிறந்த நூல்கள் வெளிவந்திரா. சென்ற நூற்றாண்டிலே தென்னாட்டிலே ஈழத்திலும் தமிழ் மொழிபெயர்ப்புத் தொண்டில் ஒரு வழிகாட்டியாகவிளங்கியவர் அவரே.

அதேபோல் எமது நண்பர் திரு. அ. க. சுப்பிரமணியம் அவர்களும் தாம் முதலில் ஏற்றுக்கொண்ட "சட்டம்பி" உத்தியோகத்தையே கட்டிப்பிடித் திருப்பின் மொழிபெயர்ப்புக் கலை என்னும் இந்த அரிய நூலைக் காணும் பாக்கியம் நாம் பெற்றிரோம். HINDU ORGAN, இந்துசாதனம் ஆகிய இரண்டு பத்திரிகைகளின் உதவி ஆசிரியர் பதவியை என்று அவர் ஆர்வத்துடன் ஏற்றனரோ அன்றே எம் தாய்மொழிக்கு காலதேவி வேண்டும் முறையில் தொண்டாற்றும் வாய்ப்பைப் பெற்றுவிட்டாரெனலாம். அதன்மேல் அவருக்குக் கிடைத்த உத்தியோக மாற்றங்களிலும் ஏற்றங்களிலும் அத்தொண்டில் அவர் மேலும் மேலும் உற்சாகத்துடன் ஈடுபடக்கூடிய சந்தர்ப்பங்களையே இறைவன் திருவருள் அவருக்கு அளித்துள்ளது. அவற்றையெல்லாம் அவர் எவ்விதம் பயன்படுத்தியுள்ளார் என்பதை இந்நூலில் அடங்கியிருக்கும் விடயங்களைக்கொண்டு வாசகர்கள் உணர்ந்துகொள்ளலாம்.

எம் தமிழ் மொழி அரசாங்க மொழிகளில் ஒன்ருக மதிக்கப்பட்டு வருமிக்காலத்திலே இந்நூல் வெளிவருவது மிகவும் பொருத்தமானதாகும். மொழிபெயர்ப்பிற் காணப்படும் பிழைகள், குறைகள், கருத்தை விளங்காது சொல்லுக்குச் சொல்லாக கருத்துக் கொடுக்கும் பெருங்குற்றம் என்னும் இவை தவிர்க்கப்படுவதற்கு இந்நூல் பெரிதும் உதவும் என்பதில் ஐயம் இல்லை. இன்றைய இழுக்கான மொழிபெயர்ப்புக்கு ஒரு உதாரணத்தை இந்நூலில் 24ம் பக்க முதல் மூன்று வரிகளிற் காணலாம். "துக்கம்", "கவலை" என்ற சொற்களுக்கும் "பரிவு", "அனுதாபம்" என்ற சொற்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை விளங்காத முறையில் இன்று சில இடங்களிலே மொழிபெயர்ப்பு நடக்கிறது. "White Paper" என்னும் அறிக்கை "வெள்ளைக் கடதாசி"யென மொழிபெயர்க்கப் பட்டிருப்பதும் உண்டு. இவ்விதம் தமிழ் மொழி "வெற்றிகரமாக"ப்பின் சென்றால் White Paper என்பது "சுண்ணநீர் பூசிய அறிக்கை" (White Washing Paper) என்றும் வெளிவரக்கூடும்.



His Excellency என்பதற்கு இந்நூலாசிரியர் "அதி உத்தம" என்று சமபதம் கொடுத்திருப்பது பொருத்தமானதா என்ற ஒரு ஆசங்கை எனக்கு எழுகின்றது. "உத்தமம்" என்னும் சொல் உண்மையைக் குறிப்பது; உத்தம புருடன் என்றால் கடவுள், விட்டுணு என்றே கருத்து; புத்தர் பெருமானை "உலகை உய்வித்த உத்தமன்" என்கின்றோம் அதில் அது முற்றிலும் பொருத்தமான சொற்றொடர்; உத்தியோக உயர்வை மாத்திரம் குறிக்குமிடத்தில் "அதி கௌரவ", "கீர்த்தி மிக்க", "மேன்மைதங்கிய" என்றின்னோரன்னவாறு His Excellency என்பதற்குச் சமபதம் கொடுப்பது பொருத்தம் என்று நினைக்கிறேன். தாம் கொடுத்திருக்கும் சமபதங்கள் முடிவானவையல்ல என்று இந்நூலாசிரியரே கூறியிருக்கிறார். அது வரவேற்கத்தக்கது. இனி, "தேவரீர்" என்ற பதத்தை மனிதரை விழிக்கும்போது உபயோகிக்கலாமோ என்றால், நாவலர் பெருமானே, "தேவரீர் அண்ணை" என்று தம் கடிதங்களை ஆரம்பித்திருக்கிறார் என் பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காலத்துக்கேற்ற இந்த அரிய நூலை வெளியிட்டுள்ள அன்பர் சுப்பிரமணியம் அவர்களுக்கு தமிழகம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது என்பதே எனது அபிப்பிராயம்.

---

இலங்கை அரசாங்க சிவில் சேவை அதிகாரியாக விருந்து இளைப்பாறியவரும் அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் இயக்கப் போஷகரும், ஸாகிராக்கல்லூரிப் பிரதமாசிரியருமாகிய செனேற்றர் ஏ. எம். ஏ. அசீஸ் B.A., அவர்கள்:—

மொழிபெயர்ப்பு ஒரு நுட்பமான கலை. உலகத்தில் வளம்பெற்றுலவும் ஒவ்வொரு மொழியும் தனக்கெனப்போக்கும் மரபும் ஆக்கமும்வாய்ந்து தனிப்பண்புடன் விளங்குகிறது. எனவே, ஒரு மொழியில் உள்ள இலக்கியத்தினைப் பிறிதொரு மொழியிற் பெயர்க்கவேண்டுமாயின் இரு மொழிகளின் பண்பாட்டையும் நன்கு அறிந்துள்ளவர்களே அப்பணியை இனிதே ஆற்றமுடியும். மொழிபெயர்க்கப்படவேண்டிய இலக்கியத்தின் நடையையும் அதன் அடிப்படையில் ஓடிக்கொண்டிருக்கும் உணர்ச்சிவேகத்தையும் மொழிபெயர்ப்பிலும் பிரதிபலிக்கச்செய்து மூலவாசிரியரின் கருத்தை ஐயந்திரிபுக்கு இடமில்லாது எடுத்துக்காட்டுபவர் தான் உண்மையான ஒரு மொழிபெயர்ப்பாளராவார். தாமே மூலக்கிரந்தகர்த்தாவாகத் தம்மையமைத்துக் கொண்டு அம்மூலகர்த்தாவின் உணர்ச்சியினை அப்படியேகொண்டு மொழிபெயர்ப்புக்கு உயிர் அளித்து அதில் உள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் ஜீவசக்தியூட்டி வாசிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் உணர்ச்சியேற்றும் மிகச் சொற்பதொகையினரான மொழிபெயர்ப்புக் கலைஞரில் எனது நண்பர் அ. க. சுப்பிரமணியம் ஒருவர் என்பதனை எனது அநுபவத்தில் இருந்து கண்டிருக்கிறேன்.

அகில இலங்கை முஸ்லிம் இயக்கச்சஞ்சிகைக்கு நான் எழுதிய Unity, Faith and Discipline என்ற கட்டுரையை அவர் எவ்வளவு அழகாக மொழி



பெயர்த்துதவினர் என்பதனை அக்கட்டுரைத் தமிழாக்கத்தினை அச்சஞ்சிகையிற் படித்தவர்கள் அறிவர். புனித இஸ்லாத்தின் பொன்றுக கவிஞராக விளங்கும் மகாகவி இக்பால் அவர்களைப்பற்றிச் சென்ற ஆண்டில் நான் இலங்கை வானொலியிற் செய்த ஆங்கிலப்பேச்சினை இவர் அழகுறத் தமிழாக்கம்செய்திருப்பதனையும் ஈண்டுக்குறிப்பிடவிரும்புகிறேன். அப்பேச்சில் நான் எடுத்துக்காட்டிய இக்பால் கவிகளை திரு. சுப்பிரமணியம் அவர்கள் இக்பால் அவர்களே தமிழில் பாடியதுபோலக் கவியாகவே மொழிபெயர்த்திருப்பது அத்தமிழாக்கத்தின் ஒரு சிறப்பான அம்சமாகும். உதாரணத்துக்கு ஒரு கவி காட்டுதும்.

Thou did'st create the night
  and I made the lamp;
Thou did'st create clay and
  I made the cup;
Thou did'st create the deserts,
  mountains and forests;
I produced the orchards,
  gardens and the groves;
It is I who make glass out of stone
  And it is I who turn a
poison into an antidote.

### இதன் தமிழாக்கம்:

காரிருள் இரவைத்தான் படைத்தீரிருள்
  போக்கிடத்தீபத்தை நான் படைத்தேன் - இந்தப்
பாருக்குள்ளே களிமண்ணைப்படைத்தீர் நீர்
  பற்பலவாங்கலம் நான் வகுத்தேன்
காடுகள் மாமலை பாலைவனத்தினைக்
  காவலனேயன்று நீர் படைத்தீர் - காற்றில்
ஆடுகுளிர் சோலை யோடுகனித்தோட்ட
  மாக வவற்றினை நான் வகுத்தேன்
கற்பாறைதன்னையே நீர் படைத்தீரதிற்
  கண்ணாடி செய்பவன் நானல்லவோ — நாக
சர்ப்பத்தில் நஞ்சினை நீர் படைத்தீரதைச்
  சாரு மருந்தாக்கிவைப்பவன் யான்.

இவ்வாறாக மொழிபெயர்ப்புத்துறையில் பரந்த அநுபவமும் விரிந்த அறிவும், இரு மொழியாற்றலும் படைத்துள்ள இவர் மொழிபெயர்ப்புக் கலை என்ற இந்நூலை நவமாக எழுதி வெளியிட்டிருப்பதனைத் தமிழகம் முழுவதும் வரவேற்கும் என்பதே எனது நம்பிக்கை.

அன்பர் அ. க. சுப்பிரமணியம் அவர்கள் எழுதியுள்ள "மொழிபெயர்ப்புக் கலை" என்னும் இந்நூல், நாட்டு மொழிகளையே ஆட்சி மொழிகளாயும் போதனா மொழிகளாயும் ஆக்கவேண்டும் என்ற முயற்சிசெய்யப்படும் இக்காலத்திலே, மிகவும் வேண்டியதாகும். மொழிபெயர்ப்பென்பது வெறும் சொற்பெயர்ப்பல்ல, அது ஒரு நுண்ணிய கலை என்பதனை ஆசிரியர் விளக்கி மொழிபெயர்ப்புத்துறையில் ஈடுபடுவோர் பின்பற்றவேண்டிய வழிகளையும் தமக்கே உரியதான அழகிய வசனநடையில் காட்டியிருக்கிறார். காலத்துக்கேற்ற இந்நூல் ஆசிரியர்களுக்கும் மாணாக்கர்களுக்கும் மட்டுமன்றி, பத்திரிகைத்தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கும், அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் பெரும்பயன் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

பல்லாண்டுகாலமாக ஒரே கலாசாலையில் ஒரே வகுப்பில் என்னுடன்சேர்ந்து கல்விபயின்று தமிழ்ப்பணிப்பாதையைத் தமக்கென வகுத்துக்கொண்ட நண்பர் சுப்பிரமணியம் அவர்கள் அப்பாதையில் முன்னேறி மொழிபெயர்ப்புக் கலைவாணராக நம் தாய்மொழிக்கு ஆற்றிவரும் சேவைகளைக்கண்டு பெருமையடைகின்றேன்.

இந்நூலாசிரியர் தமிழ் மொழிக்கு இன்னும் பணியாற்ற, இந்நூலைத் தமிழ் பேசும் மக்கள் அபிமானிப்பதன்மூலம், அவரை ஊக்குவித்தல் வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

# முன்னுரை

அன்புள்ள தாய்: அவளுக்குமுன்னே ஆசைக் குழந்தை அமர்ந்திருக்கிறான்; கற்பலகையைக் கையில் எடுக்கிறான். இலேகினியைக்கொண்டு அதிலே, அங்கொரு கீறு, இங்கொருகோடு, ஒரு வட்டம், ஒரு குற்று கீறுகிறான்' கீறிவிட்டு, ''அம்மா படம் வரைந்து விட்டேன் பார், இது சிங்கம், இது குளம், இது மரம்; இந்தச் சிங்கம் இக்குளத்திலே தண்ணீர் குடித்துவிட்டு இம்மரத்தின் கீழ்ப்படுத்து உறங்குகிறது'' என்று பெருமையுடன் காட்டுகிறான். அன்னை, தனையன் 'வரைந்த ''படத்தை"ப்பார்க்கிறாள். அவள் முகத்தில் மகிழ்ச்சி பொங்கிவழிகிறது. ''என் கண்ணே, கண்ணின் மணியே நீ சமர்த்தனடா; அழகானபடமடா'' என்று சொல்லிக் கட்டித்தழுவுகிறாள்; உச்சிமுகந்து உள்ளங்குளிர முத்தமிட்டு ஒக்கலையில்வைத்துப் பெருமித நடைபோட்டுச் செல்லுகிறாள்.

ஆம்: தமிழகம் எனது அன்னை: என்னை ஆளாக்கி வைத்ததாய்: மனத்தில் எழுந்ததை எழுதி அதற்கு, ''மொழிபெயர்ப்புக்கலை'' என்ற பெயரும் சூட்டி, எனது அன்னையின் — அகிலம் முழுவதுக்கும் அன்பு என்பதனை அன்றே போதித்து அறவழி நின்ற என் தமிழக அன்னையின்-திருவடிகளில் அதனைச்சமர்ப்பிக்கின்றேன்; அன்னை மகிழ்வாள், ஆசிதருவாள் என்பது நம்பிக்கை.

ஏறக்குறைய இருபத்தைந்தாண்டு காலம் மொழிபெயர்ப்புத்துறையில் ஈடுபட்டு அதனால் அடைந்துள்ள அநுபவத்தின் விளைவே இச்சிறிய நூலாகும்; ஆனால் இப்படியான முயற்சியில் ஈடுபடவேண்டுமென்று யான் நினைத்திருந்தவனல்லன். மொழிபெயர்ப்புத்துறையிலே ஏதும் அநுபவம்படைத்திருந்தால் அவ்வநுபவத்தைப் பொது நன்மையின் பொருட்டு வெளியிடுதல் வேண்டும் என்று தினகரன் ஆசிரியர் அன்பர் திரு. வே. க. ப. நாதன் அவர்கள் வற்புறுத்தியதன் பயனாக 'மொழிபெயர்ப்புக்கலை' என்னும் பெயருடன் 1952ம் ஆண்டின் முற்பகுதியில் ஒரு கட்டுரையினை தினகரன் ஞாயிறு



இதழில் தொடர்ச்சியாக வெளியிட்டேன். ''பாரததேவி'' ''சிரஞ்சீவி'' முதலிய தென்னிந்தியப்பத்திரிகைகளும், ஈழத்தின் தமிழ்ப்பத்திரிகைகள் சிலவும் இக்கட்டுரையின் சிலபாகங்களை எடுத்து வெளியிட்டமை சிறியேனுக்கு மேலும் ஊக்கத்தினை அளித்தது; எனவே குறித்த அக்கட்டுரையினை ஆதாரமாக வைத்துக் கொண்டு இன்னும் சில விடயங்களையும் சேகரித்து இந்நூல் உருவத்தில் வெளியிட, திருவருளையும் குருவருளையும் முன்னிட்டு முன்வந்தேன்.

இச்சிறு நூலின் கண் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன யாவும் 'சொந்தச் சரக்கு' என்று தம்பட்டம் தட்டச் சிறியேன் ஒருபோதும் முன்வரமாட்டேன். தமிழ் இலக்கியத்துறையிலும் மொழிபெயர்ப்புத் துறையிலும் பொதுவான கல்வித்துறையிலும் ஈடுபட்டு அநுபவமும் ஆற்றலும் படைத்திருக்கும் பெரியாரது ஆசியும் அன்பர்களது உதவியும் தான் இந்நூல் வெளிவருதற்குக் காரணமாகும்; காவிய இலக்கிய மொழிபெயர்ப்புக்கு ஒரு எடுத்துக்காட்டாக இந்நூலில் தந்திருக்கும் விவேகானந்தப் பெருந்தகையின் சன்னியாச கீதத்தின் மூலத்தினையும் கிடைத்தற்கரிதாக விருந்த அதன் தமிழ் மொழிபெயர்ப்பினையும் சிறியேனுக்கு உதவி, எடுத்துக் கொண்ட பணி இனிதே நிறைவேற தமது ஆசியினையும் அன்பையும் அளித்தருளிய மைலாப்பூர் ''இராமக்கிருட்டின விசயம்'' ஆசிரியர் உயர்திரு சுவாமிபரமாத்மானந்தா' அவர்களுக்குத்தமியேன் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

தினகரன் ஞாயிறு இதழ்களில் குறித்த கட்டுரை வெளியான பின்னர், மதுரை ''செந்தமிழ்'' திங்கள் வெளியீட்டில் அரசாங்கமொழிகள் அலுவலகத்தில் ஆய்வுத்துணைவராகக் கடமையாற்றும் அன்பர் வித்துவான் செ. நடராசா அவர்கள் மொழிபெயர்ப்புப்பற்றி ஒரு கட்டுரையினை எழுதியுள்ளார். அதன் சில பகுதிகளும் அன்னாரின் அனுமதியுடன் இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன. அவ்வநுமதியை மனமுவந்து அளித்ததுடன் நில்லாது இந்நூலின் கையெழுத்துப்பிரதியினையும் ஆராய்ந்து வேண்டிய வேண்டிய திருத்தங்களைச்செய்து

இப்பணியில் அவர் தந்த உதவி என்றும் மறக்கற்பாலதன்று.

இந்நூலை ஆக்குவதில் வேண்டிய ஆலோசனைகளைச் சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு தந்து, அச்சுச்சரவைகளைப் பார்வையிட்டு, இன்னும் வேண்டிய சகல உதவிகளையும் அளித்துள்ள அன்பர் திரு. ச. சரவணமுத்து (மொழிபெயர்ப்பாளர், அரசாங்க மொழிகள் அலுவலகம்) அவர்களுக்கு என்றும் கடமைப்பாடுடையவனாக இருக்கின்றேன்.

இந்நூலின் கையெழுத்துப்பிரதியினை ஆராய்ந்து வேண்டியவேண்டிய இடங்களில் திருத்தங்கள் மாற்றங்களைச் செய்தும் தாமாக அரிய பல புதிய கருத்துக்களைச்சேர்த்தும் இப்பணியில் உதவியாற்றிய அன்பர் கலைமாணி செ. வேலாயுதபிள்ளை (B. A.) அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

ஈழத்தமிழினத்தின் கோலத் திருநெறியைத் தமிழ் பேசும் தரணியெலாம் முழக்கம் செய்து தமிழ்ப்பணியே தம் பணியென்று தொண்டாற்றி வரும் அன்பர் திரு வே. க. ப. நாதன் அவர்களே இந்நூல் வெளிவரற்குக் காரணகர்த்தா என்று கூறினால் அது மிகையாகாது. பத்திரிகைக்கட்டுரை தொடக்கம் இந்நூல் உருப்பெறும் வரையுள்ள ஒவ்வொரு கட்டத்திலும் அவர் செய்த உதவி அளவிடற் பாலதன்று.

அன்றெல்லாம் தமிழன் அவனிமுழுவதும் தன் கலையைப்பரப்பினான், பண்பாட்டைப்பரப்பினான் என்று சரித்திர நூல்களிற் படித்தோம்; அது முழுவதும் உண்மை என்பதனை இன்று காட்டி ஞாலம் முழுவதுக்கும் தமிழன் பண்பாட்டைப்பரப்பி, நாவலர், தாமோதரனார், விபுலானந்தர், ஞானப்பிரகாசருக்குப்பின் ஈழத்தமிழினத்தின் கலைவிளக்கு அவிந்துவிடுமோ என்றிருந்த அச்சத்தினைப்போக்கித் தமிழினத்துக்கலை வாழ்வின் கலங்கரை விளக்குக்குரிய மின்சக்தியாக விளங்கும் பன்மொழிப் புலவர் வண. சேவியர் தனிநாயகம் அடிகளார். M. A. M. Litt, இந்நூலுக்கு அணிந்துரை ஒன்றை வழங்கியதுடன் கையெழுத்துப் பிரதியிலும் எத்தனையோ அரியதிருத்தங்களைச்செய்து உதவி இப்பணி இனிதே



நிறைவேறத்தமது ஆசியையும் அளித்துள்ளார்.

அவரைப்போலவே, இந்நூலுக்குச் சிறப்புரைகள் வழங்கித்தங்கள் தங்கள் ஆசியை நல்கிய பெரியார் அனைவருக்கும், இந்நூலுக்கு வேண்டிய மேலட்டைப் படத்தை வரைந்து உதவிய அன்பர், ஈழத்துக்கலைவானிலே என்றும் பொன்றுவொருதானத்தைத் தமக்கென ஈட்டிக் கொண்ட கலாமணி செ. சண்முகநாதன் ("சாண") அவர்களுக்கும் சிறியேன் என்றும் கடமைப்பட்டவனாவேன். ஈற்றில்,

இன்னவ னிவனாரென்றே ஏவரு மறியாதேனைத்
தன்னவனாக்கி ஞாலத் தருமொழி மாற்ற நுட்பம்
கன்னலாய்ப் பாகாயூட்டிக் கண்ணுளார் அவையிலேற்றி
இன்னமு மோங்கவாசி இனிதளித் திலங்கு மேலோன்

ஆகிய முதலியார் குல. சபாநாதன் அவர்களுக்கு அஞ்சலிசெலுத்தி இம்மலரை அன்னை தமிழகத்துக்குச் சிறியேனது அன்புக்காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றேன்.

கற்றது கைம் மண்ணளவு, கல்லாதது உலகளவு; தமிழன்னைக்குச் சிறியேனும் இயன்ற பணியாற்றவேண்டும் என்ற ஒருதுடிப்பே இச்சிறு நூலின் தோற்றத்துக்குக்காரணம் இன்று எமது அரசாங்கப்பகுதிகளிலும் ஏனைய இடங்களிலும் மொழிபெயர்ப்புக் கருமமும் ஒரு பிரதான உறுப்பாக விளங்குகின்றது. மொழிபெயர்ப்பு என்பது வெறும் சொற்பெயர்ப்பன்று, அது ஒரு நுண்ணிய கலை என்பதனை விளக்கி அதனுடன் பின்னப்பட்டுள்ள பல்வேறு விடயங்களை விளக்குவதனையே இந்நூல் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. ஒரு சிறிதளவாவது இந்நூலினால் தமிழகத்துக்குப்பயன் கிடைக்குமானால் அதுவே பெரும் பேறாகும்.

இந்நூல் பூரணமானதன்று; இதில் உள்ள குறைகளையும் இன்னும் சேர்க்கவேண்டியன வற்றையும் அன்பர்கள் சிறியேனுக்கு எடுத்துக்காட்டுவார்களானால் அடுத்தபதிப்பில் பிழைகளை நீக்கியும் சேர்க்கவேண்டியன வற்றைச் சேர்த்தும்கொள்ளுவேன்.

43, கேசுபாவ வீதி, அ. க. சுப்பிரமணியன்
பொரளசுக்கமம்.

## உள்ளுறை


| | |
|---|---|
| அர்ப்பணம் ... ... ... ... | I |
| அணிந்துரை ... ... ... ... | III |
| சிறப்புரைகள் ... ... ... ... | IV |
| முன்னுரை ... ... ... ... | XIV |
| 1. மொழிக்குக் காரணம் உணர்ச்சி ... | 1 |
| 2. மொழிபெயர்ப்பில் உணர்ச்சிப்பெருக்கு | 5 |
| 3. கிறீத்துவப் பாதிரிமார் காட்டிய வழி | 19 |
| 4. மொழி மரபு ... ... ... | 23 |
| 5. கடிதங்களில் மரபு வழுவாமை ... | 32 |
| 6. எழுத்திலக்கண நெறி பிறழாமை ... | 47 |
| 7. எளிமையும் இனிமையும் ... ... | 51 |
| 8. சட்டசம்பந்தமான மொழிபெயர்ப்பு | 58 |
| 9. கலைச்சொற்கள் ... ... ... | 78 |
| 10. மொழிபெயர்ப்பில் பிறமொழிக்கலப்பு | 87 |
| 11. கிரந்த எழுத்துக்கள் ... ... | 100 |
| 12. முடிவுரை ... ... ... | 105 |


# 1. மொழிக்குக் காரணம் உணர்ச்சி

> ''சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
> செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்''

என்றார் தமிழனின் எதிர்கால முன்னேற்றத்தை மனக்கண்முன் கண்ட மகாகவி பாரதியார். எட்டுத் திக்கிலுமுள்ள மட்டில்லாக் கலைச் செல்வங்களைத் தமிழன் கொண்டுவந்து சேர்ப்பதோடு நிற்கவொண்ணாது என்பது கவிச்சக்கரவர்த்தியின் கட்டளை. அச்செல்வங்களை அவரவர் அநுபவிப்பதுடன் நிற்க வொண்ணாது, பின்னர் கறையான் அரிக்க விடக்கூடாது என்பதனைக் கருதிய தமிழ் அண்ணல்,

> ''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற்
> பெயர்த்தல்வேண்டும்
> இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ்மொழியில்
> இயற்றல்வேண்டும்''

என்று தமிழறிஞருக்கு— தமிழ் எழுத்தாளருக்கு – கற்பித்தார். ஆம், தமிழ்நாடு செழிக்க, தமிழகம் புதுமைப் பொலிவுடன் விளங்க, தமிழினம் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து நிற்க, தமிழன் தமிழனாக வாழ, தமிழ் புதுமணம் பெறவேண்டும்; தமிழ் என்னும் மலர்ச்செடி மீது ''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்'' என்னும் காற்று வீசவேண்டும்: காற்றின் சீவசக்தியை செடி உட்கொள்ளவேண்டும். அதன்பயனாக, செழித்த நறுமலர்களை அது பூக்கும். அம்மலர்களினின்றும் பிறக்கும் கந்தம் மந்தமாருதத்துடன் சேர்ந்து உலகக் கலைவளர்ச்சிக்கு உற்சாகமூட்டும். எட்டுத்திக்கிலுமுள்ள கலைச் செல்வங்களைக் கொண்டுவந்து நம் தமிழ்மொழியிற் பெயர்த்து அதன்மூலம் நம் தமிழன்னை வீற்றிருக்கும் கலைக் கோயிலைப் புனருத்தாரணம் செய்யும் நற்பணியில் ஈடுபட்டிருப்பவர்களே நம் தமிழினத்து மொழிபெயர்ப்பாளர்கள்: அவர்கள் ஆக்கக் கலைஞர்கள்.

மொழிபெயர்ப்பு ஒரு தனிக்கலை; பரந்துவிரிந்த உலகத்தை ஒன்றுசேர்த்து ''ஒன்றே தெய்வம், ஒன்றே உலகம், ஒன்றே குலம்'' என்ற கொள்கையை நிலை நாட்டி, மொழிவேற்றுமை, இடவேற்றுமை, இனவேற்றுமை ஆகியனவற்றை மறைத்து அவ்வேற்றுமைக்குள் ஒற்றுமை காணும் மக்கட் சமுதாயத்தை ஆக்குவது மொழிபெயர்ப்புக் கலை.

மொழி என்றால் என்ன? ஒருவர் தமது உணர்ச்சியினால் விளையும் கருத்தை வெளிதுறந்து கூறுதற்குச் சாதனமாகவுள்ள கருவியே மொழி: எனவே, மொழிபெயர்ப்பென்பது தன்னினத்தைச் சேராத இன்னொருவரின் கருத்தைத் தன்னவரின் மொழியில் எடுத்துக் காட்டும் வழியாகும். மொழிபிறப்பதற்குக் காரணம் உணர்ச்சி, உலக சிருட்டிகாலம் தொடக்கம் மக்கள் பல்வேறாகப் பிரிந்து, பல்வேறு இடங்களில் வசித்து, பல்வேறு மொழிகளைப் பேசி வந்திருக்கிறார்கள். அவர்கள் உணவு, உடை, நடை, பாவனை, பேசும் மொழி, அனுட்டிக்கும் மதம் என்னும் இன்னோரன்னவற்றில் பேதமுடையவர்களாகவே இன்றுபோல அன்றும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் இவ்வாறாகப் பேதப்பட்டிருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் பொதுவான ஒன்று இருக்கத்தான் செய்தது, செய்கிறது. அதுதான் உணர்ச்சி. வட அமெரிக்கப் பனி வலையத்தில் உறையும் எசிக்குமோவனுக்கும் அதிவெப்ப ஆபிரிக்க கண்டத்து நீகிரோவனுக்கும் உணர்ச்சி ஒன்றுதான். தமிழனும் சிங்களவனும், இசிலாமியனும் யூதனும், ஆங்கிலேயனும் எகிப்தியனும், அமெரிக்கனும் உருசியனும் உணர்ச்சி என்பதனால் தூண்டப்பட்டே கருமம் ஆற்றி வருகிறார்கள். காதல் என்பதும் காமம் என்பதும் ஒரு தேசிய இனத்தாருக்கு மாத்திரம் உரியனவல்ல. தமிழன் எனக் கருதப்படும் இராவணன் ஆரிய இராமன் மனைவி சீதையைக் கண்டு காதல்கொண்டு அவளை அபகரித்தான்; அதன்பயனாக இராம—இராவண யுத்தம் நிகழ்ந்தது. கிரேக்கனாகிய அகமெம்னன் என்பவனின் மனைவி எலனை திராய் இளவரசன் பரிசு கண்டு, காதல்கொண்டு



அவளைக் கடத்தினான். அதன்காரணமாக திராய் இராச்சியத்தினருக்கும் கிரேக்கருக்குமிடையே பயங்கரமான யுத்தம் ஒன்று மூண்டது. இராம—இராவண—சீதை வரலாற்றினை அறிவிக்க இராமாயணம் பிறந்தது. அகமெம்னன் — பரிசு — எலன் வரலாற்றை அறிவிக்க கிரேக்க மொழியில் இலியத்து என்ற காவியம் பிறந்தது.

உணர்ச்சி என்பது மக்கள் அனைவருக்கும் பொதுவாகவே இருக்கிறது. உணர்ச்சியால் உந்தப்பட்டே மொழியும் செயலும் பிறக்கின்றன; பசி உணர்ச்சியாலேதான் பிள்ளை ''பசிக்கிறது'' என்று வாய்விட்டழுகிறது. இயற்கை எழிலில் ஏற்படும் இன்ப உணர்ச்சியாலேதான் கவிஞன், இயற்கை அன்னையை ஏத்திப் புகழ்ந்து பாடுகிறான். பக்தி உணர்ச்சியாலேதான், உலகில் தோன்றிய சமயப்பெரியார் என்றுமழியாத் திருப்பாடல்களையும் அருள்மொழிகளையும் தத்தம் மக்களுக்கேற்றவாறு தத்தம் மொழிகளில் திருவாய் மலர்ந்திருக்கிறார்கள். மனிதன் உலகிலே எங்கு வாழ்ந்தாலும் வீரம், சோகம், காதல், பக்தி, கோபம் முதலாம் உணர்ச்சிகளினால் உந்தப்பட்டு, மொழி என்பதன்மூலம் அவ்வுணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறான்.

தன்னுடைய உணர்ச்சியைப் பிறருக்கும் அறிவிக்க வேண்டுமென்னும் ஒரு தூண்டுதல் மனிதனுக்கு இயல்பாகவே அமைந்திருக்கிறது. ''யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமே'' என்று கூறிய தமிழ்ப் பெரியார் இயற்கைத் தூண்டுதலையே சொல்லுருவில் எடுத்துக் காட்டுகிறார். தனிமனிதன் தன்னுடைய அனுபவத்தை-இன்ப துன்ப உணர்ச்சிகளை—தான் அறிந்த புதுமைகளை—தன் வேட்கைகளை—இலட்சியங்களையெல்லாம் தன் உள்ளத்திற் பட்டதுபோலவே மற்ற மக்களின் உள்ளங்களிலும் படவேண்டுமென்று விழைகிறான். இந்த விழைவை நிறைவேற்ற மொழி என்னும் சிறந்த கருவியை ஆதி மனித சமுகம் கண்டது. நாகரிகம் வளர மொழியும் செம்மையும் நுண்மையும் தெளிவும் விளக்கமும் எய்துகிறது. மக்களின் உணர்ச்சி வளத்துக்கேற்ப மொழி வளமும் அமையும். நுட்பமான உணர்ச்சிகள், புதிய

கருத்துக்கள் முதலியன மனித சமூகத்தில் இடம்பெற அவற்றை விளக்குதற்கு மொழியில் சொற்களும் சொற்றொடர்களும் தோன்றும். இவற்றை உலகமெங்கணும் பரப்பி உலக மக்களின் அறிவை வளர்க்க உதவி செய்பவர்கள் மொழிபெயர்ப்பாளர்கள்.



## 2. மொழிபெயர்ப்பில் உணர்ச்சிப்பெருக்கு

மொழிபெயர்ப்புக்கு மிக மிக இன்றியமையாதது உணர்ச்சி. ஒரு கிரந்தத்தினை ஆக்குவதில் அதன் மூல கர்த்தா எத்தகைய உணர்ச்சிகளைக்கொண்டிருந்தாரோ அத்தகைய உணர்ச்சிகளை மொழிபெயர்ப்பாளரும் கொண்டு தம் பணியில் ஈடுபடுவரானால் அவரின் மொழி பெயர்ப்பு "பொன்மலர் நாற்றமுடைத்து" எனப் பொலியும். மொழிபெயர்ப்பில் ஈடுபடுபவர் தாம் ஒரு மொழிபெயர்ப்பாளர் என்பதனை முற்றாக மறந்து தாமே மூல கிரந்தத்தின் கருத்தாவாகவும், அதனை இன்னொரு மொழியில் திருப்பி எழுதுவதாகவும் தம்மை அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். உதாரணத்துக்கு வேதாந்த கேசரி சுவாமி விவேகானந்தரின் பின்வரும் அருள் மொழியை எடுத்துக்கொள்ளுவோம்.

> Awake, Arise and stop not
> Until the goal is reached.

இது விவேகானந்தர்ப் பெருந்தகை பரதகண்டத்து இந்து மக்களைத் தட்டியெழுப்பச்செய்த சங்கநாதம்; ஆங்கிலத்தில் அதனை வாசிக்கும்போதும், கேட்கும்போதும் ஒரு உத்வேக உணர்ச்சி ஒவ்வொரு இந்துவின் உள்ளத்திலும் தன்னையறியாமல் ஏற்படும். இந்த அருள்மொழியைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது ஆங்கிலத்தில் இருக்கும் உத்வேக உணர்ச்சி பிரதிபலிக்க வேண்டும்;

> "எழுங்கள், விழியுங்கள், இலட்சியம் அடையப்படும்
> வரையில் நில்லாதிருங்கள்"

என்று சுவாமிகளின் வாக்கியத்துக்கு மொழி பெயர்ப்புச் செய்தால் அந்த மொழிபெயர்ப்பு பிழை என்று கூறமுடியாது. ஆனால் அது வெறும் சொற்றொடராய் இருக்குமேயன்றி வேதாந்த கேசரியின் வீர கர்ச்சனையாக இருக்க மாட்டாது. அதில் உணர்ச்சிபாவம் இல்லை, உணர்ச்சிப் பெருக்கு இல்லை; அதே வாக்கியத்தைப் பின்வருமாறு மொழிபெயர்ப்பின் நிலைமை எவ்வளவுக்கு வித்தியாசமாகும் என்பதனை நோக்கவும்:

''எழுமின், விழிமின், கருதிய கருமம் கைகூடும்வரை சலியா துழைமின்''

இந்த மொழிபெயர்ப்பில் சுவாமி விவேகானந்தர் அவர்களின் உத்வேக உணர்ச்சி அப்படியே ததும்பி வழிவதை நாம் அவதானிக்கலாம்.

உணர்ச்சி வயத்தாற் பிறக்கும் கருத்துக்களையும் நிகழும் சம்பவங்களையும் மொழிவாயிலாகப் புலப்படுத்தப் பிறந்துள்ளவையே நூல்கள். அந்நூல்களிற் பொதிந்துள்ள கருத்துக்களும் போதனைகளும் காட்டப்பட்டுள்ள சம்பவங்களும் அவை அவை பிறந்த இடத்துடன் நிற்பதில்லை. அவை பழைய காலந்தொடக்கம் உலகத்தின் பல்வேறு பாகங்களிலும் செறிந்திருக்கின்றன. அப்படி அவற்றைச் செறியச் செய்தவர்கள், செய்பவர்கள் மொழிபெயர்ப்பாளர். பிறமொழிக் காவியங்களைத் தம் தாய்மொழியிற் பெயர்த்துத் தம்மவரின் கலைவளத்தைப் பெருக்கிய அக்காலத்தறிஞருக்கு ''மொழிபெயர்ப்பாளர்'' என்ற ஒரு தனிப்பெயர் வழங்கப்படாவிடத்தும் அவர்கள் மொழிபெயர்ப்பாளர்கள்தான். வடமொழியில் உள்ள எத்தனையோ அரிய கிரந்தங்களை எமது தமிழறிஞர் எமக்கு எம்மொழியில் ஆக்கித் தந்திருக்கிறார்கள். கம்பஇராமாயணம், வில்லி பாரதம் என்னும் இன்னோரன்னவற்றுக்கு முதல் நூல்கள் வடநூல்களன்றோ? கம்பரும், வில்லி புத்தூரரும் ஏனைய தமிழறிஞரும் இன்று மலிந்திருக்கும் நூன முறை மொழிபெயர்ப்புக்களைச் செய்யாது, மூல காவியங்களின் உண்மைக் கருத்துக்களை உணர்ந்து, அந்த உணர்ச்சியில் திளைத்து, அவை வருணித்த காட்சிகளை — மலைகளையும் நீர்நிலைகளையும், மயில்களையும் குயில்களையும், இயற்கையழகினையும் செயற்கைக் குறையினையும், மக்கள் வீரத்தையும் மாதர் கற்



பையும், அறத்தின் மாண்பையும் மறத்தின் வீழ்ச்சியையும் — தம் மனக்கண்ணாற் கண்டு, தம்மக்களுக்கான மரபிற் காவியங்களாக வெளியிட்டார்கள்*— அவர்களுடைய ஒவ்வொரு காவியத்திலும் உணர்ச்சி பாவத்துக்கே முதலிடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

கலையின் முக்கியமான அம்சம் களை. ஒரு ஓவியத்துக்குச் சிறப்பூட்டுவது ஓவியனின் துணியும் தீட்டு வர்ணங்களுமல்ல. ஓவியன் தன்னுடைய கலையில் இலயித்து, அதில் தன்னுடைய உணர்ச்சி முழுவதையும் செலுத்தி அதனைப் பூர்த்திசெய்வானேயானால் அது களை — சீவகளை — கொண்டு பொலியும். இதுபோலவே மொழிபெயர்ப்புக் கருமத்திலும், மொழிபெயர்ப்பிற் சீவகளை பொலிய வேண்டும். மூலக் கிரந்தகர்த்தாவின் உணர்ச்சி பொங்கித் ததும்பவேண்டும். உணர்ச்சிபாவமற்ற கலை உலகிலே இல்லை. அப்படியாக ஒன்று இருக்கிறது என்று யாரும் கூறினால் அவர்கள் கருதுவது கலையல்ல.

மொழிபெயர்ப்புத்துறையில் ஈடுபடுவோர், தமது கலைப்பணியில் உணர்ச்சிக்கு முதலிடம் அளித்தல் வேண்டும். மொழிபெயர்ப்பாசிரியரின் மனம், உயிர், ஆத்மா எல்லாம் சுதந்திரமாய் அவருடைய கலைவழியாகப் பிரகாசிக்கவேண்டும். அவருடைய ஒவ்வொரு எழுத்திலும் மூலகர்த்தாவின் கலைவன்மையும், கற்பனா சக்தியும் விளங்கவேண்டும். ஒவ்வொரு வார்த்தையின் மூலமாகவும் வாசகருக்கு மூலவாசிரியரின் ஆத்ம சமர்ப்பணம் தெரிதல்வேண்டும்.

*தமிழில் எழுந்த இராமாயணமும் பாரதமும் வடமொழி முதல் நூல்களை அடியொற்றி மொழிபெயர்க்கப்பட்ட நூல்களல்ல. வடமொழி மூலத்துக் கதைகளை அடிப்படையாகக்கொண்டு தமிழர் மரபுக்கொவ்வாத நிகழ்ச்சிகளை மாற்றியும் திரித்தும் தமிழ் மரபுபோற்றி எழுதியுள்ளார் கம்பர். வடமொழிநூலே முதனூலெனக் கம்பர் பாயிரத்திற் கூறுகின்றார். எனினும் தமது நூலும் முதனூல்போல விருக்கத்தக்கதாகக் கம்பர் வடமொழி முதனூலுக்கு அடிமையாகாது சுதந்திரமனப்பான்மையோடு செய்துள்ளார். வில்லிபுத்தூரர் வட

சுவாமி விவேகானந்தர் அருளிச்செய்த THE SONG OF THE SANNYASIN என்ற கவிக் கொத்திலிருந்து சில கவிகளும் அவற்றுக்கான தமிழ் மொழிபெயர்ப்பும் கீழேதரப்படுகின்றன. மூலவாசிரியரின் கருத்தையும் உணர்ச்சியையும் ஒரு மொழிபெயர்ப்பு எவ்வாறு பிரதிபலித்துக்காட்டவேண்டும் என்பதற்கு ''சிந்திக்கத் தீரம் செறிக்கும் மனத்தவிசில் வந்திக்க ஞான மகிழ் பெருக்கும் பந்திக்கும் பேத மலந்தேய்க்கும்'' இக்கவிகளின் மொழிபெயர்ப்பு சிறந்த ஒரு எடுத்துக்காட்டாகும்.

---

மொழிக் காவியத்தை அடியொற்றிப் பாரதக்கதையைக் கூறினாரெனினும், கிளைக்கதைகளையும் பிறவருணனைகளையும் சுருக்கி எழுதியுள்ளார். கம்பர் வில்லி இருவருக்குமிடையில் பெரிதும் வேறுபாடு உண்டு. கம்பர் இராம கதையில் பாத்திரங்களைத் தமிழ் மரபுக்கு ஏற்ப—முதனூலாசிரியரினின்று மாறுபட்டுத் தானும் — சித்திரித்திருக்கிறார். ஆனால் வில்லி முதல்நூலில் உள்ளவாறே வரலாறுகளைக் கூறுகின்றார். தமிழர் ஒழுக்கம், தமிழர் பண்பு முதலியவற்றைக் கம்பர் காத்ததுபோல வில்லி காக்க முற்படவில்லை. வடமொழி முதல்நூல் கூறிய கதையை அவ்வாறே தமது மொழிபெயர்ப்பிலும் கூறுகின்றார்.

உ ம்: இராமாயணம் (1) இராமரும் சீதையும் கண் கலந்து காதல்கொண்டது.
(2) இராவணன் சீதையைத் தீண்டாது கடத்திச்சென்றது.

இவை முதல்நூலில் இல்லை: வால்மீகி இராமாயணம் இராவணன் சீதையை மார்போடு அணைத்து எடுத்துச்சென்றான் எனக்கூறும். இது தமிழர் பண்புக்கு இழுக்கென உணர்ந்தே கம்பர் கதையைத் திரித்து எழுதினார். இன்னோரன்ன பல இடங்களில் கம்பர் முதல் நூலாசிரியர் கருத்துக்கு மாறுபட்டுத் தமிழ் மக்கள் பண்பாட்டுக்கிணங்க எழுதியுள்ளார். ஆனால் வில்லி அவ்வாறு செய்யவில்லை. திரௌபதி ஐந்து கணவன்மாருக்கு மனைவியானதுமன்றிக் கர்ணனையும் கணவனாகப்பெற விரும்பியதை வில்லி முதல் நூல் கூறியவாறே கூறுகின்றார்.



## THE SONG OF THE SANNYASIN

Wake up the note! the song that had its birth
Far off, where worldly taint could never reach,
In mountain caves, and glades of forest deep;
Whose calm no sigh for lust or wealth or fame
Could ever dare to break; where rolled the stream
Of knowledge, truth and bliss that follows both.
Sing high that note, Sannyasin bold! Say—

"Om tat sat Om!"

மனவலி படைத்த மாசிலாத் துறவீ,
சுவைமலி இன்பச் சுரந்தனை எழுப்புதி;
மகிதலக் கறைஉரு வெகுதொலைக் கப்பால்
புலப்பகை வெறுக்கை புகழிவை அமைதியைக்
கலைப்பதற்கென்றும் தலைப்படாத் தலத்தை
அறிவுமெய் என்னும் அருவிகளுடனே
பரமானந்தத் திருமா நதிபாய்
வெற்புறு குகையைப் பொற்புறு வனத்தை
பிறப்பிட மாக்கொடு சிறப்புமிக் கார்ந்தே —
எழுங்கீ தந்தை முழங்குக நன்கு
ஓதுக நீ "ஓம் தத் சத் ஓம்" என.

★

"Who sows must reap", they say, and ,Cause must bring
The sure effect; good, good, bad, bad; and none
Escape the law. But whosoever wears a form
Must wear the chain". Too true; but far beyond
Both name and form is Atman ever free
Know thou art That, Sannyasin, bold! Say

Om tat sat Om

அஞ்சுதல் அறியா நெஞ்சநற் றுறவீ
எவன் விதைப்பவனே அவன் அறுப்பவனே
காரணம் உளவேல் காரியமும் உள.
நன்மை விதைத்தவன் நன்மை அறுப்பான்
தீமை விதைத்தவன் தீமை அறுப்பன். இவ்
விதியினின்றும் விலக்காவர் இலர்.
உருப்பெற்றோர்க்கெலாம் உறுதலை உண்டெனப்
புகல்வர்-இதனிற் பொய்யிலை ஆயினும்
நாமரூபம் ஆம் இவற்றப்பால்
என்றும் தடையற நின்றுள தான்மா
அதுதான் நீயென் றறியக் கடவை
ஓதுக நீ "ஓம் தத் சத் ஓம்" என.

★

They know no truth who dream such vacant dreams
As father, mother, children, wife and friend.
The sexless Self; whose father He? Whose child?
Whose friend, whose foe is He who is but one?
The Self is all in all, none else exists;
And thou art that, Sannyasin bold, say
"Om tat sat Om"

ஒன்றினும் திரியா உளம் உடைத் துறவி
பெற்றோர் மக்கள் உற்றோர் பெண்டிர்
இத்தகை யாவும் மித்தையே என்னக்
காணுதார்மெய் காணுதாரே
ஆண்பெண் இல்லா ஆன்மாவானது
எவர்க்கே தந்தை எவர்க்கே மைந்தன்?
எவர்க்கே பகையது? எவர்க்கே உறவது?
யாவற்றுள்ளும், யாவுமாய் அவ்
வொன்றே யுளதஃ தன்றிமற் றிலையால்
அதுதான் நீ என்றறியக் கடவை
ஓதுக நீ "ஓம் தத் சத் ஓம்" என.

★



Truth never comes where lust and fame and greed
Of gain reside. No man who thinks of woman
As his wife can ever perfect be;
Nor he who owns the best of things, nor he
Whom anger chains can ever pass through Maya's gates
So, give these up, Sannyasin bold, say
"Om tat sat Om"

தயிரியம் மிகுந்த செயிரறு துறவி,
காமம் புகழ்பொருள் தாமுள இடத்து
வாய்மை எந்நாளும் வரமாட்டாது.
மாதரை மனைவியாய் மதிப்பவன் எவனும்
பூரணத்துவம் உறக்காரணமேயிலை
தினையளவேனும் தனதெனக்கொள்வோன்
சினமெனும் தளையிற் சிக்குவோன் இவர்கள்
மாயை என்னும் வாயிற் கடவார்
ஆதலின் இவற்றை அறவொழித்திடுக
ஓதுக நீ "ஓம் தத் சத் ஓம்" என.

★

*தாயுமானவர் பாடல்கள் இரண்டும் அவற்றுக்குரிய ஆங்கில மொழிபெயர்ப்பும்* கீழே தரப்படுகின்றன; அவற்றையும் நோக்குக:*

கல்லேனும் ஐயவொரு காலத்தில் உருகுமென்
கல்நெஞ்சம் உருகவிலையே
கருணைக் கிணங்காதவன்மையையும் நான்முகன்
கற்பிக்க வொரு கடவுளோ
வல்லான்வகுத்ததே வாய்க்காலெனும் பெரு
வழக்குக் கிழுக்குமுண்டோ
வானமாய் நின்றின்ப மழையாய் இறங்கி எனை
வாழ்விப்ப துன்பரங்காண்

---

* By Donald Kanagaratnam

பொல்லாத சேயென்னில் தாய்தள்ளல் நீதமோ
புகலிடம் பிறிதுமுண்டோ
பொய்வார்த்தை சொல்லிலோ திருவருட்கயலுமாய்ப்
புன்மையேனாவனந்தோ
சொல்லால் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச்
சும்மா இருக்க அருளாய்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே.

Even a wayside stone may sometimes soften
After heavy rain, but alas! my heart hath
harder grown
Brahma, O mighty one, hast Thou no power
To convert this sinful soul that seeks
not to atone?
What Thou decreest is law, why need I argue
more?
Then, Lord, send thy rain on my heart so hard
and sore
That I might prepare the ground for thy grace
to grow.
Thou art my mother, canst Thou cast
away Thy naughty son,
Who hast but Thee and Thy loving care alone?
If I speak not truth, O Lord, I would
soon become
Heirless of grace sunk in the depths of
sins ever to groan
In words there is no profit, teach me to sit still,
My God, my all, my eternal light
ever to do Thy will.

★



கல்லாதபேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றும் அறிவில்லாத என்
கர்மத்தையென்சொல்வேன் மதியையென்சொல்லுவேன்
கைவல்ய ஞானநீதி
நல்லோருரைக்கிலோ கர்மமுக்கியமென்று
நாட்டுவேன் கர்மமொருவன்
நாட்டினாலோ பழைய ஞான முக்கியமென்று
நவிலுவேன் வடமொழியிலே
வல்லானொருத்தன் வரவுந்த்ராவிடத்திலே
வந்ததாவிவகரிப்பேன்
வல்ல தமிழறிஞர்வரின் அங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிதுபுகல்வேன்
வெல்லாமலெவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தை யென்முத்திதருமோ
வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே.

The unlearned ones, they are the really good,
The ignorance of all my learning, my sole pride,
My senseless actions, how well shall I describe?
Wisdom of god is man's concern when some affirm.
I say good actions alone to salvation lead,
This when some ponder deep and discern
I would recommend to them the former creed
At discussions when a scholar in Sanskrit I meet.
To whom I would quote a Tamil verse or two
When arguments with Tamil Scholars ensue
I would then with Sanskrit slogans greet.
O Lord, who art beyond dissensions all still
Will hypocrisy ever lead me to attain Thy will?

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையின் "ஆசிய சோதி" "உமார்கய்யாம் பாடல்கள்" என்பன ஆங்கில மூலத்தின் மொழிபெயர்ப்புக்கள்; எட்வின் ஆணல்டு (Edwin Arnold) என்பவர் எழுதிய "LIGHT OF ASIA" என்ற நூலைப் பலமுறை கற்று அந்நூலின் அழகையும் புத்தபெருமானது உள்ளப்பண்பையும் நன்கு உணர்ந்து அதன்பயனாகப்பாடிய கவிதைகளே ஆசிய சோதி என்ற நூலில் வெளிவந்துள்ளன. ஆங்கில மூலத்தை வைத்துக் கொண்டு அதனையே தாம் தமிழில் புதிய உருவில்தருவ தாக எண்ணி கவிமணி இயற்றிய கவிதைகள் அவை; ஆனபடியால் அவை முதல்நூல்போலச் சுவையும் அழகும்பெற்று விளங்குகின்றன.

உமார்கய்யாம் என்னும் பாரசீகப் புலவரின் பாடல் களை எட்வேடு பிற்செரல்டு (Edward Fitzgerald) என்னும் ஆங்கிலப் புலவர் ஆங்கிலத்தில் கவிதையாக்கித்தந்திருக் கிறார். ஆங்கிலம் வாயிலாக உமாரின் உள்ளத்தை உணர்ந்த கவிமணி அவற்றைத் தமிழில் தந்துள்ளார்; அவையே உமார்கய்யாம் பாடல்கள். உமார் தமிழ் மொழியில் தமது கருத்துக்களைக்கூறியிருந்தால் எவ்வாறு தெரிவித்திருப்பார் என்பதை நன்கு சிந்தித்துக் கவிமணி அவர்கள் உமாரோடு இரண்டறக்கலந்து தமிழில் பாடு கின்றார். ஒரு உதாரணம் தருகின்றேன்.

Here with a loaf of bread beneath the bough
A flask of wine, a book of verse—and Thou
Beside me singing in the wilderness—
And wilderness is Paradise enow.

என்பது ஆங்கிலமூலம். கவிமணியின் மொழி பெயர்ப்பைப் பாருங்கள்:-

"வெய்யிற்கேற்ற நிழலுண்டு
வீசுந்தென்றற் காற்றுண்டு
கையிற் கம்பன் கவியுண்டு
கலசம்நிறைய மதுவுண்டு



தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுண்டு
வையந்தரு மிவ்வனமன்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ?"

உமார் தாம் தமிழ்நாட்டில் புலவராகத் தோன்றித் தமிழ்ச் சூழ்நிலையில் இயற்றிய செய்யுள் என்று சொல் லக்கூடியதாகவன்றோ மேலே சொல்லிய கவி விளங்கு கின்றது? சொல்லுக்குச்சொல் வரிக்குவரி மொழி பெயர்ப்பு எல்லாவிடத்தும் பொருந்தாது. புலவனின் உள்ளத்தை உணர்ந்து—அவனுடைய உள்ளத்திற்குடி புகுந்து—தானே அவனாக மாறி – பாடியவிடத்திற்றான் மொழிபெயர்ப்பில் உயிர்ப்பண்பு பொலிந்து விளங்கும்: ஆங்கிலத்தில் A Book of Verse என்றிருப்பதை "ஒரு கவிதை நூல்" என மொழிபெயர்க்காது 'கம்பன் கவி' எனக் கூறியிருப்பதில் உள்ள அழகு சொற்களால் எடுத் துக் கூறமுடியாததொன்று. தமிழ் உள்ளம் அதனை உணர்ந்து சுவைக்கும்.

இந்த இடத்தில் அறிஞர் திரு. S. வையாபுரிப் பிள்ளை அவர்கள் எழுதிய ஒரு பகுதியை எடுத்துத்தரு தல் பொருத்தமுடைத்தாகும்: அது வருமாறு:—

"இங்கே ஒரு கேள்வி இயல்பாக எழக்கூடும். உமார் கய்யாம் இயற்றிய ருபாய்யாத் பாடல்களை எட் வர்ட் பிற்ஜெரல்ட் செய்துள்ள மொழிபெயர்ப் பினைத் தமிழ் மொழியில் மொழிபெயர்த்துச் செய்த கவிதைகள்தானே இவைகள்? இவற்றில் இந்தியப் பண்பாடு விளங்குகின்றது என்றால் எப்படிப் பொருந்தும்? இப்பாடற்கருத்துக்கள் கவிமணியின் கருத்துக்கள் என்று கூறமுடியாதல்லவா? இவ்வாறு சிலர் கேட்கலாம். கவிமணி இயற்றியது பெயரள வில் மொழிபெயர்ப்பேயன்றி உண்மையில் அங் ஙனம் அமைந்தது அல்ல. உதாரணமாக "வெய்யிற் கேற்ற நிழலுண்டு" என்று மேலே காட்டியதனைக் கூறலாம். அச்செய்யுள் ஆங்கிலமூலத்தின் நேரான

மொழிபெயர்ப்பன்று. ஆனால் அதன் கருத்து தமிழ் மக்களுக்கு ஏற்றமுறையில் மாற்றப்பட்டுள்ளது. தமிழ்ச் செய்யுளுக்கு ஏற்றபடியாகவும் அக்கருத்தோடு ஒத்த பிறகருத்துக்களும் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே இச்செய்யுள் ஆங்கிலமூலத்தின் கருத்தினைப் பொதுவே எடுத்துக்கொண்டு தமிழ்ச் சூழலுக்கு ஏற்றமுறையில் தமிழ் மக்கள் அனுபவிக்கும்முறையில் வேண்டும் மாற்றங்கள் செய்து அழகுற அமைக்கப்பெற்றனவாம். இங்ஙனமே பிற்ஜெரல்டும் தாம் எடுத்துக்கொண்ட பாரசீகச் செய்யுளை ஆங்கில மக்கள் அனுபவத்திற்குத்தக்கபடி வேறுபாடுகள் செய்து ஒரு நூதன சிருஷ்டியாக அமைத்திருக்கிறார். மொழிபெயர்க்க எடுத்துக்கொண்ட ஒவ்வொரு செய்யுளிலும் கவிமணியின் ஆன்மா பிரவேசித்துநின்று செய்யுட்கருத்தின் வடிவினைத்தானே மேற்கொண்டு புதிய சிருஷ்டியாகத்தோன்றியுள்ளது என்பதே உண்மை: உமார் கய்யாம் பாடல்களேயன்றி இவர் மொழிபெயர்த்த பிற செய்யுள்களும் இங்ஙனமே அமைந்தனவாகும்; இச்செய்யுள்களில் மொழிபெயர்ப்பு என்ற உணர்ச்சியே உண்டாவதில்லை. நமது நாட்டிலே நமது தாய்மொழி விருட்சத்திலே இயற்கையாக காய்த்து விளைந்து சுவைபடக்கனிந்த கனிகள் என்றுசொல்லத்தக்கனவாகவேயுள்ளன. ஆகவே பிற்ஜெரால்ட் செய்தது ஆங்கில மக்களுக்கு ஒரு நூதன சிருஷ்டியாய் இருப்பதுபோலவே, கவிமணி அதனைத்தழுவி இயற்றியதும் ஒரு நூதன சிருஷ்டியேயாம்.........''*

*தமிழ்ச் சுடர்மணிகள் பக்கம் 395—396



இனி, உணர்ச்சிபொங்கும் ஒரு வசனக்கொத்தும் அதன் தமிழாக்கமும் கீழே தரப்படுகின்றன; அவற்றையும் நோக்குக:

"This autocrat under the cloak of a weeping and wailing democrat has been deceiving our people for well nigh two years. This agent of a foreign power - this stooge of alien imperialist masters - has brought nothing to our fatherland but material proverty, moral anarchy, bloodshed of the innocent, waste of government property, suffocation of the press and violation of the constitution. The suffering of the masses, the backbone of the country, called for vigorous and fearless action on the part of those patriotic citizens who, though hunted down by the hireling terrorists of the tyrant, held aloft the torch of freedom on the hill-tops and in the dales unruffled by the monstrous storm of tyranny."

''சனநாயகப் பசுத்தோலுக்குட்புகுந்து அழுகள்ளன் தொழுகள்ளன் விழுகள்ளனாகவிருந்த இந்த யதேச்சாதிகாரப்புலி எமது மக்களை ஏறக்குறைய இரண்டாண்டு காலமாக ஏமாற்றிவந்திருக்கிறான்; ஒரு அந்நிய வல்லரசின் கைக்கூலியாகும் இவன்- பரதேசி ஏகாதிபத்திய ஆண்டைகளுக்கு அடிவருடிப் பிழைக்கும் இவன்—எம் பிதுர் நாட்டுக்குச் செய்திருக்கும் நன்மைகள் தாம் யாவை? செல்வச் சிதைவு, ஆன்ம ஒழுக்கத்தில் ஏக குழப்பம், குற்றமொன்றறியா மக்களின் குருதி வெள்ளம், அரசாங்கச் சொத்து அவமே விரயம், பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு, அரசமைப்பில் அடம் இவைதான் இவன் ஆட்சிப் பரிசுகள்: நாட்டின் முதுகெலும்

பாம் மக்களது மகாதுயரைப்போக்க தேசபக்தர்கள் அச்சமின்றி ஆண்மையுடன் சலியாதுழைக்கவேண்டியதாயிற்று. இத்தேச பக்தர்களைக் கொடுங்கோலனின் கிங்கிரக்கூலிப்படைகள் தேசமெங்கும் தீவிரமாக வேட்டையாடித் திரிந்தபோதிலும் அவர்கள் மலைகள் மீதும் பள்ளத்தாக்குகளிலும் இதந்தரமின்னும் சுதந்திர வர்த்தியை, கொடுங்கோன்மையென்னும் பைசாசச் சூறுவளியைப் பொருட்படுத்தாது அச்சூறுவளியின் தாக்குதலினின்றும் அதனைக்காத்து அதன் ஒளி எங்கும் வீச மங்கலமாக உயர்த்தி வீரத்துடன் தாங்கிநின்றனர்."



# 3. கிறீத்துவப் பாதிரிமார் காட்டியவழி

மொழிபெயர்ப்பாளர் தாம் ஒரு நூலினை அல்லது ஒரு வியாசத்தை அல்லது ஒரு கட்டுரையை அல்லது ஒரு சட்டத்தொகுப்பை மொழிபெயர்க்கத் தொடங்குமுன் அதனை ஒன்றுக்குப் பலமுறை வாசித்து தாம் எடுத்துக் கொள்ளும் வசனத்தின் கருத்தை நன்கு கிரகித்துக் கொள்ளுதல்வேண்டும். இதற்கு அந்த மொழியை ஐயந்திரிபற விளங்கிக்கொள்ளும் திறமைவேண்டும்; அம்மொழியில் உள்ள சொற்கள், சிறப்புச்சொற்கள், சொற்றொடர்கள், மரபுச் சொற்றொடர்கள், அணிகள், இலக்கண மரபு, வாக்கியவமைப்பு முதலியனவற்றை நன்கு பயின்றிருத்தல்வேண்டும். அதன் பின்னர், தாம் எந்த மொழியில் பெயர்க்கப்போகிறாரோ அந்த மொழியின் மரபுக் கிணங்கப் பெயர்த்தல்வேண்டும். மரபு அல்லது வழக்கு என்றால் என்ன?

"வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட்டாகலான்" என்றும்
"செய்யுள் மருங்கிலும் வழக்கியல் மருங்கினும்
மெய்ப்பெறக் கிளந்த கிளவியெல்லாம்
பல்வேறு செய்தியின் நூனெறி பிழையாது
சொல்வரைந்தறியப் பிரித்தனர் காட்டல்" என்றும்
"செய்யுள் மருங்கின் மெய்ப்பெற நாடி
இழைத்த இலக்கணம் பிழைந்தனபோல
வருவ உளவென்னும் வந்தவற்றியலான்
திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே"

என்றும் தொல்காப்பியர் கூறிய மரபுநெறியைத்தழுவி மொழிபெயர்ப்பில் ஈடுபடுதல்வேண்டும்.

ஒரு வேற்று மொழிக் கிரந்தத்தை—அது கத்தியமாயினுமாக, பத்தியமாயினுமாக— மொழிபெயர்ப்பாளர் எந்த மக்களின் நன்மையின் பொருட்டும் உபயோகத்தின் பொருட்டும் பெயர்க்கின்றாரோ அம்மக்களின் மொழி மரபுக்கிணங்கவும் அவர்களின் பண்பாடு அல்லது

சால்புக்கிணங்கவும் அது இருக்கத்தக்கதாக அவர் அதனை ஆக்குதல்வேண்டும்; இதில் விவிலிய வேதம் மொழிபெயர்ப்பாளருக்குத் தக்க ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது. உலகின்கண் உள்ள நூல்களிலே விவிலிய நூலைப் போல உலக மொழிகள் அனைத்திலும் அழகாகப் பெயர்க்கப்பட்டுள்ள நூல் பிறிதொன்றில்லையெனலாம். அந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்த பழைய கிறீத்துவப் பாதிரிமாரும் குருமாரும் தமிழறிஞரும் ஒரு உயிரற்ற மொழிபெயர்ப்பைச் செய்யவில்லை. பழைய எபிரேய விவிலியத்தில், கிரேக்க விவிலியத்தில், லத்தீன் விவிலியத்தில் எந்த எந்த இனிமைகள் உண்டோ அந்த அந்த இனிமைகளையெல்லாம் தமிழில் தமிழ் மரபு பிறழாது அப்படியே அள்ளித்தந்திருக்கிறார்கள் கிறீத்துவ சமயத்தின் தத்துவமும் இலகுவில் விளங்கத்தக்கதாக அவர்கள் தம் மொழிபெயர்ப்பைச் செய்திருக்கிறார்கள். தமிழ் மரபைக் கைவிடாது எபிரேய, உரோம யூதப் பெயர்ச்சொற்களை அவர்கள் என்ன அழகாகத் தமிழாக்கஞ் செய்திருக்கிறார்கள் என்பதற்குச் சில உதாரணங்கள் கீழே காட்டுதும்:

| | | |
|---|---|---|
| Jew | — | யூதன் |
| Hebrew | — | எபிரேயன் |
| Pharisees | — | பரிசேயர் |
| Israel | — | இசிரவேல் |
| John | — | யோவான் |
| Mathew | — | மத்தேயு |
| Apostle | — | அப்போசுத்தலர் |
| Jesus | — | யேசு |
| Mary | — | மரியநாயகி, மரியாள் |
| Jehova | — | யெகோவா |
| Anne | — | அன்னம்மாள் |
| Joseph | — | சூசையப்பர் |
| Jacob | — | யாக்கோபு |

இந்தச் சிறப்பான ஒரு முறையை தமிழ்க் கத்தோலிக்க திருச்சபை இன்றும் கைக்கொண்டுவருவது



ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. அதற்குச் சில உதாரணங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| Our Lady of Refuge | — | அடைக்கலமாதா |
| Lady of the Rosary | — | செபமாலைமாதா |
| Cardinal | — | கருதினால் |
| Pope | — | பாப்பரசர் |

முன்காட்டியவாறுள்ள விவிலியத் தமிழ் ஆக்கத்தின் சிறப்பை இன்னும் அடுக்கிக்கொண்டேபோகலாம். எவரும் இலகுவில் கிரகிக்கத்தக்க முறையில், வாசிப்பவருக்கும் கேட்பவருக்கும் பக்தி ஊட்டும் தன்மையில் இம் மொழிபெயர்ப்பு அமைந்திருக்கிறது. வேட்டைவாளியானது தன்வயப்பட்ட புழுக்களைத் தன்மயமாக்குவது போல பழைய கிறீத்துவத் தமிழ் அறிஞர் வேற்றுமொழியில் இருந்த விவிலிய வேதத்தைத் தமிழனுக்கே உரிய ஒரு வேதம் எனத்தக்கமுறையில் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார்கள்: பழைய பாதிரிமாரும் குருமாரும் வேற்றுநாட்டிற் பிறந்தவரேனும் வேற்றுமொழியினரேனும் தாம் மெய்ச்சமயம் எனக்கருதிய ஒரு சமயத்தைத் தமிழ் மக்களிடையே பரப்புதற்காக அத்தமிழருககிடையே தமிழராக வசித்து, தமிழைத் தமிழாகக் கற்று தம் பணியில் இறங்கியவர்கள். தமிழ் மொழி மரபைக் கணமேனும் கைவிடாது பணியாற்றிய இவர்கள் எமக்கு வழிகாட்டிகளாக விளங்குகிறார்கள் என்று கூறினால் அது மிகையாகாது. வீரமாமுனிவர் இயற்றிய தேம்பாவணியென்னும் காவியத்தில் கத்தோலிக்க கிறீத்துவம் தமிழ் மொழியில் வனப்புறவிளக்கப்பட்டிருக்கிறது. இந்நூலின்கண்வரும் மக்கட் பெயர், இடப் பெயர், தேவப் பெயர் முதலியன தமிழ் உருவத்தில் தமிழ் ஒலிமரபுக்கிணங்க அமைந்துள்ளமை கருதற்பாலது; மேனாட்டு மத குருவான Father Beschi என்னும் அறிஞர் தமக்கு வீரமாமுனிவர் எனத் தமிழ்ப் பெயர் சூட்டியதுபோலவே, தமது காவியத்தில்வரும் கதாபாத்திரங்களின் இயற்பெயரைத் தமிழ் ஒலிப்புக்கு இணங்கத்தந்துள்ளார்;

பழைய கிறீத்துவ அறிஞரின் மொழிபெயர்ப்பு இலக்கியங்களுக்கு உதாரணமாக விவிலிய வேதம் புதிய ஏற்பாட்டிலிருந்து இரு பகுதிகள் கீழே தரப்படுகின்றன:

39. And the centurion who stood over against him seeing that crying out in this manner he had given up the ghost, said: Indeed this man was the son of God

40. And there were also women looking on afar off, among whom was Mary Magdalene and Mary the Mother of James the less and of Joseph and Salome:

41. Who also when he was in Galile followed him and ministered to him and many other women that came up with him to Jerusalem. (Mark; Authorised Version)

இவற்றுக்குரிய தமிழாக்கம் வருமாறு:

39. அன்றியும் அவருக்கெதிரே நின்ற செந்தூரியன் அவர் இப்படிக் கூப்பிட்டு உயிர்விட்டதைக் கண்டு இந்த மனிதன் மெய்யாகவே சர்வேசுரனுடைய குமாரன்தான் என்றான்.

40. அப்போது அநேக பெண்களும் தூரத்தினின்றும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் மரியமதலேனம்மாளும் சின்னயாகப்பருக்கும் யோசேப்புக்கும் தாயான மரியம்மாளும் சலோமையம்மாளும் இருந்தார்கள்.

41. இவர்கள் அவர் கலிலேயா நாட்டிலிருக்கும்போது அவரைப் பின் சென்று அவருக்கு ஊழியம் செய்துவந்தவர்கள்; இன்னும் அவருடன் எருசலேமுக்கு ஏறிவந்த வேறு அநேக பெண்களும் அவர்களோடு இருந்தார்கள்.

(மாற்கு; அதிகார மொழிபெயர்ப்பு)



# 4. மொழி மரபு

தமிழிலே எழுதப்படும் சகலவற்றிலும் தமிழ் மரபு ஒலிக்கவேண்டும். காலஞ்சென்ற மகாமகோபாத்தியாய கலாநிதி உ. வே. சாமிநாதர் ஐயர் அவர்களுக்குப் பிராஞ்சிய நண்பர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு தமிழ் அபிமானி. பரிசு நகரத்துப் பல்கலைக்கழகத்திலே ஒரு பேராசிரியராகப் பணியாற்றியவர்: தமிழ் இலக்கண இலக்கியங்களையுங் கற்றவர். ஆனால் தமிழ்மக்களுடன் அதிகம் பழகியவரல்லர்: எனவே தமிழ் மரபிற் பயிற்சியற்றவர்; அவருக்கும் சாமிநாத ஐயருக்குமிடையில் கடிதப் போக்குவரத்து இருந்தது; இருவரும் தமிழிற்றான் கடிதங்கள் வரைவர். ஒரு முறை சாமிநாத ஐயர் தாம் பதிப்பித்த நூல்களின் பிரதிகளை அனுப்பி வைத்தார்; அவற்றைப்பெற்ற பிராஞ்சிய அறிஞர் பின்வருமாறு மறுமொழியனுப்பினார்:—

"எனதன்பிற்குரிய ஐயாவே,

நீரனுப்பிய 2 புத்தகங்களும் எழுதின கார்டும் என்கிட்ட சேர்ந்தன. ஆதலால் மிகவும் சந்தோஷம் பெற்றிருக்கிறேன். நீர் பெரிய வேலைக்காரனென்றும் மகா கனம் பொருந்திய வித்துவானாயிருக்க வேணுமென்றும் நினைத்து வருகிறேன்."

இப்பிரெஞ்சு அறிஞர் எவ்வளவுதான் தமிழைப் படித்திருந்தாலும் மொழிமரபையறியாமையால் இப்படியாக எழுத நேர்ந்தது.

இன்னொரு உதாரணத்தை எடுத்துக்கொள்வோம்:

"I have the honour to inform you that you have been appointed as a clerk in my office"

என்று ஒரு ஆங்கில வசனம் இருக்கிறது; அதனை எமது மொழிமரபுக்கிணங்கப் பெயர்த்தல் வேண்டுமன்றி;

''என்னுடைய கந்தோரில் நீர் ஒரு கிளாக்காக* நியமிக்கப்பட்டிருக்கிறீர் என்பதனை அறிவிப்பதற்குக் கௌரவமுடையவனாயிருக்கிறேன்.''

என்று பெயர்த்தலாகாது. ஆங்கிலத்திலே முன்னிலை விளிப்புக்கு You என்ற ஒரு சொல்லையே சாதாரணமாக எந்த இடத்திலும் உபயோகிப்பர்; உயர்ந்தவரை விளிக்கும்போதும், சமநிலையினரை விளிக்கும்போதும் தாழ்ந்தோரை விளிக்கும்போதும் You என்ற சொல்லுத்தான் உபயோகிக்கப்படும். தமிழில் அப்படி இல்லை. 'நீ', 'நீர்', 'நீங்கள்', 'தாங்கள்' என்ற சொற்களைச் சந்தர்ப்பத்துக்கியைய உபயோகிக்க எமக்கு இடமுண்டு. I have the honour என்ற ஆங்கிலத்தொடர், எழுதுபவரின் பணிவைக்குறிப்பதாகும்; எனவே தமிழில்,

''தாங்கள் எனது கந்தோரில் ஒரு கிளாக்காக நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதனைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்

என்று பெயர்ப்பது அப்பணிவை நன்கு காட்டுவதாக இருக்கிறது. அப்படிச் செய்வது எமது மொழிமரபுக்கும் பொருத்தமாக இருக்கும்.

வழக்கில் உள்ள சகல மொழிகளுக்கும் மரபுச்சொற்றொடர்கள் (Idioms) இலக்கணமரபுகள் (Figurative Uses) முதலியன உண்டு. இவை மொழிபெயர்ப்பில் வரும்போது இவற்றை அப்படியே சொல்லுக்குச்சொல்லாகப் பெயர்க்கலாகாது. அப்படிச்செய்வது மொழிபெயர்க்கப்பட்ட மொழியைப் படிக்காது தமிழை மாத்திரம் படித்தோருக்கு மயக்கத்தைக் கொடுக்கும். உதாரணமாக Carrying coal to Newcastle என்பதனை எடுத்துக்கொள்ளுவோம், இதனைச் சொல்வாரியாகப்பெயர்த்தால் ''நியுகாசிலுக்கு கரி கொண்டு போதல்'' என்றாகும்.

* Clerk—கிளாக்கு, இலிகிதர் என்பன இந்நாட்டில் வழங்கும் சம சொற்கள், தென்னாட்டில் 'குமாஸ்தா' என்றும் சொல்வர்.



இதனைத் தமிழ்மாத்திரம் படித்தவர் புரிந்து கொள்ளுவதரிது; இந்த மரபுச் சொற்றொடரை ''கொல்லத்தெருவில் ஊசி விற்றல்' என்று மொழிபெயர்த்தல் எமது மொழி மரபுக்குப் பொருத்தமுடைத்தாகும்.

"The activities of the Archaeological Department BRING TO LIGHT the place occupied by the Tamils in ancient Ceylon"

என்னும் வசனத்தைச் சொல்லுக்குச் சொல் பெயர்த்தால்.

"இலங்கையில் தமிழரால் வகிக்கப்பட்ட இடத்தைத் தொல்பொருளாராய்ச்சிப்பகுதி*யின் முயற்சிகள் வெளிச்சத்துக்குக் கொண்டுவருகின்றன"

என்றாகும். இதிலே மொழிமரபு ஒலிக்கவில்லை; எனவே, இனிமையில்லை; விளக்கமில்லை. இப்படியான மொழிபெயர்ப்புக்குப் பதிலாக ''புராதன இலங்கையிலே தமிழ் மக்கள் வகித்துவந்த நிலையைத் தொல்பொருளாராய்ச்சிப் பகுதியின் முயற்சிகள் புலப்படுத்துகின்றன''

என்று மொழிபெயர்த்தல் மொழிமரபுக்குப் பொருத்தமாக இருக்கும்.

மொழிபெயர்ப்பைச் செய்பவர் தாம் எடுத்துக்கொண்ட மூலக்கிரந்தத்தின் வாக்கிய ஒழுங்கைத் தம் மொழி மரபுக்கேற்ப மாற்ற வேண்டிய சந்தர்ப்பங்களும் உள. உதாரணமாக He told me he went to Jaffna என்பதனை ''எனக்கு அவன் சொன்னான் அவன் போனான் யாழ்ப்பாணத்துக்கு என்று'' என்று சொல்லுக்குச்சொல் பெயர்த்தால் யாருக்கும் விளங்காது. ''அவன் யாழ்ப்பாணம் போனதாக எனக்குச் சொன்னான்'' என்று பெயர்த்தலே நெறியாகும்.

ஆங்கிலத்திலே செயப்பாட்டுவினைப் (Passive Voice) பிரயோகம் அதிகமாகவுண்டு. அப்படியான இடங்களில்

*Department என்பதற்கு இலங்கையில் 'பகுதி' என்று வழங்குவர்; தென்னிந்தியாவில் 'இலாக்கா' என்று வழங்கப்படுவது நோக்கற்பாலது.

அதேவினைப்பிரயோகத்தை மொழிபெயர்ப்பில் எடுத்தாளவேண்டும் என்ற கட்டாய விதி இல்லை. உதாரணமாக:

I was asked by the Head of the Department to explain my absence from office என்பது செயப்பாட்டு வினையில் அமைந்திருக்கிறது. இதனை அப்படியே மொழி பெயர்த்தால்,

> "கந்தோரிலிருந்து எனது வராமையின்மையை விளக்கும்படி பகுதித்தலைவரால் நான் கட்டளையிடப்பட்டேன்"

என்றாகும். தெளிவற்ற, மொழிமரபுக் கொவ்வாத இச் செயப்பாட்டு வினைப்பிரயோக மொழிபெயர்ப்பை விடுத்து,

> "நான் கந்தோருக்கு வராததற்கு விளக்கம்தருமாறு பகுதித்தலைவர் கட்டளையிட்டிருக்கிறார்"

என்று செய்வினையில் மொழிபெயர்த்தல் மொழிமரபுக்கு நன்கு பொருந்துவதாகும்.

எவரும் இலகுவில் விளங்கத்தக்க விதத்தில் மொழி மரபு பிறழாது மொழிபெயர்க்க வேண்டும் என்னும் பொது விதியை மொழிபெயர்ப்பாளர் கைக்கொள்ளுதல் வேண்டும்.

கைத்தொழில் வீடமைப்பு அமைச்சின் நிரந்தர காரியதரிசி ஊரவர் ஒருவருக்கு உத்தியோகரீதியில் எழுதுவது போன்ற ஒரு கடிதமும் அதன் நூனமான மொழிபெயர்ப்பும் மொழிமரபுக்கிசையும் முறையான மொழிபெயர்ப்பும் கீழே தரப்படுகின்றன:



My No. AC/TM/3
Ministry of Industries and Housing
Colombo,
13th Feburary, 1954.

To
Mr. T. Vinasithamby,
"Santhi Nivasa",
Kaddudai,
Manipay.

Sir,

**Coir Factory at Kaddudai**

With reference to your letter dated 7th February, 1954, addressed to the Hon. Minister of Industries and Housing on the above subject, I am instructed by the Hon. Minister to inform you that the matter complained of by you has been referred to the Government Agent, N. P., Jaffna who will communicate direct with you.

I am Sir,
Your obedient servant,

..............................................

for Permanent Secretary,
Ministry of Industries and Housing.

இதற்கு நூனமான மொழிபெயர்ப்பு வருமாறு:

எனது இல: AC/TM/3
கைத்தொழில் வீடமைப்பு அமைச்சு,
கொழும்பு, 13ம் திகதி மாசிமாதம், 1954ம் ஆண்டு.

திரு. T. விஜசித்தம்பி அவர்கள்,
"சாந்தி நிவாசம்"
கட்டுடை,
மானிப்பாய்.

ஐயாவே,

கட்டுடைக் கயிற்றுத் தொழிற்சாலை:

மேலே காட்டிய விடயம் பற்றி கௌரவ கைத்தொழில் வீடமைப்பு மந்திரிக்கு விலாசமிட்டு 7ம் திகதி மாசிமாதம் 1954ம் ஆண்டு திகதியிட்டனுப்பிய தங்களது கடிதம் குறித்து. உம்மால் முறையிடப்பட்டுள்ள விடயம் இனி நேரடியாகத் தங்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளப்போகும் யாழ்ப்பாணம் வட மாகாணதிபதிக்கு விடப்பட்டிருக்கிறதென்று தங்களுக்கு அறிவிக்கும்படி கௌரவ மந்திரி அவர்களாற் கற்பிக்கப்படுகிறேன்

இங்ஙனம், ஐயா,
தங்கள் ஊழியன்,

........................................

கைத்தொழில் வீடமைப்பு அமைச்சின்
நிரந்தர காரியதரிசிக்காக:

இந்த மொழிபெயர்ப்பில் உள்ள நூன அம்சங்களை அவதானிப்பாம்:

1: திகதிக்கெனவுள்ள இடத்தில் திகதியிட்ட முறை எமது மரபுக்கொவ்வாதது. ஆங்கிலத்தில் இருப்பதை அப்படியே இடாது முதலில் ஆண்டு, பின்னர் மாதம், அதன்பின்னர் திகதி இடுவதுதான் தக்க நியதியாகும்:



2. ஆங்கில மாதத்துக்கு தமிழ்மாதப்பெயர் இடுவது பொருந்தாது: ஆங்கிலத்திலே பிப்ரவரி மாதம், தமிழ்த் தைமாதத்தின் ஒரு பகுதியாயும் மாசி மாதத்தின் இன்னொரு பகுதியாயும் இருக்கும். எனவே, ஆங்கில மாதத்துக்கு இது தான் சமமான தமிழ்மாதம்என்று பல சமயங்களில் திட்டவட்டமாகக் கூறமுடியாது:

3. "ஐயாவே" என்று விழிப்பது மரபுக்கு முரண்:

4: ஒரு இடத்தில் "தங்களது" என்று குறித்து விட்டு பின் "உமது" என்று கூறுதல் பொருத்தமாகாது:

5. "இங்ஙனம் ஐயா தங்கள் ஊழியன்" என்பது அவசியமில்லாதது. இதில் "ஐயா" யார்? "ஊழியன்" யார் என்பது ஒரு பெரும் பிரச்சினையாகிறது.

6. கடிதத்தில் "தங்கள்" "தங்களுடைய" என்கிற விளிப்புக்களாலும் "ஊழியன்" என்ற பதத்தாலும் எழுதுபவரின் பணிவு நன்கு விளங்குகிறது. எனவே, "தாழ்மையுள்ள" (Obedient என்ற பதத்திற்கு நேரான மொழிபெயர்ப்பு) வேண்டியதில்லை.

7. வசனம் முழுவதும் ஒரே சொல்லடுக்காயிருக்கிறதன்றி, எழுதுபவரின் கருத்தை படிப்பவர் கிரகிக்க முடியாமல் இருக்கிறது.

எமது மொழிமரபுக்குப் பொருந்தும் விதத்தில் மேலேயுள்ள கடிதத்துக்குப் பின்வருமாறு மொழிபெயர்ப்புச் செய்யலாம்:

எனது இல: AC/TM/3
கைத்தொழில் வீடமைப்பு அமைச்சு
கொழும்பு: 1954ம் ஆண்டு,
பிப்ரவரி மாதம், 13ம் திகதி.

திரு. T. விஞசித்தம்பி அவர்கள்,
''சாந்தி நிவாசம்''
கட்டுடை,
மானிப்பாய்.

ஐயா,

<u>கட்டுடைக் கயிற்றுத் தொழிற்சாலை:</u>

மேலே காட்டிய விடயம்பற்றி கௌரவ கைத்தொழில் வீடமைப்பு மந்திரி அவர்களுக்குத் தாங்கள் அனுப்பிய 1954 ம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 7-ம் திகதிய கடிதம கிடைத்தது: அதில் தாங்கள் முறையிட்டுள்ள விடயம் யாழ்ப்பாணம் வடமாகாணதிபதியின் கவனத்துக்கு விடப்பிட்டிருக்கிறது என்றும் அவர் இது விடயம் பற்றி தங்களுடன் நேரடியான தொடர்புகொள்ளுவார் என்றும் தங்களுக்குத் தெரிவிக்குமாறு கௌரவ மந்திரி அவர்கள் எனக்குப் பணித்திருக்கிறார்.

இங்ஙனம்,
தங்கள் ஊழியன்,

.............................................
கைத்தொழில் வீடமைப்பு அமைச்சின் நிரந்தர
காரியதரிசிக்காக:



நாம் ஒரு வேற்றுமொழிக்கூற்றை மொழி பெயர்க்கும்போது அக்கூற்றை எமக்குரிய தன்மையில் நினைத்து எமக்குரிய மொழிமரபில் அதனை வெளியிடுதல்வேண்டும். உதாரணமாக: Your kind attention is invited to my letter of the 15th instant என்னும் வாக்கியத்தை எடுத்துக்கொள்ளுவோம். இதனை ஆங்கிலத்திற் சொல்லும்போதும் எழுதும்போதும் அழகாக இருக்கிறது. அப்படி எழுதுவது ஆங்கிலத்துக்குரிய மரபு. ஆனால் இதே மரபினை நாம் எமது வசனநடையிலே கையாளவொண்ணுது. ''உமது அன்பான கவனம் எனது 15-ம் திகதிய கடிதத்துக்கு வேண்டப்படுகிறது'' என்று எழுதுவது தமிழ் மரபுக்கடுக்காது. ஒருவர் இன்னொருவருக்கு கடிதம் எழுதினார்; அதற்கு அவர் மறுமொழி எழுதவில்லை: எனவே தமது முந்திய கடிதத்தை மற்றவர் ஞாபகப்படுத்தவே இந்த முறையில் ஆங்கிலத்தில் எழுதுகிறார்.

நாம் எமது நண்பர் ஒருவருக்கு அல்லது வேறொருவருக்கு கடிதம் எழுத அவர் அதற்கு மறுமொழி தராவிடத்து Your kind attention is invited என்று நாம் சாதாரணமாக நினைப்பதில்லை. ''தங்களுக்கு இன்ன திகதியில் கடிதம் எழுதினேன், அதற்குப் பதில் இல்லை, ஆகவே அதனை ஞாபகமூட்டுகிறேன்'' என்னும் தோரணையில் நினைத்து தமிழில் எழுதுவோமன்றி Your kind attention is invited என்று ஆங்கிலத்தில் நினைத்துத் தமிழில் எழுதமாட்டோம். அப்படி எழுதுவோமென்றால் அது ஆங்கிலத் தமிழாகிவிடும்.

மேலே காட்டிய ஆங்கில வசனத்திற்கு தமிழ் மரபில், ''15-ம் திகதிய எனது கடிதத்தைத் தங்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்'' என்ற மொழிபெயர்ப்புச் செய்தல் பொருத்தமுடையதாகும்.

ஒருவருடைய மொழிபெயர்ப்பு உண்மையான ஒரு கலையாக இருக்கவேண்டுமானால்அதிலே, மொழிபெயர்ப்பு மொழியின் மரபு தலைசிறந்து பொழியவேண்டும மொழிபெயர்ப்புக்குக் ''கலை'' கொடுப்பது உணர்ச்சி: அக் கலைக்கு வேண்டிய பொலிவு சொடுப்பது மொழிமரபு.

# 5. கடிதங்களில் மரபு வழுவாமை

இதுவரை நமது நாட்டிலே அரசியற்றுறையிலாக, சமயத்துறையிலாக, கல்வித்துறையிலாக, வர்த்தக வியாபாரத்துறையிலாக, பெரும் பதவிகளை வகித்துவந்தவர்கள் வேற்றுமொழியினராகவிருந்தனர். அதன்பயனாக அவர்களுடன் செய்யும் கடிதப்போக்குவரத்துக்கள் ஆங்கிலத்திலேயே இருக்கவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் எம்மவருக்கு இருந்தது. ஆனால் இன்றுள்ள நிலைமை வேறு. சமயத்துறையில் கருதினல் ஆண்டவர்பதவியும், அரசியற்றுறையில் மகாதேசாதிபதிப்பதவியும் நம்மவருக்குக் கிடைக்கும் காலம் இது சகல துறைகளிலும் நம்மவர் உயர்பதவிகளை வகிக்கும் இக்காலத்திலே—சகல கருமங்களும் தாய்மொழி மூலமே நடைபெறவேண்டும் என்று கருதப்படும் இக்காலத்திலே - தமிழன் தன்மானம் கொண்டு தலைநிமிர்ந்து நிற்கவேண்டுமென்ற ஒரு துடிப்பு ஏற்பட்டுள்ள இக்காலத்திலே-ஆங்கிலத்தில்தான் கடிதங்கள் எழுதவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. தமிழில் தாராளமாக எழுதலாம். அப்படி எழுதுவதனைச் சம்பந்தப்பட்டவர்கள் வரவேற்கவும் செய்வர். ஆனால் அவர்களுக்கு எந்தவிதத்தில் எழுதுவது? அவர்களை எவ்வாறு விளிப்பது? கடிதங்களை எவ்வாறு முடிப்பது? என்னும் இன்னோரன்ன கேள்விகள் இப்போது பிறக்கின்றன. ஆங்கிலத்தில் எழுதும்போது அவரவருக்குத் தகுந்த விதத்தில் எழுத ஒரு நியதியைப் பின்பற்றி வந்திருக்கிறோம். அத்தகையதான ஒரு நியதியை அல்லது ஒழுங்கினை தமிழ்க் கடிதங்கள் பற்றியும் நாம் வகுத்துக்கொள்ளுதல்வேண்டும். தமிழ் மரபு பிறழாது இதனை வகுப்பதற்குச் சில உதாரணங்களைக்காட்டுதும்:



| Address | Form of Address | Ending |
|---|---|---|
| 1 To His Grace The Most Rev. Dr. Thomas Cooray, Archbishop of Colombo, Colombo. | May It Please Your Gracious Lordship, or Your Grace, | I am, Your Gracious Lord-ship's Most Obedient Servant, |
| 2 To His Grace The Rt. Rev. Dr. J. Emilianuspillai, Bishop of Jaffna, Jaffna. | May It Please Your Gracious Lordship, or Your Grace, | I am, Your, Gracious Lordship's Most Obedient Servant, |
| 3 To His Grace The Rt. Rev. Dr. Sabapathy Kulendran, Bishop in Jaffna, | Do | Do |
| 4 To His Excellency The Governor General, Queen's House, Colombo. | May It Please Your Excellency, or Your Excellency, | I am, Sir, Your Excellency's Most Obedient Servant, |

| | | |
|---|---|---|
| 5 To<br>Rt. Hon. Sir John Kotelawala<br>Prime Minister of Ceylon,<br>Colombo. | Rt. Hon. Sir, | I am, Sir. Your<br>Most Obedient<br>Servant, |
| 6 To<br>His Lordship<br>The Hon. Mr. C. Nagalingham,<br>Acting Chief Justice,<br>Colombo. | Your Lordship, | I am,<br>Your Lordship's<br>Most,<br>Obedient Servanat, |
| 7 To<br>The Hon. Mr. S. Natesan,<br>Minister of Posts<br>and Teleconmunications,<br>Colombo | Sir, | I am, Sir,<br>Your<br>Most Obedient,<br>Servant, |
| 8 To<br>His Excellency<br>Mr. C. Coomaraswamy.<br>High Commissioner for<br>Ceylon in India,<br>New Delhi | Your Excellency, | I am Sir.<br>Your Excellency's<br>Most, Obedient,<br>Servant, |
| 9 To<br>His Excellency<br>Sir. Velupillai Coomaraswamy,<br>Ceylon's Envoy Extraordinary<br>and Minister Plenipotentiary,<br>Rangoon | Your Excellency, | I am, Sir,<br>Your Excellency's<br>Most Obedient,<br>Servant. |
| 10 To<br>The Very Rev. Fr. S. Peterpillai,<br>Rector,<br>St. Joseph's College,<br>Colombo | Reverend Father, | I am,<br>Very Reverend Father,<br>Your Obedient<br>Servant, |
| 11 To<br>The Ven'ble J. A. R. Navaratnam,<br>Archdeacon,<br>Jaffna | Venerable Sir. | I am,<br>Venerable Sir,<br>Your Obedient<br>Servant, |
| 12 To<br>The Rev. A. Ratnarajah,<br>Pastor,<br>Kotahena | Reverend Sir, | I am,<br>Reverend Sir,<br>Your Obedient<br>Servant, |

| | | |
|---|---|---|
| 13 To<br>Dr. K. Kanapathipillai,<br>Professor of Tamil.<br>University of Ceylon,<br>**Peradeniya.** | Sir, | I am, Sir,<br>Your Obedient<br>Servant, |
| 14 To<br>T. Muttuswamipillai Esq.,<br>Crown Advocate,<br>Jaffna | Do | Do |
| 15 Messrs. Colombo<br>Apothecaries Co. Ltd.,<br>Fort, Colombo. | Gentlemen,<br>or<br>Sirs, | I am,<br>Gentlemen, Your<br>Obedient Servant |
| 16 To<br>Lady Meenakshi Sambasivam<br>"Kailayankiri"<br>Patullo Road,<br>**Madras.** | Your Ladyship, | I am,<br>Your Ladyship's<br>Obedient<br>Servant, |
| 17 To<br>Miss Hudson Paramasamy,<br>Principal,<br>Uduvil Girls' School,<br>Uduvil,<br>Chunnakam | Madam | I am, Madam,<br>Your Obedient<br>Servant, |
| 18 To<br>Master T. Saravanamuttu,<br>Tamil Stenography Trainee,<br>34, Queen Street,<br>Colombo. | Sir, | I am, Sir,<br>Your Obedient Servant, |

மேலே ஆங்கிலத்திற் காட்டியுள்ளவர்களுக்குரிய விலாசங்கள், விளிப்புமுறைகள், அவர்களுக்குரிய கடிதங்களை முடிக்கும் முறைகள் தமிழில், தமிழ் மரபுக்கியைய இருக்கவேண்டிய விதம் கீழே தரப்படுகிறது.

| விலாசம் | விளிக்கும்முறை | முடிபு |
|---|---|---|
| 1. அருட்பிரசாத மகா வந். *கலாநிதி தோமஸ் கூறே அவர்கள், கொழும்பு அதிமேற்றிராணியார், ○ கொழும்பு | அருட்பிரசாத ஆண்டவ, | இங்ஙனம் அருட்பிரசாத ஆண்டவராம் தேவரீரது ஊழியன் |
| 2 அருட்பிரசாத அதி. வந். கலாநிதி J. எமிலியானசுப்பிள்ளை அவர்கள், யாழ்ப்பாணம் மேற்றிராணியார், யாழ்ப்பாணம் | அருட்பிரசாத ஆண்டவ, | இங்ஙனம், அருட்பிரசாத ஆண்டவராம் தேவரீரது ஊழியன், |
| 3. அருட்பிரசாத அதி. சங். ○ கலாநிதி, சபாபதி குலேந்திரன் அவர்கள், அத்தியட்சகர்,* யாழ்ப்பாணம் | அருட்பிரசாத, | இங்ஙனம், அருட்பிரசாதராம் தேவரீரது ஊழியன், |

*Doctor என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு 'தினகரன்' ஆசிரியர் அன்பர் வே க. ப. நாதன் அவர்கள் ''கலாநிதி' என்னும் மிகப்பொருத்தமான சமசொல்லை நவமாக ஆக்கி அழகாகப் பிரயோகித்து வருவது நோக்கற்பாலது. இச்சம சொல் எச்சந்தர்ப்பத்திலும் பொருத்தமாக விளங்கும் என்பதற்குச் சில உதாரணங்கள் காட்டுதும்:

| | |
|---|---|
| Doctor | — கலாநிதி |
| Doctor of Divinity | — வேதாகம கலாநிதி |
| Doctor of Laws | — சட்டக் கலாநிதி |
| Doctor of Literature | — இலக்கிய கலாநிதி |
| Doctor of Medicine | — வைத்திய கலாநிதி |
| Doctor of Philosophy | — தத்துவ கலாநிதி |
| Doctor of Science | — விஞ்ஞான கலாநிதி |

○ மேற்றிராணி ஆண்டவர் அவர்கள் என்றும் கூறுப

ʃ தேவரீர் என்னும் இச்சொல்லை உயர்ந்தோர்விடயத்தில் — அதிலும் விசேடமாக சமயக்குருமாரை விளிக்கும் விடயத்தில் — பிரயோகித்தல் மிகப்பொருத்தமானது, தமிழ் மரபுக்கேற்றது என்பதே எமது அபிப்பிராயம்.

○ Reverend: கத்தோலிக்க சமுதாயத்தினர் இதற்கு ''வந்தனைக்குரிய (வந்) அல்லது வணக்கத்துக்குரிய (வண) என்பது வழக்கம். புரத்தசித்தாந்தக் கிறீத்தவர் இதே சொல்லுக்கு ''சங்கைக்குரிய'' (சங்) என்பர். ஏற்கெனவே இருந்துவரும் ஒரு சொல், பிழையில்லாமல் இருப்ப, அதனைச் சம்பந்தப்பட்டுள்ள சமுதாயத்தார் உபயோகிதது வருமிடத்து, இடையிற் குழப்புதல் முறையாகாது.

* Bishop என்பதற்கு புரத்தசித்தாந்தர் அத்தியட்சகர் என்று உபயோகித்து வருகிறார்கள்.

| | | |
|---|---|---|
| 4. அதி உத்தம மகாதேசாதிபதி அவர்கள்,<br>இராணிமாளிகை,<br>கொழும்பு | அரசுபுரக்கும்<br>அதி உத்தம, ∫<br>அல்லது<br>அதி உத்தம, | இங்ஙனம்<br>அதி உத்தமராம் தங்கள்<br>ஊழியன், |
| 5 அதி. கௌரவ<br>சேர் ஜோன் கொத்தலாவலை அவர்கள்,<br>இலங்கைப் பிரதம மந்திரி,<br>கொழும்பு. | அதி. கௌரவ ஐயா, | இங்ஙனம்<br>தங்கள் ஊழியன், |
| 6. நீதிப்பிரபுத்துவ<br>கௌரவ திரு. சி. நாகலிங்கம் அவர்கள்,<br>பதிற் பிரதம நீதியரசர்,<br>கொழும்பு | பிரபுவே, | இங்ஙனம்<br>பிரபுவாம் தங்கள்<br>ஊழியன், |

∫ இதிலே ''அரசுபுரக்கும்'' என்பது வருவிக்கப்பட்டிருக்கிறது பிரித்தானிய இராச்சியப் பொதுநலவமைப்பிலே தொமினியன் நிலையெனப்படும் சமவரசுநிலையைக் கொண்டிருக்கும் நாடுகளின் மகாதேசாதிபதிகள் அரசு புரப்பவரன்றி ஆட்சி செலுத்துபவரல்லர். அதனை இது காட்டுவதுடன் விளிப்பவரின் பக்தியையும் விநயத்தையும் காட்டுவதாயும் விளங்குகிறது.



| | | |
|---|---|---|
| 7 கௌரவ திரு. சு. நடேசன் அவர்கள்,<br>தபால் தந்தி மந்திரி,*<br>கொழும்பு | ஐயா, | இங்ஙனம் தங்கள்<br>ஊழியன் |
| 8. அதி உத்தம திரு. சி. குமாரசுவாமி அவர்கள்,<br>இலங்கை அரசுத் தூதர், ∫<br>புது தில்லி,<br>இந்தியா | அதி உத்தம,<br>அல்லது<br>ஐயா, | இங்ஙனம்<br>அதி உத்தமராம்<br>தங்கள் ஊழியன்,<br>அல்லது தங்கள்<br>ஊழியன் |

* Minister என்பதற்கு ''அமைச்சர்'' என்னுஞ்சொல்லை இப்போது வழங்குவது உண்டு. Ministry—அமைச்சு என்பதும் நோக்கற்பாலது.

∫ High Commissioner என்பதற்கும் Ambassador என்பதற்கும் 'அரசுத்தூதர்' என்ற ஒரு சொல்லினையே வழங்குவர். இவ்விருவரும் ஒரேவித இராசகருமத்தையாற்றுபவர்கள். பொதுநலவமைப்புக்குள் இருக்கும் சமவரசு நாடுகள் தமக்குள்ளே பரிமாறிக்கொள்ளும் அரசுத்தூதர்கள் High Commissoners எனப்படுவர். ஆனால் சமவரசுநாடுகள்சரி ஏனையநாடுகளசரி, பொதுநலவமைப்புக்குள்இராத நாடுகளுக்கு அனுப்பும் அரசுத்தூதரும் அந்நாடுகளில் இருந்துவரும் அரசுத்தூதரும் Ambassadors எனப்படுவர். High Commissioner என்பது தனியாக வரும் போது அதற்குச் 'சமவரசுத்தூதர்' எனச்சமசொற் கொடுக்கலாம். ஆனால் Ceylon's High Commissioner in India என்பதற்கு ''இந்தியாவில் உள்ள இலங்கையின்சமவரசுத்தூதர்'' என்று சொல்லுதல் பொருத்தமாகாது. 'இந்தியாவில் உள்ள இலங்கைச் சமவரசுத்தூதர்' என்று சொல்லுவது ஒரு அளவுக்குப் பொருத்தமாகும் ''இலங்கையின் அரசுத்தூதர்'' என்று சொல்வது மிகப்பொருத்தம்.

| | | |
|---|---|---|
| 9 அதி உத்தம ○ சேர் வேலுப்பிள்ளை குமாரசுவாமி அவர்கள்,<br>இலங்கை யரசாங்கத்து அதிதூதரும,<br>சகலாதிகாரத் தூதமைச்சரும்,<br>இரங்கூன்,<br>பர்மா | அதி உத்தம,<br>அல்லது<br>ஐயா, | அதி உத்தமராம்<br>தங்கள் ஊழியன்<br>அல்லது<br>தங்கள் ஊழியன். |
| 10. மிகு வந். பீற்றர்ப்பிள்ளை சுவாமியார் ○○ அவர்கள்,<br>ஆண்மைக்குரவர்,<br>பரி. சூசையப்பர் கல்லூரி,<br>கொழும்பு | வந். சுவாமி, | இங்ஙனம்<br>தேவரீர் சுவாமிகளின்<br>ஊழியன், |

○ Sir என்பதற்கு "சோல்பெரி பிரபு (Lord Solbury - சோல்பரி பிரபு) என்னும் தன்மையில் தமிழில் ஒரு சமசொல் அமைத்தால் என்ன என்றும் சிலர் கடாவுவர். இன்று Sir என்பதற்கு "சேர்" என்றே வழங்கப்படுகிறது. இதனை மாற்றவேண்டுமானல் அதற்குரியார் அதனைச் செய்தல் வேண்டும்.

○○ Father என்ற பதத்துக்கு "சுவாமியார்" "பிதா" என்னும் சமபதங்கள் இப்போது வழங்கப்பட்டிருக்கின்றன. இவற்றைவிடுத்து, சரியான தமிழ்மரபுக்கிணங்க பெயரின் இறுதியில் "அடிகள்" என்றுவரலாம் என்பது கத்தோலிக்கத் தமிழ் அறிஞர் சிலரின் அபிப்பிராயம். அதற்கிணங்க, Rev. Fr. Xavier Thaninayagam

| | | |
|---|---|---|
| 11. பூசித. J. R. நவரத்தினம் அவர்கள்,<br>அதி பரிசாரகக் குரு,<br>யாழ்ப்பாணம் | பூசித சுவாமி, | பூசித சுவாமிகளாம்<br>தேவரீரது<br>ஊழியன், |
| 11. ○ சங். ஆ. இரத்தினராசா அவர்கள்,<br>போதகர்,<br>கொட்டாஞ்சேனை. | போதக சுவாமி, | இங்ஙனம்<br>போதக சுவாமிகளாம்<br>தேவரீரது, ஊழியன் |

அவர்கள் வண. சேவியர் தனிநாயகம் அடிகள் என்று மிகப் பொருத்தமாகவும் அழகாகவும் அழைக்கப்படுகிறார். ஆனால் புதியதான சமபதத்தைக் கைக்கொள்ளும் பொறுப்பு சம்பந்தப்பட்ட சமுதாயத்துக்குத்தான் உரியது. எனினும், அறிஞர் தனிநாயகம் அடிகளார், நம் தெய்வத் தமிழ் மரபு வழுவாமலும், தமிழுக்கும் கத்தோலிக்க சமயத்துக்கும் என்றும் பொன்றுத் தொடர்பொன்றை தம் மெய்ப் பணிமூலம் தாபித்துவிட்ட வீரமாமுனிவர்ப் பெருந்தகையின் அடிச்சுவட்டைப்பின் பற்றியும் கொண்டிருக்கும் பண்புமறவாக்கொள்கையினைக் கத்தோலிக்க சமுதாயத்துக்குச் சமர்ப்பிக்க விரும்புகிறோம்.

○ புரத்தசித்தாந்தக் கிறீத்தவர் Reverend என்பதற்கு இக்காலத்திலே வழங்கும் சமபதம் "சங்கைக்குரிய" என்பதாகும். ஆனால் இற்றைக்கு 50 ஆண்டுகளுக்குமுன் இந்த 'சங்' என்னும் சொல் மிக அரிதாகவே உபயோகிக்கப்பட்டது. அக்காலத்தில் ஈழத்தமிழ்நாட்டிற் பணியாற்றிய பாதிரிமார் 'ஐயர்' என்றுவழங்கப்

| | | |
|---|---|---|
| 13. கலாநிதி. க. கணபதிப்பிள்ளை அவர்கள்<br>தமிழ்ப்பேராசிரியர்,<br>இலங்கைப்பல்கலைக்கழகம்<br>பேராதனை, | ஐயா. | இங்ஙனம்<br>தங்கள்<br>ஊழியன், |
| 14. திரு. த. முத்துச்சுவாமிப்பிள்ளை அவர்கள்,<br>முடிக்குரிய நியாயவாதி,<br>யாழ்ப்பாணம் | ஷை | ஷை |

---

பட்டதை அறிவோம். தமிழ்ச் சமுதாய மரபுப்படியே அவர்கள் இப்படியாகப் பழையவர்களினுல் அழைக்கப்பட்டனர். கிறீன் ஐயர் (Rev. Green) பாக்கர் ஐயர் (Rev. Barker) இறிம்மர் ஐயர் (Rev. Trimmer) முதலாம் பழைய கிறீத்தவத் தொண்டர்களின் பெயர்களை ஈழத்தமிழ்நாட்டில் உள்ள காலங்கண்ட புரத்தசித்தாந்திகள் இன்றும் நினைவிற்கொள்ளுவர்.



| | | |
|---|---|---|
| 15 திருவாளர்கள்<br>கொழும்பு அப்போதிக்கரி (வரைவுள) கொம்பனியார்,*<br>குமார வீதி,<br>கொழும்பு | அன்புடையீர்,<br>அல்லது<br>ஐயன்மீர், | இங்ஙனம்<br>தங்கள் ஊழியன், |
| 16. திருமதி. சாம்பசிவம் மீனுட்சி அம்மையார், †<br>"கைலையங்கிரி"<br>பத்துலோ வீதி<br>சென்னை | அம்மணி, | ஷை |

---

* Company என்பதற்கு வர்த்தக சமுதாயத்தார்என்றும் சிலர் சொல்லுவர்.

† Lady என்பதனை ஆங்கிலத்தில் உள்ளபடியே 'லேடி' என்றும் சிலர் கூறுவர்.

| | | | |
|---|---|---|---|
| 17 | செல்வி ∫ அட்சன் பரமசாமி<br>உடுவில் பெண் பாடசாலைப் பிரதமாசிரியை,<br>உடுவில்,<br>சுண்ணுகம் | அம்மணி, | இங்ஙனம்<br>தங்கள் ஊழியன், |
| 18. | செல்வன் த. சரவணமுத்து,<br>தமிழ்ச் சுருக்கெழுத்துப் பயிற்சியாளர்,<br>34, இராணி வீதி,<br>கொழும்பு | அன்புடையீர் ○ | ஷ |

---

∫ சென்னை அரசாங்கம் Miss எல் பதற்கு ''குமாரி'' என்னும் சமசொல் ஆக்கியிருக்கிறது என்பது ஈண்டுக்குறிப்பிடத்தக்கது விவாகமாகாது, கன்னிமை யிலேயேஎன்றுமிருக்கும் முதிய பெண்களை விளிப்பதிலும். 'குமாரி' என்பது பொருத்த முடைத்தாகுமா என்பது ஒரு கேள்வி.

○ கடிதவிளிப்பில் 'அன்புடையீர்' என்ற சொற்றொடர்ப்பிரயோகம் பல சந்தர்ப்பங்களிற் பொருத்தமாகச் சய்யப்படலாம். ஆண்களையும் பெண்களையும் உயர்ந்தவர்களையும் தாழ்ந்தவர்களையும் விளிப்பதற்குப் பொதுவான ஒரு சொற்றொடராகவும் இனிமையுள்ளதாகவும் இது பொலிந்திருக்கிறது.

# 6 எழுத்திலக்கண நெறி பிறழாமை

''குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியனிங்கில்லை
குறும்பியளவாக் காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லியில்லை
இரண்டொன்று முடிந்துதலை யிறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவி யொட்டக்கூத்தனில்லை
விளையாட்டாய்க் கவிதைதனை விரைந்துபாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே''

மாரிக்காலத்துப் புற்றீசல் போலவும் கோடைக் காலத்து மயிர்க்கொட்டிப் புழுக்கள் போலவும் கிளம்பி தமிழ் மரபு பிறழ்ந்து பாடித்திரியும் 'கவி' களைப்பற்றி ஒரு புலவர் பாடியது இன்றைய தமிழகத்து 'எழுத்தாளர்' சிலருக்கும் நன்கு பொருந்தும்.

இலக்கணவிதிகளை அறவே புறக்கணித்து தம் மனம் போனபோக்கில் எழுதிவரும் நவீன எழுத்தாளரை மொழி பெயர்ப்பாளர் பின்பற்றி எமது மொழியின் சிறப்புக்கு இழுக்குத் தேடவொண்ணுது.

மொழிக்குமுன் வரா எழுத்துக்கள் என்று சில எழுத்துக்களையும் மொழிக்கு இறுதியில் வரா எழுத்துக்கள் என்று சில எழுத்துக்களையும் நம் முன்னோர் வகுத்து விதி ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தவிதியை மொழி பெயர்ப்பாளர் இயன்றவரை பின்பற்றுதல் வேண்டும்

மொழிக்குமுன் வராதிருக்கவேண்டிய எழுத்துக்களாவன:

1. ஙகர வரிசை எழுத்துக்கள்
2. டகர வரிசை எழுத்துக்கள்
3. ணகர னகர வரிசை எழுத்துக்கள்
4. ரகர றகர வரிசை எழுத்துக்கள்
5. லகர வரிசை எழுத்துக்கள்
6. ழகர ளகர வரிசை எழுத்துக்கள்

மொழிக்கு இறுதியில் வராதிருக்கவேண்டியஎழுத்துக்கள்:
க், ங், ச், ஞ், ட், த், ப், ற் என்பன.

இந்த இலக்கண விதிக்கு முரணாக சில எழுத்தாளர் எழுதும் சொற்களையும் அவற்றினைத் தமிழ் மரபு பிறழாது எழுதவேண்டிய விதத்தினையும் கீழே குறிக்கின்றோம்:

| | |
|---|---|
| டம்பம்........................ | இடம்பம் |
| டசின் | இடசின் |
| டெல்கி | தில்லி அல்லது தெல்லி |
| டொமினியன்................. | தொமினியன் |
| டமாரம் | இடமாரம் |
| டொன் பிலிப்........ ......... | தொன் பிலிப்பு |
| ராமன் | இராமன் |
| ரவி | இரவி |
| ரவிக்கை | இரவிக்கை |
| ராயப்பர் | இராயப்பர் |
| ராசா | இராசா |
| ராத்திரி | இராத்திரி |
| ரதி | இரதி |
| ருத்தல் | இருத்தல் |
| ரதம் | இரதம் |
| ரசம் | இரசம் |
| ரோசா மலர் | உரோசா மலர் |
| லாபம் | இலாபம் |
| லாயம் | இலாயம் |
| லோபி | உலோபி |
| லவணம் | இலவணம் |

மொழியிறுதியில் நில்லா எழுத்துக்கள்:

| | | |
|---|---|---|
| பாங் | (Bank) | — வங்கி (நிதிநிலையம்) |
| வோட் | (Vote) | — வோட்டு (வாக்குரிமை) |
| மார்ச் | (March) | — மார்ச்சு |
| ஓகஸ்ட் | (August) | — ஒகசித்து |
| செனட் | (Senate) | — செனேற்று (மூப்பர் சபை, மேற்சபை) |
| செக் | (Cheque) | — செக்கு (காசோலை) |
| போஸ்ட் கார்ட் | (Post Card) | — போசுக் காட்டு (அஞ்சல் அட்டை) தபால் அட்டை |



| | | |
|---|---|---|
| சோக் | (Chalk) | — சோக்கு (வெண்கட்டி) |
| கோற் | (Coat) | — கோற்று (மேற்சட்டை) மேலங்கி |
| சேர்ட் | (Shirt) | — சேட்டு (சட்டை) |
| ஸ்லேட் | (Slat) | — சிலேற்று (கற்பலகை) |
| செகன்ட் | (Second) | — வினாடி |
| மினிட் | (Minute) | — நிமிடம் |
| பிஸ்கத் | (Biscuit) | — விசுக்கோத்து |
| கஸரத் | | — கசரத்து |
| ஜவாப் | | — சவாப்பு (மறுமொழி) |
| பஞ்சாயத் | | — பஞ்சாயத்து |
| நாசூக் | | — நாகரிகம் |
| முஸ்தீப் | | — முசுதீப்பு (எச்சரிக்கை, ஆயத்தம்) |
| லங்கோட் | | — இலங்கோடு (அரைக்கச்சை) |
| லாயக் | | — இலாயக்கு (தகுதி) |
| வக்காலத் | | — வக்காலத்து |

இலக்கண விதியை இயன்ற அளவுக்குப் பின்பற்ற வேண்டும் என்று கூறியமை நோக்கற்பாலது. உறுதியான வரம்பு கட்டி அதற்குள்ளேயே நின்று இலக்கியப் பணியாற்றுதல் இப்போதுள்ள நிலையில் இயலாத கருமமாகும். ''லீலாவதி'', ''ரூபாய்'', என்னும் இன்னோரன்ன புறமொழிச் சொற்களைத் தமிழில் எழுதும் போது இவ்விதி கண்டிப்பாகப் பின்பற்றக்கூடியதல்ல.

இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன்னர் Delhi நகரத்தைத் தமிழ் நாட்டவர் ''தில்லி நகர்'' என்று அழகாகச் சொன்னார்கள். சொல்வதற்கும் எழுதுவதற்கும், கேட்பதற்கும் இச்சொல் எவ்வளவு இனிமையாக இருக்கிறது; இந்த அழகிய பெயர் நவீன எழுத்தாளர் கையில் அகப்பட்டு 25 ஆண்டுகளில் அழிந்துவிட இப்போது ''டெல்கி'' ''டில்கி'' என்கிறார்கள். ஏன்? நமது கொழும்பு மாநகரத்தையே தென்னிந்தியாவில் உள்ள நவீன எழுத்தாளர் சிலர் ''கொழும்புவு'' ஆக்கிவிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. ''கொழும்புவில்'' தாம் கண்ட காட்சிகளையும் அடைந்த அனுபவங்களையும் ஒரு பிரபல தென்

னிந்தியப் பத்திரிகாசிரியராம் தமிழ் ''எழுத்தாளர்'' தம் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். அதனை வாசிப்பவர்களும் இந்த நவயுக ''எழுத்தாளரைப்'' பின்பற்றி கொழும்பு நகரத்தைக் ''கொழும்புவு'' என்று வழங்கி வந்தால் அதனையிட்டு நாம் ஆச்சரியப்படவேண்டியதில்லை. கொழும்பை ''கொழும்புவு'' ஆக்கியவாறே தில்லி மாநகரத்தையும் நமது நவயுக எழுத்தாளர்கள் ''டெல்கி'' ஆக்கிவிட்டார்கள்.

இன்னும் சில நவீன எழுத்தாளர்கள் நாவல்-காய்-நாவற்காய் என்று எமது மொழிமரபுக்கிணங்க எழுதாது நாவல்க்காய் என்றும் பல்க்கொதி என்றும் இன்னோரன்னவிதமாக எழுதிவருகிறார்கள்.

வழக்கமான மொழி முறையினைக்கைவிட்டு, தமிழ் மரபுக்கொவ்வாத இத்தகைய முறைகளைச் சிலர் கையாளுவதற்கு அவர்களின் புத்திக்கோளாறுதான் காரணம்: தமிழ்த் துறையில் பல்வேறு காரணங்களினால், பட்டமும் பதவியும் பெற்றிருப்பவர்கள்கூட இப்படிச் செய்கிறார்களே, நாமும் அவர்களைப் பின்பற்றினால் என்ன என்றும் சிலர் கேட்கலாம். படித்த ஒருவன் பைத்தியங்கொண்டு பனைமரத்தில் ஏறிப் பலகைக்காட்டினால், அவன் படித்தவன் என்ற காரணத்துக்காக அவனை எல்லாரும் பின்பற்றவேண்டும் என்பதல்ல.

இன்னும் ஒரு சிலர் எழுத்துச் சீர்திருத்தம் என்ற போர்வையில் ளை, னை, ணை என்பனவற்றை ளை, னை, ணை என்று எழுதிவருகிறார்கள். இப்படியான விபரீதப் போக்குகளை மொழிபெயர்ப்பாளர் தமது வசன நடையில் விலக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

பாலெல்லாம் நல்லாவின் பாலாகாது. அதுபோல அச்சில் வருவனயாவும் பின்பற்றத்தக்க வசனநடைகள் அல்ல; சிவபதமடைந்த சிவபாதசுந்தரப் பெரியார் ஒரு முறை கூறியாங்கு, சனநாயகமுறையினால் அளிக்கப் பட்டுள்ள சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்துபவர்களில் முதன்மையானவர்கள் இன்று முளைத்திருக்கும் எழுத்தாளர்கள் சிலர். சனநாயகத்துள் ஒளிந்துகொண்டு இவர்கள் எதனையும் பேசலாம். எதனையும் தம் மனம் போனபடி எழுதலாம். அவர்கள் புரிவது தமிழ்க் கொலை.

# 7. எளிமையும் இனிமையும்.

மற்றவர்கள் படித்துப் பயன்பெறுவதற்காகவே நூல்கள், கட்டுரைகள், வியாசங்கள் கதைகள், கடிதங்கள் என்பன எழுதப்படுகின்றன. எனவே, அவை படிப்பதற்குச் சுலபமாகவும் இனிமையாகவும் இருத்தல் வேண்டும். மொழிபெயர்ப்புக்களும் இந்த விதிக்குள் அடங்கும். ஆகவே, ஒரு மொழிபெயர்ப்பாளர் தாம் மொழிபெயர்த்திருக்கும் சட்டத்தொகுப்போ, நூலோ கட்டுரையோ வியாசமோ கதையோ கடிதமோ மற்றவர்கள் புரியத்தக்க விதத்தில் எழுதப்பட்டிருக்கிறதா என்பதனை முதலில் அறிந்துகொள்ளுதல் வேண்டும். ''காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு''. ஒருவர் சிருட்டித்தது அவருக்கு அழகாகவே தோன்றும். அதில் உள்ள பிழைகள், நூன தன்மைகள் அவருக்குப் புலப்படுவது அரிது. ஆகவே, அவர் அதனை வெளியிடமுன் தக்க ஒருவருக்குக் காட்டி அவர் மதிப்பைப் பெற்றுக் கொள்ளுதல் நலம்.

ஒருவர் எப்படிப்பட்ட திறமைசாலியாயினும் அவருடைய முதல் மொழிபெயர்ப்பு பூரணமாக இராது. அது ஒரு கட்டிடத்தின் மேல்வேலையைப் போலவே இருக்கும். கட்டிடத்துக்கு வேண்டிய அத்திவாரத்தையிட்டு அதற்குமேல் இரும்புச் சலாகைகள் நிறுத்திய மாதிரியே அது. அது கட்டிடமாகாது. சுவர்வைத்து, சாந்துபூசி, வெள்ளையடித்து மேலே கூரைக்கு ஓடு இட்டபின் தான் கட்டிடம் பூர்த்தியாகும். இதுபோலவே மொழிபெயர்ப்பும். தாம் எடுத்துக்கொண்டதை மொழிபெயர்த்து முடிந்ததும் மொழிபெயர்ப்பாளர் அதனை மீண்டும் மீண்டும் சரிபார்த்தல் வேண்டும்.

மொழிபெயர்ப்பாளர் எளிய இனிய வசனநடையைக் கைக்கொள்ளுதல் வேண்டும். இது திடீரென வர மாட்டாது. ''சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்''; வசன நடையும் ஒரு வித சித்திரம் தான். அதற்குக் கைப்பழக்கம் வேண்டும்.

இனிமையான, எளிமையான—மற்றவர்கள் புரிந்து கொள்ளத்தக்கதான-வசன நடையிற் போதிய பயிற்சி இல்லாதவர்களே மொழிபெயர்ப்பில் 'ஆங்கிலத்தமிழை' எழுதி, கேட்பவர்களையும் வாசிப்பவர்களையும் மலைக்க வைக்கிறார்கள்.

கீழே ஆங்கிலத்தில் ஒரு வசனபாகம் தரப்பட்டிருக்கிறது. இனிமையும் எளிமையுமற்று, புரிந்துகொள்ள முடியாத ஒரு மொழிபெயர்ப்பும் அதற்குத் தரப்பட்டிருக்கிறது. அதனை நோக்குக.

> While demands for new linguistic states are being made all over the country it is understood that some M. Ps. are mobilising support for the formation of an Anti-linguistic States group in Parliament and outside. These members are of the opinion that language should not be the criterion for the formation of a state. Otherwise there would be no limit to the number of states that would be asked for, many of which, if established, are bound to be inconvenient burdens on the Centre.

> "புதிய மொழிவாரி இராச்சியங்கள் அமைக்கப்படவேண்டுமென்ற கோரிக்கை தேசம் முழுவதும் செய்யப்படும் பொழுது சில பாராளுமன்றத்தங்கத்தவர்கள் மொழிவாரி இராச்சிய விரோதக் குழுவை பாராளுமன்றத்துக்குள்ளும் வெளியேயும் அமைப்பதற்கு ஆதரவு சேர்த்து வருகிறார்கள் என்று தெரிகிறது. ஒரு இராச்சிய அமைப்புக்குரிய அளவையாக மொழி இருக்கக் கூடாது என்ற அபிப்பிராயத்தினராக இவ்வங்கத்தவர்கள் இருக்கிறார்கள். இல்லையேல், அமைத்தால் மத்திய அரசாங்கத்தில் மேல் வசதியற்ற சுமைகளாகக் கட்டாயம் இருக்கப்போகும் அனேகம் இராச்சியங்களைக் கொண்ட கேள்விகளின் தொகைக்கு ஒரு எல்லை இருக்கமாட்டாது."



மேலேயுள்ளது மொழிபெயர்ப்பு என்ற போர்வையில் உள்ள ஒரு சொல்லடுக்கேயன்றி முறையான மொழிபெயர்ப்பல்ல. இச்சொல்லடுக்கிற் பொதிந்து இருக்கும் கருத்தையறிவதற்கு ஆங்கில மூலத்தைத் தேட வேண்டியிருக்கிறது மொழிபெயர்க்கத் தலைப்பட்டவர் ஒன்றில் தாம் எடுத்துக்கொண்ட வசனக்கொத்தைச் சரிவரப்புரிந்து கொள்ளவில்லை, அல்லது தாம் புரிந்து கொண்டதனை மற்றவர்களுக்கு உரியமுறையில் எடுத்துக்காட்டும் ஆற்றல் படைத்திருக்கவில்லை என்னும் முடிவுக்கே இம்மொழி பெயர்ப்பை வாசிப்பவர் வரவேண்டி இருக்கிறது.

மேலே காட்டிய ஆங்கில வசனக்கொத்தைப் பின் வரும் விதத்தில் மொழிபெயர்ப்பது பொருத்தமுடைத்தாகும்:

> "மொழிவாரியான இராச்சியங்களை நவமாக அமைக்கவேண்டும் என்ற உரிமைமுழக்கம் தேசமெங்கணும் செய்யப்பட்டுவருகிற இச்சந்தர்ப்பத்திலே பாராளுமன்றத்து அங்கத்தவர்கள் சிலர் மொழிவாரி இராச்சிய விரோதக்குழு ஒன்றனைத் தமைப்புக்குப் பாராளுமன்றத்துக்கு உள்ளும் புறமும் ஆதரவு திரட்டிவருகிறார்கள் என்று தெரிகிறது. ஒரு இராச்சிய அமைப்பின்பொருட்டு மொழியை அளவையாகக் கொள்ளவொண்ணாது: அப்படியின்றி மொழியையே அளவையாகக்கொண்டால் இவ்வாறாய இராச்சியக்கோரிக்கைகட்கு ஒரு எல்லை இருக்காது. இக்கோரிக்கைக் கிணங்கி இவ்வாறாக மொழிவாரி இராச்சியங்களை அமைத்தால் அவை மத்திய அரசாங்கத்துக்குத் தொந்தரவுக்கேதுவான சுமையாக விடுவது நிச்சயம் என்ற அபிப்பிராயத்தை இவ்வங்கத்தவர்கள் கொண்டிருக்கிறார்கள்"

மேலே காட்டிய இருமொழிபெயர்ப்புக்களை நோக்கும்போது எவருக்கும் புலப்படக்கூடியதொன்றுண்டு: முதல் மொழிபெயர்ப்பு சொல்லுக்குச் சொல்லாகச்செய்யப்பட்டிருக்கின்றபோதிலும் அதில் தெளி

வில்லை என்பதே; அது மாத்திரமல்ல: அதிற் கருத்துப் பிழையும் உண்டு. Are mobilising support for the formation of an anta linguistic States group in Parliment and outside

என்பதற்கு "மொழிவாரி இராச்சிய விரோதக் குழுவை பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அமைப்பதற்கு ஆதரவு சேர்த்து வருகிறார்கள்" என்பதில் குறித்த குழுவை பாராளுமன்றத்துக்குள்ளும் புறமும் அமைக்க என்ற கருத்துத் தரப்படுகிறது. ஆனால் உண்மை அதுவல்ல. குறித்த ஒரு குழுவை அமைப்பதற்கு பாராளுமன்றத்துக்குள்ளும் புறமும் ஆதரவு திரட்டிவருகிறார்கள் என்பதுவே உண்மைக் கருத்து. மேலெழுந்தவாரியாக ஒருவசனபாகத்தை வாசித்து விட்டு மொழிபெயர்க்கத் தொடங்குவதால் இப்படியான பிழைகள் ஏற்படுவது சர்வ சாதாரணம். மூல வாக்கியத்தின் உண்மைக் கருத்தினைக் கிரகித்தலின் பொருட்டு மொழிபெயர்ப்பாளர் அதனை ஒன்றுக்குப் பலமுறை வாசித்தல் வேண்டும்.

மேலே காட்டிய இரு மொழிபெயர்ப்புக்களுக்கு மிடையேயுள்ள பேதங்களை நோக்கவும்.

கீழே இன்னொரு வசனபாகம் தரப்படுகிறது. காலம் சென்ற தேசபக்தர் திரு. கொறெயா அவர்கள், சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களைப்பற்றிக் கூறியது அது:

In later years, in this centre of energy, a great man possessed of a keen and observant eye looked and saw in the distance the flow of the scattered sparks of individual enthusiasms smouldering in isolation towards extingui shment. And the great man arose and made hase; and he went forth and gathered up those far-flung embers, energised them with his burning patriotism and brought them together in one great life-giving furnace of national endeavour, in the crucible of which was shaped and formed



this, the Ceylon National Congress. The Congress is the off spring of the late Sir Ponnambalam's noble enthusiasm".

தீவிர தேசபக்தராம் திரு. கொறெயாவின் கற்பனையுலகச் சஞ்சாரத்துத் தீவிரப்போக்கும் அவரது உணர்ச்சிப் பெருக்கும் இந்த வசனபாகத்தில் அப்படியே பிரதிபலிக்கிறது. இதனை எமது மரபுப்படி கருத்துப்பிசகாது, உணர்ச்சி வழுவாது மொழிபெயர்ப்பாம்:-

திட்சண்ய நோக்கும் தீர்க்கமிகு பார்வையும் படைத்த ஒரு மகானுபவர் பலவித சக்திகளுக்கும் மத்தியத்தானமாயுள்ள இந்த மாநகரத்தில் இருந்து தம்பார்வையைச்செலுத்தி தேசோத்தாரணத்திருப்பணி செய்யவேண்டித் துடிதுடித்தவர்களின் உத்வேகப்பொறிகள் அங்கொன்று இங்கொன்றாகச் சிதறித் தகதகவென்று மின்னுவதைத் தூரத்திலே கண்டார். இப்பொறிகள் தேடுவாரற்றுத் தணலாகித் தாமே அவியும் நிலையை எய்திக்கொண்டிருந்தன. கண்ட மகானுபவர் எழுந்தார்: விரைந்தார்; பலபட விரவி மின்னிக்கிடந்த தணல்களையெல்லாம் ஒன்றுசேர்த்தார். கொழுந்துவிட்டெரியும் தம்தேசபக்திப் பெருந்தீயைக்கொண்டு அவற்றுக்குப் புத்தொளி கொடுத்தார். அவை எல்லாவற்றையும் ஒருங்குதிரட்டித் தேசத்திருத்தொண்டு என்ற மகா சஞ்சீவி உலையிற் சேர்த்தா . அத்தகையதான சஞ்சீவிக் குகைப்புடத்தில் இருந்து உருப்பெற்றதுவே இந்த இலங்கைத் தேசீயமகாசபை. தேசீயமகாசபை காலம்சென்ற சேர் பொன்னம்பலம் அவர்களின் மகோன்னத உற்சாகத்தில் விளைந்த ஒரு தாபனமாகும்."

ஒரு வசனக்கொத்தை அல்லது ஒரு வசனத்தொடர் அல்லது ஒரு வசனபாகத்தை மொழிபெயர்க்கத் தொடங்கமுன் அதனை ஒன்றுக்குப் பலமுறை நன்கு வாசித்து அதன் கருத்தை நல்லாக விளங்கிக்கொள்ளுதல் வேண்

டும். அதற்குப் பின்னர் மொழிமரபு பிறழாது இலகுவான, தெளிவான நடையில் மொழிபெயர்த்தல் வேண்டும். மொழிபெயர்த்ததை மீண்டும் மீண்டும் சரி பார்த்தல் வேண்டும்.

சில சமயங்களில் ஆங்கிலத்திலோ தமிழிலோ மொழிபெயர்ப்புக்கெனத் தரப்படும் பகுதிகளில் கைப்பிழை அச்சுப்பிழை காரணமாக பிழைகள் இருந்து மொழிபெயர்ப்பாளரை மலைக்கவும் வைக்கும். அப்படியாக மலைப்புத் தோன்றும் சமயத்தில் மொழிபெயர்ப்பாளர் குறித்த பகுதியை ஒன்றுக்குப் பலமுறை வாசித்து முதலாசிரியர் எதனைக் கருதியிருக்கிறார் என்பதனைத் தமது அகக்கண்ணால் நோக்கி அறிந்து கொள்ளுதல் வேண்டும். உடைநெகிழ்வான் கை எப்படித் தன்னையறியாமலே அவ்வுடையைத் தாங்க முயற்சிக்குமோ அப்படியே தமது எழுதுகோலும் பிழையைக் கண்டவுடன் தானாக நிற்கும் பழக்கத்தை ஒரு மொழிபெயர்ப்பாளர் அப்பியாசத்திற்கொண்டுவருதல் வேண்டும்.

ஒரு மொழிபெயர்ப்பாளர் சகல துறைகளிலும் தேர்ச்சியடைந்தவராக இருப்பர் என்று காத்திருத்தல் முடியாது. ஒருவர் சட்டத்துறையிற் பண்டிதராக இருக்கலாம். வேறொருவர் சரித்திரத்தில் வல்லுனராக இருக்கலாம். அந்த அந்தத் துறைவல்லாரிடம் தான் அவ்வத்துறை மொழிபெயர்ப்புக்களைப் பொறுப்பித்தல் சாலச் சிறந்தது. ஆனால் அப்படியாப் பொறுப்பிக்கக் கூடிய நிலை இப்போது இல்லை. ஒரு துறையில் அல்லது சில துறைகளில் வல்லவராய் பொதுவான மொழிபெயர்ப்பில் அனுபவம் படைத்தவராய் உள்ளவரே பலதுறை மொழிபெயர்ப்புக்களையும் செய்யவேண்டி இருக்கிறது. தமக்குப் பூரண அறிவு இல்லாத விடயத்தை மொழிபெயர்க்குமாறு விதிக்கப்படும் மொழிபெயர்ப்பாளர் அத்துறையில் வல்லாரையடைந்து அவர்களின் உதவியைப் பெற்றுத் தமக்கு அளிக்கப்பட்ட மூலக்கிரந்தத்தின் கருத்தை மேலெழுந்தவாரியாகவன்றி, நல்லாக, ஐயம் திரிபற, அறிந்து கொள்ளுதல் வேண்டும், அதில்



வரும் கலைச்சொற்களுக்கு ஏற்ற சமபதங்களை ஆராய்ந்து பெற்றுக் குறித்துக் கொள்ளுதல் வேண்டும்.

மொழிபெயர்ப்பாளர் எத்தகையதான வசனநடையைக் கையாளவேண்டும் என்பது இன்னொரு கேள்வி. உலகின் கண் உள்ள எம்மொழி எழுத்தாளரும் தத்தமக்கென ஒரு நடையைக்கொண்டிருக்கிறார்கள். அந்தநடை அவரவரின் உணர்ச்சிவேகத்தையும் பெற்ற கல்விப்பின்னணியையும், சில சந்தர்ப்பங்களில், சூழ்நிலையையும் பொறுத்திருக்கிறது எனலாம். ஆனால் ஒரு மொழிபெயர்ப்பாளர் தமது மொழிபெயர்ப்பில் தமக்கென ஒரு நடையினை அல்லது பாணியினை வகுத்துக்கொள்ள முடியாது. மூலக்கிரந்தம் எந்த நடையில், எந்தப் பாணியில், எழுதப்பட்டிருக்கிறதோ அந்த நடை அந்தப் பாணியினை மொழிபெயர்ப்பாளர் இயன்ற அளவுக்குப் பின்பற்றுதல் வேண்டும் ஆகவே மொழி பெயர்ப்பாளர் பலவித நடைகளைக் கையாண்டு எழுதுவதில் வல்லுநராகவும் இருத்தல் வேண்டும்.

தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளையும் சிறந்த வார, மாத வெளியீடுகளையும் மொழிபெயர்ப்பாளர் ஒழுங்காகப் படித்துவருதல் வேண்டும். இன்றைய அரசியல் பொருளாதாரம் சம்பந்தமாக தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றோர் தமிழில் எழுதி வரும் சிறந்த நூல்களையும் படித்துவருதல் வேண்டும். அப்படிச் செய்து வருவதால் மொழிபெயர்ப்பாளர் தமது கலைச்சொல்லறிவைப் பெருக்கிக் கொள்ளுவார். அத்துடன் சுலபமான வசனநடையினையும் எழுதப் பயின்று கொள்ளுவார்.

மொழிபெயர்ப்பில் இயன்ற அளவுக்கு இலகுவான வசனநடையினையே பின்பற்றுதல் வேண்டும். அரசாங்க மொழிக் கொமிசன் தனது இரண்டாவது இடையறிக்கையிற் காட்டியபிரகாரம் மொழிபெயர்ப்பானது, "மற்றவர்கள் புரிந்து கொள்ள முடியாத வசனங்கள் வசன நடைகள், படாடோபமான ஆரிய இரவற்சொற்கள் என்பன இல்லாது எம்நாட்டிலே குலம் குடியிற்பிறந்துள்ள மக்களாற் பேசப்படும் சுலபமான வழக்காற்று மொழியினை ஆதாரமாகக் கொண்டிருத்தல்வேண்டும்."

# 8. சட்ட சம்பந்தமான மொழிபெயர்ப்பு

இன்று எமது நாடு சுதந்திரமடைந்திருக்கிறது. சுதந்திர இலங்கையின் அரசியலார் சகல நிருவாகக் கருமங்களையும் தேசமொழிகளிலேயே நடாத்தவேண்டும் என்பதிற் சிரத்தைகொண்டு வருகிறார்கள். விஞ்ஞானம், பொருளாதாரம், அரசியல் முதலியன சம்பந்தமான பாடப்புத்தகங்களையும் சட்ட சம்பந்தமான நூல்களையும் தமிழில் மொழிபெயர்க்க அல்லது புதிதாக ஆக்கத் துரித முயற்சி செய்து வருகிறார்கள். ஆனால். இந்த நல்ல முயற்சிக்கு விரோதமாக, ''இவையெல்லாம் தமிழில் முடியுமா?'' என்ற அவலக்குரல் இன்னொரு புறத்திற் கேட்கிறது அடிமைப்புத்தி தடித்தவர்களின் குரலேயிது. இது பற்றி யாழ்ப்பாணத்திலே நடந்த தமிழ் விழாவுக்குத் தலைமை வகித்த திரு. சி. ஆர். சீனிவாசன் அவர்கள் தம் பேருரையிற் கூறியமை நோக்கற்பாலது. அவர் கூறியதன் சாரம் வருமாறு:

''தமிழ் இலக்கியத் துறையிலோ அதன் ஆராய்ச்சியிலோ எனக்குப்போதிய அனுபவம் உண்டு என்று கூற நான் முற்படமாட்டேன்: ஆனால் அவற்றிலே கொஞ்ச அனுபவம் உண்டு; அதன் பயனாக நான் சந்தேக விபரீதமற அறிந்திருக்கும் உண்மை ஒன்றுளது. ஒருவன் தனது தாய்மொழியிலேயே தனது கருத்தை வெளியிடவேண்டுமென்ற ஒரு ஆர்வத்தைக் கொள்ளுவனேல் அவனை எந்தத் தடையும் பாதிக்க மாட்டாது. அவன் தனது தாய்மொழியில் வெளியிட முடியாத எண்ணமும் இல்லை, வெளிப்படுத்த முடியாத கொள்கையும் இல்லை, எடுத்துக் காட்டமுடியாத கருத்துமில்லை என்பதனை நான் கண்டேன். இப்படியான ஒரு ஆர்வம் அவனிடம் பிறப்பதை இதுவரை கெடுத்துவந்தது இந்நாட்டில் ஆட்சி செலுத்திய ஆங்கிலமாகும் வேற்றுமொழி; அது நீதி நிருவாகம், அரசியல் என்பனவற்றுக்குட் புகுந்து தலையோங்கி நின்றதால் தமிழன் இம்முயற்சியில் ஆர்வம் குன்றியிருந்தான். எங்கள் தமிழ்மொழி



தனிப்பெருந் தகைமையுடையது; எவ்வகைக் கருத்தையும் இனிதே காட்டும் பெற்றியது. மொழி என்பது உணர்ச்சியின் விளைவு; எனவே ஓங்கிய கருத்தும் ஊன்றிய உணர்ச்சியும் மனிதனுக்கு இருக்கும் வரையில் அவன் எக்கருத்தையும் எவ்வுணர்ச்சியையும் தன் சொந்தத் தாய்மொழியில் திறம்படச் செவ்விதே வெளிப்படுத்த முடியும்''

தமிழில் எத்தகைய நுணுக்கமான விஞ்ஞான நூல்களையும் அரசியல் சம்பந்தமான நூல்களையும் சட்ட நூல்களையும் இன்ன பிற நூல்களையும் அழகாக எழுதலாம் என்பதனைத் தமிழகத்து அறிஞர்கள் இப்போது நிரூபித்து வருகிறார்கள். அவர்களுடைய அரிய பணியிலே அதிகம் உதவி புரியக்கூடியவர்கள் மொழிபெயர்ப்பாளர்கள்.

மொழிபெயர்ப்பில் உணர்ச்சிக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பது ஒரு பொதுவிதி. அது சகலவித மொழிபெயர்ப்புக்களுக்கும் பொருந்தும். சட்ட சம்பந்தமான மொழிபெயர்ப்பில் உணர்ச்சிக்கு இடமளிக்கலாகாது என்று கூறுவாரும் உளர். உணர்ச்சிக்கு அதில் இடமுண்டு. ஆனால் அவ்வுணர்ச்சி கட்டையுடைத்துப் பெருகலாகாது. சட்ட இலக்கியங்களை மொழிபெயர்ப்பவர் ஒரு சட்டத் தயாரிப்பாளருடைய நிலையில் தம்மை வைத்துக்கொண்டு அவருக்குரிய உணர்ச்சி பாவத்துடன் தம் கருமத்தை யாற்றவேண்டும். சட்டக் கருமங்களில் இயலுமானவரை சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தல் வேண்டும். சட்ட சம்பந்தமான வசனங்களின் ஒவ்வொரு சொல்லும் முக்கியமானது. ஒரு சொல்லின் மொழிபெயர்ப்பில் அற்பமான தவறு நேர்ந்தாலும் அது விபரீதத்திற்கொண்டு போய் விட்டுவிடும். எனவே அத்தகைய மொழிபெயர்ப்பில் ஈடுபடுவோர் அதி சாவதானமாக இருத்தல் வேண்டும்.

சட்ட சம்பந்தமான இலக்கியங்களை மொழிபெயர்க்கும் போது நாம் அவதானிக்கவேண்டியதின்னொன்றும் உண்டு. Regulation என்ற ஆங்கிலச்சொல்லை [illegible]ணத்

துக்கு எடுத்து கொள்ளுவோம்: இதற்கு விதி, ஒழுங்குப்பிரமாணம், பிரமாணம், ஒழுங்கு, ஒழுங்குவிதி என்றெல்லாம் கருத்துக் கொடுப்பர். மொழிபெயர்ப்பவர் தமது மொழிபெயர்ப்பில் இப்படியாகப் பலவித கருத்துக்களைக் கொடுக்கலாகாது. Rule, Regulation, By law, Act, Statute, Ordinance, Bill, Law. என்னும் இன்னோரன்ன ஆங்கிலப்பதங்கள் ஒவ்வொன்றுக்குமிடையேயுள்ள நுணுக்க பேதங்களை யறிந்து அப்பேதங்களுக்கு இணங்க சமபதங்கள் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அச்சமபதங்களையே பின்னர் உபயோகித்துவருதல் வேண்டுமன்றி இடையில் வேறுசமபதம் புகுத்தலாகாது. உதாரணமாக Regulation என்னும் சொல்லுக்கு "ஒழுங்குவிதி" என்னும் சமசொல் தான் சரி என்று மொழிபெயர்ப்பாளர் கருதி அதனை உபயோகிப்பரேல் அச்சமசொல்லையே அவர் தமது முழு மொழிபெயர்ப்பிலும் உபயோகித்து வருதல் வேண்டுமன்றி இடையில் "பிரமாணம்" என்றோ "விதி" என்றோ எழுதலொண்ணாது. முன் ஒரு இடத்திற்காட்டியவாறு மொழிபெயர்ப்பாளரானவர் தம கருமத்தில் ஈடுபடமுன் முதனூலில் வரும் கலைச்சொற்களையும் அவற்றுக்குரிய தமிழ்பதங்களையும் ஆவலிப்படுத்தி வைத்திருத்தல் சட்டசம்பந்தமான மொழிபெயர்ப்பில் இன்றியமையாததாகும்.

சட்டசம்பந்தமான மொழிபெயர்ப்புக்கு உதாரணங்களாகச் சில வசன பாகங்கள்கீழே தரப்படுகின்றன:

# SURETY BOND

**1 Father or Guardian of Student**

KNOW ALL MEN BY THESE PRESENTS that we 1 Sinnathamby Mailvaganam Kandiah, Principal and 2 Ramanathar Suppiah of Vannarponnai West, Jaffna and Sinniah Nadarajah of Vannarponnai East, Jaffna, sureties are jointly and severally held and firmly bound unto the Principal, Jaffna Hindu-College for and on behalf of the Board of Directors of the Jaffna Hindu College and affiliated schools in the



**2 Name and Address of sureties**

sum of Five Hundred Rupees (Rs 500/) lawful money of Ceylon for which payment well and truly to be made we bind ourselves jointly and severally and our respective heirs, executors and administrators firmly by these presents. We the sureties hereby renouncing the beneficium ordinis divisionis et excussionis the meaning of which has been explained to us by our Proctor Mr. T. S. Sivaguru and with which we are now fully acquinted, all other privileges to which sureties as such are by law entitled.

**3 Name and Address of student.**

Whereas 3 Kandiah Sinnathurai of Vannarponnai West, Jaffna has of his free will and consent agreed to join and has been admitted on the 13th day of January 1951 into the Commercial class conducted by the Jaffna Hindu College and upon condition that the said 4 Sinnathamby Mailvaganam Kanthiah, Ramanathar Suppiah and Sinniah Nadarajah should

**4 Insert name of Principal and sureties**

enter into a bond in the abovementioned sum of Rupees Five Hundred (Rs 500/ ) as security for due payment to the Board of Directors of the Jaffna Hindu College and affiliated schools of the cost of any stores lost or damage caused to instruments and equipment if any through the wilfu neglect or gross carelessness of the said 3 Kanthiah Sinnathurai while pursuing his studies at the said com–

mercial Class and more fully set forth in clause 3 in the written Agreement dated the 10th. day of January 1951 hereto annexed.

Now the conditon of the above written obligation is such that If the said Sinnathamby Mailvaganam Kanthiah shall pay the cost of the stores lost or damage to instruments and equipment if any caused by the said 3 Kanthiah Sinnathurai through wilful neglect or gross carelessness while pursuing his studies in the said commercial class then his obligation shall be null and void but otherwise the same shall be and remain in full force and virtue.

Witness to Signature:
**S. Murugasu**

**S. M. Kandiah**
Signature of Principal

**R. Suppiah**
**S. Nadarajah**
Signature of Sureties

Witnesses to Signatures:
**V. N. Sunderam**
**T. T. Marimuttu**

I certify that the meaning of the expression beneficium ordinis divisionis et excussionis and the effect of renouncing the same were explained by me to the within-named sureties before the above-written bond was signed by them.

**T. S· Sivagura**
Proctor for the sureties

Date: 15—1—51
Address: Vannarponnai West, Jaffna.

# பிணை முறி

**1 மாணாக்கனின் / மாணாக்கியின் தகப்பன் அல்லது பாதுகாவலர்**

**2 பிணையாளிகளின் பெயர்களும் விலாசங்களும்**

*இத்தாற் சகலரும் அறிக: யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கைச்சேர்ந்த 1 சின்னத்தம்பி மயில்வாகனம் கந்தையா முதல் ஆள், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கைச் சேர்ந்த 2 இராமநாதர் சுப்பையா, யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கை சேர்ந்த சின்னையா நடராசா பிணையாளிகள் ஆகிய நாம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியினதும் அதனோடிணைக்கப்பட்டுள்ள பாடசாலைகளினதும் அதிகார சபை*யின் பொருட்டும் அச்சபையின் சார்பாகவும் கடமையாற்றும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியருக்கு இலங்கையின் சட்டபூர்வமான பணம் ஐந்நூறு ரூபாத் (500/- ரூபா) தொகையினை முறையாகவும் உண்மையாகவும் செலுத்தற்கு எங்களை ஒருமித்தும் தனித்தும், எங்களெங்களுக்குரியவர்களான உரிமைக்காரர் பராமரிப்புக்காரரையும் இத்தால் உறுதியாகக் கட்டுப்படுத்திக்கொள்ளுகிறோம். பிணையாளிகளான நாம் எமது பிறக்கிராசி●*

---

* Board—குழு; Director—இயக்குநர்; ஆகவே, Board of Directors - இயக்குநர் குழு என்றிருக்க வேண்டும் என்றும் வாதிக்கலாம். ஆனால் சென்ற 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக Board of Directors of the Jaffna Hindu College என்பதனை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகார சபை என்றே தமிழில் வழங்கி வருகின்றனர். அப்படி வழங்கப்படுவது பிழையுமல்ல. அப்படியாக வழங்கப்பட்டு வந்ததை இனி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இயக்குநர் குழு என்று நவமாக அழைத்தல் சம்பந்தப்பட்டுள்ளோருக்கு இடைஞ்சல் விளைக்கவும் ஏதுவாகும்.

● பிறக்தர், பிரக்கதோர், தரணி என்றும் கூறுவர்.

திரு. தி. ச. சிவகுரு அவர்கள் பெனிபிசியம் ஓடினிஸ் டிவிசியோனிஸ் எற் எக்ஸ்கசியோனிஸ்* என்னும் சொற்றொடரின் கருத்தை விளக்க அதனை நாம் பூரணமாக விளங்கி அதில் கருதப்பட்டுள்ள நன்மைகளையும் பிணையாளிகள் என்ற தன்மையில் சட்ட பூர்வமாக உரிமை கொண்டுள்ள ஏனைய சகல சலாக்கியங்களையும் இத்தாற் கைவிடுகிறோம்.

**3 மாணாக்கன்/ மாணாக்கி பெயர்**

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கைச்சேர்ந்த 3 கந்தையா சின்னத்துரை சுயேச்சையாகவும் தனது மனப்பூர்வமான சம்மதத்துடனும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியினால் நடாத்தப்படும் வணிபவியற் பயிற்சி வகுப்பில் சேர்ந்துகொள்ள உடன்பட, சொல்லப்பட்ட 4 சின்னத்தம்பி மயில்வாகனம் கந்தையா, இராமநாதர் சுப்பையா, சின்னையா நடராசா ஆகியவர்கள் சொல்லப்பட்ட 3 கந்தையா சின்னத்துரை சொல்லப்பட்ட வணிபவியற் பயிற்சி வகுப்பில் தமது பயிற்சியைப் பெற்றுக்கொண்டு வருங் காலத்திலே தமது புத்தி பூர்வப் பராமுகத்தாலோ தடித்த அவதானமின்மையாலோ ஏதும் பொருள்கள் இழப்பின் அவ்வாறிழக்கப்படும் பொருள்கள் முழுவதுக்குமுரிய விலையை அல்

**4 முதலாளின் பெயரையும் பிணையாளிகளின் பெயர்களையும் குறிக்க**

* இச்சொற்றொடர் இலத்தீன் மொழியில் உள்ளது. இதனை அப்படியே ஆங்கிலத்திற் சேர்த்தவாறு தமிழிலும் கொள்ளுவதுதான் பொருத்தமாகும். ஆங்கிலத்தில் பிணைமுறியை எழுதினாலும் இந்த இலத்தீன் சொற்றொடரை விளங்க ஒரு பிறக்கிராசியிடம் போகவேண்டியிருக்கிறது. அச்சொற்றொடரை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விட்டால் பிறக்கிராசியிடம் போகவேண்டிய அவசியமே இல்லை.



லது கருவிகள் உபகரணங்களுக்கு ஏதும் சேதம் இழைப்பின் அச்சேதம் முழுவதுக்குமுரிய நட்டத்தை இதன் கண்ணும், இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 1951ம் ஆண்டு ஜனவரிமாதம் 10ம் திகதியிடப்பட்டுள்ள எழுத்துமூலமான உடன்படிக்கையின் 3ம் உறுப்புவாசகத்திலும் இன்னும் பூரணமாக விபரிக்கப்பட்டிருக்கிறபடிக்கும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியினதும் அதனுடன் இணைக்கப்பட்ட பாடசாலைகளதும் அதிகாரசபைக்கு உரியமுறையில் இறுப்பதற்குரிய உத்தரவாதமாக மேலே காட்டப்பட்ட ஐஞ்ஞூறு ரூபாய்த் (500/-ரூபா) தொகைக்கு ஒரு முறியினை எழுதிக்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் 1951ம் ஆண்டு ஜனவரி மாதம் 18ம் திகதி சொல்லப்பட்ட அவ்வகுப்பிற் சேர்க்கப்பட்டிருக்கிறார்;

**3 மாணாக்கனின்/ மாணாக்கியின் பெயர்**

மேலே யெழுதப்பட்டுள்ள கடமைப்பாட்டின் நிபந்தனை யாதெனில் சொல்லப்பட்ட 3 கந்தையா சின்னத்துரை குறித்த பயிற்சிவகுப்பில் தனக்குரிய பயிற்சியைப் பெற்றுக்கொண்டுவரும் காலத்தில் தனது புத்திபூர்வப் பராமுகத்தாலோ தடித்த அவதானமின்மையாலோ ஏதும் பொருள்கள் இழப்பின் அவ்வாறிழக்கப்படும் பொருள்களுக்குரிய விலையை அல்லது கருவிகள் உபகரணங்களுக்கு ஏதும் சேதம் விளைப்பின் அச்சேதத்துக்குரிய நட்டத்தை, சொல்லப்பட்ட 5 சின்னத்தம்பி மயில்வாகனம் கந்தையா இறுப்பதாகில் இக்கடமைப்பாடு பெலமற்று அற்றுவிடும்:

**5 முதல் ஆளின் பெயர்**

இல்லையேல் குறித்த இக்கடமைப்பாடு முழுச்சக்தியும் குணமும் கொண்டு தொடர்ந்திருக்கும்.

*சி. ம. கந்தையா*
*முதல் ஆளின் கையொப்பம்*

*கையொப்பத்துக்குச் சாட்சி*

*பிணையாளிகளின் கையொப்பங்கள்*

*இ. சுப்பையா*
*சி. நடராசா*

*கையொப்பங்களுக்குச் சாட்சி*

*பெனிபிசியம் ஓடினிஸ் டிவிசியோனிஸ் எற் எக்ஸ்கசியோனிஸ் என்னும் சொற்றொடருக்கான கருத்தையும் அதிலடங்கிய நன்மைகளைக் கைவிடுவதன் பாதிப்பையும் இதிற் பெயர் காட்டிக் குறிப்பிடப்பட்டுள்ள பிணையாளிகளுக்கு அவர்கள் மேலேயெழுதப்பட்டுள்ள முறிக்குக் கையொப்பமிடுவதற்கு முன் விளக்கியுள்ளேன் என்பதனை உறுதிப்படுத்துகிறேன்.*

*தி. ச. சிவகுரு*
*பிணையாளிகளின் பிறக்கிராசி*

ii

## AGREEMENT

**1 Father or Guardian of the Student** / **2 Student**

ARTICLES OF AGREEMENT made this 10th. day of January, 1951 between 1 Sinnathamby Mailvaganam Kanthiah of Vannarponnai West, Jaffna of the first part, 2 Kanthiah Sinnathurai of Vannarponnai West, Jaffna of the second part and 3 Arambu Coomaraswamy, Principal, the Jaffna Hindu College (who with his successors in office as Principal the Jaffna Hindu College, is hereinafter referred to as the Principal, the Jaffna Hindu College) for and on behalf of the Board of Directors of the Jaffna Hindu College and its affillated schools of the third part.



**3 Principal, The Jaffna Hindu College**

Whereas the said Sinnathamby Mailvaganam Kanthiah has applied to the said Arambu Coomaraswamy to admit his son, the said Kanthiah Sinnathurai into the Commercial Class conducted at the said Jaffna Hindu College and the said Arambu Coomaraswamy has agreed to do so in the manner and on the terms hereinafter appearing.

NOW THESE PRESENTS WITNESSETH AS FOLLOWS –

1 The said Kanthiah Sinnathurai with the consent of his father the said Sinnathamby Mailvaganam Kanthiah hereby of his own free will and consent agrees with the Principal, the Jaffna Hindu College that he will well and faithfully pursue his studies at the said Commercial Class conducted at the said Jaffna Hindu College.

2. The Instructors appointed by the Board of Directors of the Jaffna Hindu College and affiliated schools will duly train the said Kanthiah Sinna-

thurai at the said Commercial Class conducted at the said Jaffna Hindu College and the Principal, the Jaffna Hindu College will pay him as inclusive allowance during the period of his stay at the said Class at the said College at the rate of thirty rupees (Rs. 30/-) per mensem.

3. The said I Sinnathamby Mailvaganam Kanthiah shall on the admission of the said 2 Kanthiah Sinnathurai to the Commercial Class enter into a bond with two sureties conditioned for the payment of Rupees five hundred (Rs. 500/-) to meet the cost of stores lost or damage to instrument and equipment caused by the wilful neglect or gross carelessness of the said 2 Kanthiah Sinnathurai while pursuing his studies in the said Commercial Class.

4. The Principal, the Jaffna Hindu College shall be at liberty to rescind this agreement on account of the negligence or failure to attend to duty, idleness, insubordination or failure to complete satisfactorily the examinations prescribed during the course of training or misconduct on the part of the said 2 Kanthiah Sinnathurai and to dismiss him from the said Class, and in the event of such dismaissal the said 2 Kanthiah Sinnathurai shall not be entitled to any of the priveleges hereby con-



ferred on him but the said I Sinnathamby Mailvaganam Kanthiah or 2 Kanthiah Sinnathurai shall thereupon refund to the Principal, the Jaffna Hindu College the total cost including the monthly payments made to the said 2 Kanthiah Sinnathurai while at the said Commercial Class incurred by the said Principal, the Jaffna Hindu College in respect of the training of the said 2 Kanthiah Sinnathurai at the said Class save and except in the case of his resigning his appointment through illness not brought in by his own misconduct and certified as such by a government recognised Medical Practitioner appointed for the purpose by the Board of Directors of the Jaffna Hindu College and its affiliated schools, or failure in the said examinations not due to his negligence or lack of diligence, while being trained at the said Class.

5. Nothing herein contained shall be deemed to imply that the said Kanthiah Sinnathurai will be offered employment by the Board of Directors of the Jaffna Hindu College and its affilited schools on the completion of the training at the said Commercial Class.

In witness whereof

**A. Coomaraswamy.**
Principal,
The Jaffna Hindu College.

**1. S. M. Kanthiah.**
**2. K. Sinnathurai**

# உடன்படிக்கை

1 மாணாக்கன்/ மாணாக்கியின் தகப்பன் அல்லது பாதுகாவலர்

2 மாணாக்கன் மாணவி

3 யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கைச் சேர்ந்த 1 சின்னத்தம்பி மயில்வாகனம் கந்தையா முதலாம் பகுதியாகவும் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை மேற்கைச்சேர்ந்த 2 கந்தையா சின்னத்துரை இரண்டாம் பகுதியாகவும் (தாமும் தமக்குப்பின்னர் யாழ்ப் பாணம் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரிய ராகப் *பதவி வகிப்போரும் இதனகத் துப்பின்னர் யாழ்ப்பாணம் இந்துக்கல் லூரிப்பிரதமாசிரியர் எனக்குறிப்பிடப் படுபவருமாய) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப்பிரதமாசிரியர் 3 ஏரம்பு குமார சுவாமி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி யினதும் அதனுடன் இணைக்கப்பட் டுள்ள பாடசாலைகளினதும் அதிகார சபையின் பொருட்டும் அதன் சார்பாக வும் மூன்றாம் பகுதியாகவும் 1951ம் ஆண்டு ஜனவரி மாதம் 10ம் திகதி செய்துகொண்டுள்ள உடன்படிக்கை விதிகள்.

மேலே சொல்லப்பட்ட 1 சின்னத் தம்பி மயில்வாகனம் கந்தையா ஆகிய வர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியினால் நடாத்தப்படும் வணிபவியற் பயிற்சி வகுப்பில் தனது மகன் ஆகிய கந்தையா சின்னத்துரை என்பவரைச் சேர்க்க வேண்டுமென்று விண்ணப்பிக்க இதன் கீழ்க் காணப்படும் முறைகளின் பேரி

* முந்திய பிணைமுறியில் ஆங்கிலப் பிரதியில் வரும் Principal என்றசொல்லுக்கு முதல் ஆள் என்று சமபதம் கொடுக்கப்பட்டிருப்பதனையும் ஈண்டுப்பிரதமாசிரியர் எனக்கொடுக்கப்பட்டிருப்பதனையும் நோக்குக.



லும் நிபந்தனைகளின் பேரிலும் அவ் வாறு செய்ய சொல்லப்பட்ட ஏரம்பு குமாரசுவாமி உடன்பட்டிருக்கிறபடி யால்

## இத்தாற் சகலருக்கும் தெரிவிக்கப் படுவது யாதெனில்

1. சொல்லப்பட்ட 2 கந்தையா சின் னத்துரை தனது தகப்பன் ஆகிய சொல் லப்பட்ட, சின்னத்தம்பி மயில்வாகனம் கந்தையா என்பவரின் சம்மதத்துடன் சொல்லப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடாத்தப்படும் வணிபவி யற்பயிற்சிவகுப்பில் சேர்ந்து முறையாக வும் நேர்மையாகவும் தனக்குரிய பாடங் களைக் கற்றுக்கொள்ள சுயேச்சையாக வும் மனப்பூர்வமான சம்மதத்துடனும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப்பிரத மாசிரியருடன் உடன்படுகிறார்.

2. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி யினதும் அதனுடன் இணைக்கப்பட் டுள்ள பாடசாலைகளதும் அதிகார சபை யினால் நியமிக்கப்படும் போதகாசிரியர் கள் சொல்லப்பட்ட 2 கந்தையா சின் னத்துரை என்பவரை சொல்லப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடாத்தப்படும் வணிபவியற் பயிற்சி வகுப்பில் உரியவாறு பயிற்றிவர அவர் சொல்லப்பட்ட வகுப்பிற் படிக்கும் காலத்தில் மாதம் ஒன்றுக்கு முப்பது ரூபா (30 ரூபா) விகிதமான சகலதும் அடங்கிய படிப்பணத்தை யாழ்ப்பா ணம் இந்துக்கல்லூரிப்பிரதமாசிரியர் அவருக்குக் கொடுப்பார்.

3. சொல்லப்பட்ட 1 சின்னத்தம்பி மயில்வாகனம் கந்தையா என்பவர் சொல்லப்பட்ட 2 கந்தையா சின்னத்துரை என்பவர் குறித்த பயிற்சி வகுப்பில் சேர்ந்ததும் வகுப்பில் தம் பாடங்களைப் பயின்றுவரும் காலத்தில் தமது புத்திபூர்வப் பராமுகத்தாலோ தடித்த அவதானமின்மையாலோ இழக்கும் பொருள்கள் அல்லது சேதப்படுத்தும் கருவிகள் உபகரணங்களின் பெறுமதியினைச் சரிப்படுத்துவதன் பொருட்டு ஐஞ்ஞூறு ரூபா (500/- ரூபா) இறுப்பதற்குப் பொருந்திக்கொள்ளும் ஒரு முறியினை இரு பிணையாளிகளுடன் சேர்ந்து எழுதிக்கொடுத்தல் வேண்டும்.

4. சொல்லப்பட்ட 2 கந்தையா சின்னத்துரை என்பவர் தமக்குரிய கடமையை ஆற்றுவதில் பராமுகமாயிருந்தால் அல்லது தவறினால் அல்லது சோம்பலாகவிருந்தால் அல்லது கீழ்ப்படியாதிருந்தால், அல்லது பயிற்சிக்காலத்தில் விதிக்கப்படும் பரீட்சைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றாவிட்டால் அல்லது ஒழுங்கினமாக நடந்தால் அவற்றின் பொருட்டு இந்த உடன்படிக்கையைத் தவிர்த்துவிட்டு சொல்லப்பட்ட வகுப்பில் இருந்து அன்னவரை நீக்க யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர் உரிமையுடையவராவர். அப்படியான நீக்கம் செய்யப்படுமிடத்து சொல்லப்பட்ட 2 கந்தையா சின்னத்துரை என்பவர் தம் மீது பாரிக்கப்பட்டுள்ள சலாக்கியங்கள் எதற்கும் உரியராகாதிருப்பதுடன் தமது ஒழுங்கினம் காரணமாக



வன்றி வேறுகாரனத்தால் தேக சுகவீனம் அடைய அதனை இதற்கென யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியினதும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள பாடசாலைகளதும் அதிகார சபை நியமிக்கும் அரசாங்கக் கணிப்புப் பெற்ற ஒரு வைத்தியர் அத்தாட்சிப்படுத்துமிடதது அல்லது சொல்லப்பட்ட வகுப்பில் பயிற்சி பெறும் பொழுது தம் பராமுகம் அல்லது கவனக்குறைவு என்பவல்லாக் காரணங்களால் சொல்லப்பட்ட பரீட்சைகளில் சித்தியெய்தத் தவறுமிடத்தினையொழிந்த ஏனைய இடத்து சொல்லப்பட்ட 2 கந்தையா சின்னத்துரை என்பவரை சொல்லப்பட்ட வகுப்பிற் பயிற்றியது சம்பந்தமாக சொல்லப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியரால் சொல்லபபட்ட 2 கந்தையா சின்னத்துரை ஆகியவருக்கு மாதந்தோறும் கொடுக்கப்பட்டுள்ளதாகிய பணம் உட்பட்டுள்ள முழுச் செலவையும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியருக்குத் திருப்பிச் செலுத்தி வருதல்வேண்டும்.

5. சொல்லப்பட்ட வணிபவியற் பயிற்சி வகுப்பில் பயிற்சி முடிந்ததும் சொல்லப்பட்ட 2 கந்தையா சின்னத்துரை ஆகியவருக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியினதும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள பாடசாலைகளதும் அதிகார சபையால் வேலை கொடுக்கப்படும் என்பதனை இதனுட்காட்டப்படுபவை எதுவும் குறிப்பிடுகிறது எனக் கருதவொண்ணாது.

மேலே காட்டியதற்கத்தாட்சியாக

1 சி. ம. கந்தையா,
2 க. சின்னத்துரை.

ஏ. குமாரசுவாமி,
பிரதமாசிரியர்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

# The Ceylon (Constitution) (Amendments No. 3) Order In Council, 1947.

At the Court at Buckingham Palace, the 26th day of Nowember, 1947

Present:

THE KING'S MOST EXCELLENT MAJESTY IN COUNCIL.

WHEREAS by the Ceylon (Constitution) Order in Council, 1946, (hereinafter called "the Principal Order" provision was made (amongst other things), for the establishing of a Parliament in and for the Island of Ceylon:

AND WHEREAS the definition "Public Officer" in sub-section (1) of Section 3 of the Principal Order was amended by the Ceylon (Constitution) (Amendment No 2) Order In Council, 1947, (hereinafter called "the Amending Order")

AND WHEREAS by the Amending Order power was reserved for His Majesty, His Heirs and Successors to revoke and to or amend the Amending Order or any part thereof, as to Him or Them should seem fit:

AND WHEREAS it is expedient for the purpose of removing doubts, to make provision as to the time at which the amendment made in the Principal Order is to be construed as having taken effect:

NOW, THEREFORE, it is hereby ordered by His Majesty, by and with the advice of His Privy Council as follow:-

1. (1) This Order may be cited as the Ceylon (Constitution) (Amendment No. 3 Order in Council, 1947, and shall be construed as one with the principal Order.

   (2) This Order shall come into operation forthwith and shall be published in the Government Gazette.



# இலங்கை (அரசியலமைப்பு) (3 இலக்கத் திருத்தம்) அரசவைக் கட்டளை * 1947.

*1947ம் ஆண்டு நொவம்பர் மாதம் 26ம் நாள் பக்கிங்காம் அரண்மனையில் கூடிய இராசமன்றினில்;*

*சமுகம்;*

*அரசவையுடன் இருந்த அதி மாட்சிமை மிக்க இராசோத்தம மன்னர் பிரான்.*

(இதனகத்துப்பின்னர் பிரதான கட்டளையென வழங்கப்படும்) இலங்கை (அரசியலமைப்பு) அரசவைக் கட்டளையினுல் இலங்கைத்தீவிலே அத்தீவின் பொருட்டு (ஏனைய கருமங்களுடன்) ஒரு பாராளுமன்றத்தைத் தாபிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறபடியாலும்:

பிரதான கட்டளையில் 3ம் பிரிவு (1) உட்பிரிவில் "அரசாங்க உத்தியோகத்தர்" என்பதற்குரிய வரைவிலக்கணம் (இதனகத்துப்பின்னர் திருத்தக் கட்டளையெனப்படும்) 1947ம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) (திருத்தம் இல. 2) அரசவைக கட்டளையினுல் திருத்தப்பட்டுள்ளபடியாலும்:

தமக்கு அல்லது தங்களுக்குத் தகுதியெனக் காணும் விதத்தில் குறித்த திருத்தக் கட்டளையை அல்லது அதன் எப்பகுதியையேனும் நீக்குதற்கான அல்லது அதற்குச் சேர்ப்பதற்கான அல்லது சேர்ப்பதற்கும் திருத்துவதற்குமான தத்துவம் மாட்சிமை தங்கிய மன்னருக்கும் அவரின் உரிமைக்காரருக்கும் அவர் வழிப்பதவி வகிப்போருக்கும் குறித்ததிருத்தக் கட்டளையினுல் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறபடியாலும்.

சந்தேக நிவிர்த்திசெய்வதன் பொருட்டு பிரதான கட்டளையிற் செய்யப்பட்டுள்ள திருத்தக் கட்டளை எந்த நேரத்தில் பாதிப்புக்குவருகிறதென்பதைக் கணிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டியதவசியமானமையினுலும்:

---

* Order in Council: மந்தண ஆணை; இராஜசபைக்கட்டளை என்றும் சொல்வர். இராஜசபைச்சட்டம் என்றும் முன்பு வழங்கப்பட்டது:

தமது அரசவையின் மூலமும் அதன் ஆலோசனையுடனும் மாட்சிமை தங்கிய மன்னரால் பின்வருமாறு இப்போழுது இத்தால் ஆணையிடப்படுகிறது:

(1) இக்கட்டளை 1947ம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) (3ம் இல: திருத்தம்) அரசவைக்கட்டளையென வழங்கப்பட்டு பிரதான கட்டளையுடன் ஒன்றியது எனக் கணிக்கப்படுதல் வேண்டும்.

(2) இக்கட்டளை உடன் அநுட்டிப்புக்கு வந்து அரசாங்கக் கசெற்றில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

IV

Whenever an officer who has been serving the Governdment on a special agreement for a fixed term of service remains in the service of the government after the expiration of that term without any fresh agreement or without express renewal for a definite term of his previous agreement as a member of a permanent department under government, holding an office declared pensionable by notificatition such officer thereby ceases to be entitled to the stipulations made in his favour in the original agreement.

குறித்த ஒரு நிர்ணயகாலச் சேவைக்கென ஒரு விசேட உடன்படிக்கையின் பேரில் சேவைசெய்திருக்கும் ஒரு உத்தியோகத்தர் குறித்த அக்காலம் முடிந்தபிறகு ஏதும் புதிய உடன்படிக்கையைச் செய்துகொள்ளாமலோ தமது முந்திய உடன்படிக்கையை வரையறுக்கப்பட்ட ஒரு காலத்துக்கு விசேடமாகப் புதுப்பிக்காமலோ அரசாங்கத்தின் கீழுள்ள ஒரு நிரந்தரப்பகுதியின் அங்கத்தவராய், அரசாங்கத்தின் பகிரங்க அறிவித்தலின் மூலம் பெஞ்சனு*க்குரியது என அறிவித்தல்மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஒரு பதவியைத் தொடர்ந்து வகிக்கும் எப்பொழுதும் மூல உடன்படிக்கையிற் றமக்குச் சாதகமாக விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்குரியராகும் தன்மையை, அக்கருமத்தினால், இழந்துவிடுவார்.

*Pension: "இளைப்பாற்றுவேதனம்," "ஓய்வுக்காலச் சம்பளம்" என்றின்னோரன்னவிதமாகவும் சொல்வர்.



மேலே காட்டிய மொழிபெயர்ப்புதாரணங்கள் பூரணமானவை என்று சொல்ல முடியாது. சட்டசம்பந்தமான மொழிபெயர்ப்புக்களை எந்தமுறையிற் கையாளவேண்டும் என்பதைக்காட்டும் நோக்கத்துடனேயே இவ்வுதாரணங்கள் தரப்பட்டிருக்கின்றன; மொழிபெயர்ப்பாளர் இதுசம்பந்தமான விதியினின்றும் பிறழாது, "தமிழில் முடியாததொன்றில்லை, எல்லாம் முடியும், முடிப்போம்" என்ற திட நம்பிக்கையும் வைராக்கியமும்கொண்டு கருமம் ஆற்றுவரானால் "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களனைத்தும்" இறவாத புகழுடைய நம் தமிழ் மொழியில் வெகுசீக்கிரத்தில் உருவாக, உலக அரங்கிலே எமது தமிழன்னை தனிப்புகழை எய்துவாள் என்பதற்குச் சந்தேகமேயில்லை.

# 9. கலைச்சொற்கள்

கலைச்சொற்கள் ஆக்குவதும் மொழிபெயர்ப்புத் துறையின் ஒரு பகுதியாகும்.

ஆங்கிலத்திலே குறித்த சில பொருள்களையும் குறித்த சில கருமங்களையும் குறிக்க சில சொற்கள் பிரத்தியேகமாக உண்டு. இப்பொருள்களும் கருமங் களும் ஆட்களும் நம் பழம் தமிழ் நாட்டில் இருக்கவில்லை. இருந்திருந்தாலும் அவற்றின் சின்னங்கள் தேய்ந்து விட்டன.

எகிப்திலே Pyramids என்ற கோபுரங்கள் உண்டு அவற்றைக் குறிப்பதற்கு ஆங்கிலத்திற்போல ஒரே சொல்லு தமிழில் இல்லை. சிலர் பிரமீது என்கிறார்கள். சிலர் பிணக்கோபுரங்கள் என்கிறார்கள். இன்னும் சிலர் கூர்நுனிக்கோபுரங்கள் என்கிறார்கள். Government என்ற இன்னொரு சொல்லை எடுத்துக் கொள்வோம். இந்தியாவில் இருந்துவரும் பத்திரிகைகள் பல ''சர்க்கார்'' என்கின்றன சிலர் ''அரசாங்கம் என்கிறார்கள். வேறு சிலர் ''அரசினர்'' என்கிறார்கள். இன்னும் ஒரு சிலர் ''கவுண்மேந்து'' என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். இப்படியான பல திறப்பட சம பதங்களைப் பாடப்புத்தகங்களிற் கையாளுவதும் ஏனைய அரசாங்கப்பிரசுரங்களில் உபயோகிப்பதும் இற்றைக்குச் சிலகாலத்துக்குமுன் சர்வசாதாரணமாக இருந்தது. அந்த அந்தப் பொருளுக்கு அல்லது கருமத்துக்கு அந்த அந்தப் பதம்தான் என்ற ஒரு நியதியை ஏற்படுத்து வதே கலைச்சொல்லாக்கப் பணியின் நோக்கமாகும்.

மொழிபெயர்ப்பில் ஈடுபடுபவர் இப்படியான கலைச் சொற்கள் பலவற்றைச் சிருட்டிக்கவேண்டியும் ஏற்படும். பழைய நூல்களையாராய்ந்து தெரியவும் வேண்டி ஏற் படும். எப்படிச்செய்தாலும் கையாளப்படும் கலைச்சொற் கள் உச்சரிப்புக்குச் சுலபமாகவும் கேட்போர் வாசிப் போருக்கு இனிமை தரக்கூடியனவாயும் சுருக்கமானவை யாயும் சந்தேகவிபரீதத்துக்கு இடமளிக்காதனவாயும் இருத்தல்வேண்டும். ஒரு வேற்றுமொழிச் சொல்லுக்கு



தமிழில் பலகாலமாக ஒரு சமசொல் வழங்கப்பட்டு வந்திருப்பின், அதனைப் பொதுசனங்கள் தாராளமாக உபயோகித்துவந்திருப்பின், அது உண்மைக் கருத்துக்கு 100க்கு 100 விகிதம் பொருந்தாவிட்டாலும் அதனைத் தொடர்ந்து உபயோகித்துவருதல் பிழையல்ல. உதாரணமாக Daughter என்னும் ஆங்கிலச்சொல்லுக்கு ஆதியில் பால் கறப்பவள் என்ற கருத்து இருந்தது. ஆனால் அது காலப்போக்கில் மாறி ஒருவரின் பெண்மக வைக்குறிக்கும் சொல்லாயிற்று. Mathematics என்ற சொல்லுக்கு முன்னர் அறிவு என்னும் கருத்து இருந்தது. ஆனால், பின்னர் அறிவின ஒரு துறையாகிய கணிதத்தை மாத்திரம் குறிப்பிடுவதாயிற்று.

கலைச்சொல்லாக்கப்பணியில் ஈடுபடுவோர் இயன்ற வரையில் தமிழ்ச் சொற்களையே எடுத்து ஆளுதல் வேண்டும்.

> ''எதிரியை சுப்ரீம் கோர்ட்டிற்கு கொமிற் செய்ய மாஜிஸ்திரேட் செய்த ஆர்டரை எதிரிக்காக ஆஜ ரான அட்வக்கேட் எதிர்த்து அந்த ஆர்டரை வாபீஸ் வாங்க வேண்டும், இல்லையேல் தான் பிரிவி கவுன்சில் வரை அப்பீல் செய்து ஜட்ஜ் மென்டு பெறத்தயார் என்றார்''

என்பது நவயுகத் தமிழ்ப் பத்திரிகைகளில் தினந் தோறும் வெளிவரும் 'செந்தமிழாக்' சங்களுக்கு ஒரு மாதிரி. மேலே காட்டிய வசனத்திலே தமிழ் மரபுக் கொவ்வாது எடுத்தாளப்பட்டுள்ள வேற்றுச்சொற்கள் தடித்த எழுத்திற் காட்டப்பட்டிருக்கின்றன. அச்சில் வெளிவருவன யாவும் சரி என்று நினைக்கும் பொதுசனங் கள் மேலே காட்டிய ''தமிழை' வாசித்து தமிழ் என்று கொள்ளுகிறார்கள். அது தமிழல்ல அன்று பச்சை வண்ணக்கண்ணனைக் கொல்லத் தாயுருவில் வந்தாள் பூதகி இன்று கன்னித் தமிழை எண்ணிக் கொல்லவந் தது இப்போலித்தமிழ்.

இப்போது சிலகாலமாக எமது மொழிமரபு காற்றிற் பறக்கவிடப்பட்டு மொழித்தூய்மை பாதிக்கப்பட்டிருப்

பதற்கு ஒரு சில பத்திரிகைகளும் காரணம் என்பதனை வருத்தத்துடன் தெரிவிக்கவேண்டியிருக்கிறது. பத்திரிகைகள் என்பன இன்று வாசித்துவிட்டு இன்று வீசி மாதமுடிவில் பழைய கடுதாசியாக கடைக்கு அனுப்பப் படுவனதாமே: ஆகவே, வசதிக்குத் தக்கதாக அவற்றை எழுதி அடித்துத் தள்ளவேண்டும் என்ற ஒரு மனப் பான்மை பத்திரிகை மொழிபெயர்ப்பாளருக்கிடையே இருக்குமானால் அது எமது மொழிக்கும் கலைக்கும் ஈற்றில் எமது இனத்துக்குமே கெடுதி விளைத்துவிடும். பத்திரிகை மொழிபெயர்ப்பாளர்களும் நிருபர்களும் ஆசிரியர்களும் தான் எங்கள் கன்னித் தமிழின் கண்கள்; கண்ணின் மணிகள். அவள் மூலமாகத் தான் தமிழன்னை உலகை நோக்குகிறாள்.

ஒரு பொருட்சாயல் உள்ள பல ஆங்கிலப் பதங்கள் இருககின்றன. உதாரணமாகப் பின்வரும் பதங்களை எடுத்துக்கொள்ளுவோம்:

| | |
|---|---|
| Clinic | Maternity Home |
| Dispensary | Medical Hall |
| Hospital | Nursing Home |
| Lying – in – Home | Pharmacy |
| Sanatorium | |

இச்சொற்கள் ஒவ்வொன்றும் ஆங்கிலத்தில் ஒவ்வொன்றைக் கருதுகின்றன. இவற்றுக்குரிய தமிழ்ப் பதங்களும் அவ்வாறே வேறு வேறு கருத்துக்களைக் கொண்டிருக்கத் தக்கதாக இருக்க கலைச்சொற்கள் ஆக்கப் படுதல் வேண்டும் Union என்பதற்கு சமாசம் என்று சமபதம் ஆக்கிவிட்டு பின்னொரிடத்தில் Federation என்பதற்கும் அதே சம பதத்தை உபயோகித்தல் பொருத்தமாகாது.

இன்னும் Emigration என்பதற்கு "வெளியேற்றம்" என்று இப்போது சாதாரணமாகச் சொல்கிறார்கள். அப்படியென்றால் Expulsion என்பதற்குச் சமபதம் என்ன?



இப்படியான மயக்கங்களை நீக்கி குறித்த ஒரு சொல்லுக்குக் குறித்த ஒரு சமபதத்தையே வகுக்க உதவுவது கலைச்சொல்லாக்கப்பணி.

ஒரு சொல்லுக்குச் சமபதம் கொடுக்குமுன் அதனால் ஏற்படும் பின்னல்களை மொழிபெயர்ப்பாளர் ஆராய்ந்து கொண்டு அதற்கிணங்கக் கருமம் ஆற்றுதல் வேண்டும்.

ஒரு பொருட்சாயற் சொற்றொகுதிகள் சில அவற்றுக்குரிய தமிழ்ப்பதங்களுடன் கீழே தரப்பட்டிருக்கின்றன. இச்சமபதங்கள் தீர்க்கமானவையல்ல. வித்தியாசம் வித்தியாசமான சமபதங்கள் கருத்துக்கேற்ப இருக்க வேண்டும் என்பதனைவற்புறுத்திக் காட்டும் பொருட்டே அவை தரப்படுகின்றன.

Clinic – பிணியாய்வுத்தானம், நோயாய்வுத்தானம்.
Dispensary — மருந்தகம்,
Hospital — ஆசுப்பத்திரி
Lying-in Home — பிரசவ விடுதி.
Maternity Home — கர்ப்பிணிகள் விடுதி,
Medical Hall — வைத்தியசாலை
Nursing Home — பரிகரிப்பு விடுதி,
Pharmacy — மருந்துச்சாலை,
Sanatorium — ஆரோக்கியத்தானம்,

★

Area — (நிலப்) பகுதி, நிலப்பரப்பு;
Beat — சுற்று
Circle — வட்டம்
Circuit — மண்டலம்,
Constituency — தொகுதி,
District — மாவட்டம்,
Diocese — மேற்றிராசனம்
Division — பிரிவு,
Electorate — தெரிவுப்பகுதி
Parish — கோயிற்பற்று; பங்கு,
Province — மாகாணம்,
Range — கருமவெல்லை
Region — பிரதேசம்.

Ward — வட்டாரம்,
Zone — வலயம்,

★

Caste — சாதி,
Clan — குலம்; கோத்திரம்
Class — வகுப்பு; வர்க்கம்
Community — சமுகம்,
Nation — தேசிய இனம்,
Nationality — தேசிய இனத்துவம்,
Race — சாதியம்,
Society — சமுதாயம்,
Tribe — இனம்,

★

Abbey — மடாலயம்,
Cathedral — மேற்றிராசனக் கோயில், மாவாலயம்;
Chapel — செபாலயம்,
Church — தேவாலயம்.
Convent — கன்னியர்மடம்,
Nunnery — பெண்துறவியர்மடம், சந்நியாசினி மடம்;
Mosque — மசூதி; பள்ளிவாசல்;
Priory — மடாதிபரிருக்கை
Synagogue — யூதாலயம்
Temple — கோவில், ஆலயம்

★

Advocate — அப்புக்காத்து; நியாயவாதி
Attorney — தரணி, அத்தரணி, அற்றோணி,
Barrister — பரீத்தர், நியாயதுரந்தரர்,
Counsel — நியாயாலோசகர்
Lawyer — சட்டவல்லுநர்
Pleader — வழக்குரைஞர்
Proctor — பிறக்கிராசி, பிறக்கதோர், வழக்கறிஞர்;
Solicitor — சொலிசித்தர்

★

Alley — சந்து, முடுக்கு, ஒரடிப்பாதை,
Avenue — மார்க்கம், சாலை
Highway — நெடுவீதி.



Lane — ஒழுங்கை,
Main Road — பெரு வீதி.
Passage — முடுக்கு,
Path — பாதை
Place — கோட்டம்.
Road* — வீதி, பாட்டை
Street — தெரு,
Thoroughfare — போக்கு வரத்துப்பாதை,
Trunk Road — இராச பாட்டை,

★

Assembly — மாமன்றம், மகாசபை; பேரவை,
Association — சங்கம்,
Board — குழு
Centre — நிலையம்,
Club — கழகம்,
Committee — கருமக்குழு;
Conference — மகாநாடு,
Congregation — (திருக்) கூட்டம்
Congress — மகாசபை; காங்கிரசு,
Conventicle — இரகசியசங்கம், சிற்சங்கம்,
Convention — இணக்கமன்றம், இணக்கவிதி; உடன்பாடு
Corporation — மாகழகம், ஆண்மைக்கழகம்
Council — சங்கம், சபை.
Court — மன்றம்; நீதிமன்றம்; அவை,
Establishment — தாபிப்பு, தாபனம்,
Federation — சம்மேளனம்
Institute — அமைப்பு
Meeting — கூட்டம்,

---

* Road, Street என்னும் இவ்விரண்டு சொற்களும் முறையே நெடுவீதியையும் குறுவீதியையும் கருதுவதாக இருந்தன; உ-ம் Galle Road, Kandy Road, Colombo Road Green Street, Armour Street, ஆனால் இப்போது இவ்விரண்டு சொற்களையும் கண்டபடி உபயோகிக்கிறார்கள் உ-ம் Thurstan Road, Havelock Road, Main Street, Trincomalie Street.

Organisation — தாபனம்
Society — சங்கம்,
Union — சமாசம்
Unit — அங்கம்,

★

Booth — சாவடி
Depot — சாலை: காலை,
Emporium — மளிகை,
Shed — மடுவம்: குதம்.
Shop — கடை,
Stall — விக்கிரயத்தானம்,
Store — பண்டசாலை,
Stand — காலை
Station — தானம்,

கலைச்சொல்லாக்கத்துக்கு இன்றியமையாதது தீவிர ஆராய்ச்சி. ஒரு ஆங்கிலச்சொல்லைக் கண்டவுடனேயே அதற்குச் சமசொல் ஆக்கிவிட வேண்டும் என்று நினைத்தலாகாது. அச்சொல் எதனைக் குறிக்கிறது என்பதனை முதலில் ஆராய்தல் வேண்டும். உதாரணத்துக்கு Running Bungalow என்ற சொற்றொடரை எடுத்துக் கொள்ளுவோம். Running என்பதன் கருத்து ''ஓடுகிற''; Bungalow=வங்களா. இப்படியாக இவ்விரு சொற்களுக்கும் தமிழ்ச் சமபதங்கள் தெரிந்திருக்கிறபடியால் இவை சேர்ந்த தொடருக்கு உடனே சமபதத்தைச் சிருட்டித்து விடவேண்டும் என்று நினைப்பது புத்தியாகாது. Running Bungalow என்பது எதனைக்கருதுகிறது? அது எங்கேயிருக்கிறது என்பதனை முதலில் ஆராய்ந்து அறிந்து கொள்ளுதல்வேண்டும். புகையிரதப்பகுதியிலே கடமையாற்றும் காப்பாளர்கள், சாரதிகள் முதலியோர் தங்கள் அன்றாடக் கடமைகளை முடித்துவிட்டு அடுத்த நாட் கடமைவரை தங்கியிருத்தற்குரிய ஒரு வங்களாவேயிது என்க. இதனையறிந்துகொண்டால் அதற்குத் தமிழில் ''இடைத்தங்கு வங்களா'' என்று ஒரு சொல்லைச் சிருட்டித்துவிடலாம். இப்படிச்செய்யாது மேலாகச்சொற்களைப்பார்த்துவிட்டு ''ஓடுகின்ற வங்களா'' என்று சம சொல் இட்டுவிட்டால் அது விபரீதத்திற்கொண்டு



போய்விட்டுவிடும். இப்படியான இடர்கள் பல மொழிபெயர்ப்புத் துறையில் ஈடுபடுவோருக்கு எதிர்ப்படும். அவற்றையெல்லாம் வெற்றி கொள்ளுவதிலேயே ஒரு மொழிபெயர்ப்பாளரின் திறமை தங்கியிருக்கிறது என்று சொல்லலாம்.

கலைச்சொல்லாக்கம் பற்றி அவதானிக்கவேண்டிய இன்னொரு அம்சமும் உண்டு. மொழிபெயர்ப்பில் மொழி மரபு கையாளப்படவேண்டியது எவ்வளவு அவசியமோ அவ்வளவு கலைச்சொல்லாக்கத்திலும் அது கையாளப்பட வேண்டியது அவசியம். உதாரணமாக Pick-Pocket என்ற சொல்லை எடுத்துக்கொள்ளுவோம். இதற்குச் சமசொல் தேடியலைந்து ''சாக்குத் திருடன்'' என்று சிருட்டிக்க வேண்டியதில்லை. இன்று Pick-Pockets செய்யும் அதே தொழிலைத்தான் எமது நாட்டில் பழைய காலத்தில் முடிச்சுமாறிகள் செய்து வந்தனர். ஆகவே எமது மரபுக்கேற்றபடி Pick-Pocket என்பதற்கு 'முடிச்சுமாறி' என்று சமபதம் கொடுப்பது பொருத்தமாகும். Pocket-Expense என்பது இன்னொரு சொல். முற்காலத்திலே எம்மவரிற்பலர் சாதாரணமாகச் சட்டையணிவதில்லை; அன்றாட தேவைக்குரிய பணத்தை வேட்டிமடியிலே வைத்துச் செலவழிப்பர். எனவே, ''மடிச்செலவு ''கைச் செலவு'' என்று சொல்லிவந்தார்கள். ஆகவே, Pocket-Expense என்பதற்கு மடிச்செலவு அல்லது கைச்செலவு என்று சொல்வது பொருத்தமுடைத்தாகும்.

ஒரு ஆங்கிலச் சொல்லுக்கு எச்சந்தர்ப்பத்திலும் ஒரே தமிழ்ச் சமசொல் இடப்படவேண்டும் என்ற நியதி மீறப்படவேண்டிய இடங்களும் உண்டு. உதாரணமாக Governor என்ற சொல்லை எடுத்துக்கொள்ளுவோம். இதற்கு ''தேசாதிபதி'' என்ற சமசொல் சாதாரணமாகக்கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு நாட்டின் அதிபதியைக்குறிக்கும்போது ''தேசாதிபதி'' என்ற சொல் மிகப்பொருத்தமுடையதாகத்தான் இருக்கிறது. ஆனால் Governor of the Central Bank of Ceylon என்ற சொற்றொடரில் வரும் Governor என்னும் சொல்லுக்கு

தேசாதிபதி என்று சமசொற் கொடுக்கமுடியாது: இலங்கை மத்திய (அல்லது பிரதான) வங்கியின் அதிபதியே இச்சொற்றொடரில் வரும் Governor.

இதுபோலவே Officer என்னும் சொல்லும். இதற்குச் சாதாரணமாக ''உத்தியோகத்தர்'' என்ற சமபதம் தமிழில் உண்டு. இப்படியிருப்பதினால், Fiscal-Officer, Attendance Officer என்னும் இன்னோரன்னவற்றுக்கு பிசுக்கால் உத்தியோகத்தர், வரவறி உத்தியோகத்தர் என்றின்னவாகச் சமபதங்கள் கொடுக்கலாம் ஆனால் இதே முறையைப் பின்பற்றி Information Officer என்பதற்கும் தகவல் உத்தியோகத்தர் என்று சொல்வது சரியாகாது; Information Officer என்று ஆங்கிலத்திற் கூறும் போது, அவர் ஒரு அரசாங்கப்பகுதியின் தலைவர் என்பது எல்லாருக்கும் தெரியும். தமிழில் தகவல் உத்தியோகத்தர் என்னும்போது அவருடைய பதவிநிலை அவ்வளவு வெளிப்படையாக இருக்காது. எனவே Infomation Officer என்பதற்கு ''தகவல் அதிகாரி'' என்பது ஏற்புடைத்தாகும்.

இப்போது நிலவுவது சனநாயக ஆட்சி முறை. பழையமானிய முறைச் சமுதாயம் அகன்றுவிட்டது; எல்லாரும் இந்நாட்டு மன்னராக விளங்கும் காலம் இது. எனவே குறித்த சில தொழிலினருக்குரிய கலைச்சொற்களை ஆக்கும்போது அவை தாம் கருதுபவருக்குரிய கணிப்பைக்கொடுப்பனவாகவிருத்தல் வேண்டும். உதாரணமாக Watcher என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ''காவலன்'' என்று சமபதம் கொடுத்தல் இன்றைய நிலைக்கு ஒவ்வாதது. காவலன் அல்லது காவற்காரன் என்பதற்குப் பதிலாக ''காவலாள்'' அல்லது ''காவலர்'' அல்லது ''காவலனார்'' என்பது உகந்ததாகும்.



# 10. மொழிபெயர்ப்பில் பிறமொழிக்கலப்பு

மொழிபெயர்ப்பில் பிறமொழிக்கலப்பு இருக்க வேண்டுமா? இருக்கவொண்ணாதா? என்பது ஒரு பெரிய கேள்வி. மொழிபெயர்ப்பில் மாத்திரமல்ல தமிழ் இலக்கியங்கள் எவற்றிலும் சரி இயன்ற அளவுக்குப் பிறமொழிச் சொற்களைச் சேர்க்காமல் விடுவதுதான் நல்லது என்பது தமிழறிஞரின் ஏகோபித்த அபிப்பிராயம். ஆனால் குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்பவன் சீலமாக தனித்தமிழ்ச் சொற்களை நாடிப் பொது சனங்களுக்கும் படித்தவர்களுக்குமிடையே ஒரு பிரிவினையை ஏற்படுத்தவொண்ணாது.

பல பிறமொழிச்சொற்கள் எம் தமிழ்மொழியில் இப்போது சேர்ந்து தமிழாகிவிட்டன. அவற்றின் ஆவலி ஒன்று இவ்வதிகாரத்து இறுதியிற் சேர்க்கப்பட்டிருக்கிறது. பிறமொழிச்சேர்க்கை தமிழுக்குமாத்திர முரியதல்ல; எம்மொழியிலும் பிறமொழிககலப்பு உண்டு.

சில வேற்றுமொழிச் சொற்களுக்கு சரியானதமிழ்ச் சொற்கள் இல்லை என்பதனை நாம் மறுக்கமுடியாது: அப்படியான வேற்றுச்சொற்களை நாம் சேர்த்துக் கொள்ளவே வேண்டும். எச்செல்வம் இருந்தும் பிள்ளைச் செல்வம் இல்லையே என்று வருந்தும் ஒருவன் அடுத்த ஊரிலே தனது குலம் கோத்திரத்தைச் சேராத இன்னொருவனின் பிள்ளையைத் தத்தாக எடுத்து தன் பிள்ளையாக வளர்க்கிறான். அன்னையையும் அத்தனையும் விடுத்துவந்த பிள்ளை தனது முந்திய குலம் கோத்திரம் மறந்து தனது தத்துத் தந்தையின் குலகோத்திரத்தவனாகி வளருகிறான். அவற்றில் அவன் ஐக்கியமாகி விடுகிறான். இந்த நிலையில்தான் வேற்றுமொழிகளில் இருந்து நாம் பெறும் சொற்களும் இருத்தல் வேண்டும். அச்சொற்களை எமது மரபுக்கியைய மாற்ற வேண்டும். இந்த ஒரு நல்ல விதியை இற்றைக்குச் சில காலத்துக்கு முன் இருந்த நம்மவர் மிக அழகாகப் பின்பற்றியிருக்கிறார்கள்.

எமது முன்னோர் எச்சமயத்தைச் சேர்ந்தவராயினும் தம் தமிழ்ப்பற்றை விடவில்லை. திசைச் சொற்கள் பற்றிய இலக்கணவிதியை அவர்கள் கைவிடவில்லை. அவர்கள் எமக்கு அள்ளித்தந்தது, தித்திக்கத் தேன் ஊறும் கனிரசப் பாயசம். ஆனால் நமது இன்றைய கலையுணவென்ன? கழிவு மரக்கறிகளைப் பதம் செய்யாது காய்ச்சி ''சாம்பார்'' என்பதற்குத் தானும் யோக்கியம் இல்லாத அதற்குப்பாயசம் என்று பெயர் கொடுத்து எம்மையே ஏமாற்றிக்கொள்ளுகிறோம். அவ்வளவுடனும் தான் நாம் திருப்திப்படாது எம்முன்னோர் செய்தனவற்றிலும் திருத்தப்புகுந்து இடர்ப்படுகிறோம். முன்பெல்லாம் Police என்பதற்கு பொலிசார், பொலிசுக்காரன் என்றார்கள். நாமோ இப்போது பொலீஸ் என்று நாக்கு நுனியை மோவாய்க் கட்டைக்குள் அழுத்தி ''ஸ்''விடுகிறோம். Advocate என்பதற்கு அப்புக்காத்து என்று தமிழாகச் சொன்னார்கள். நாமோ இப்போது ''அட்வகேட்'' என்று சொல்லி எமக்கும் பொதுசனங்களுக்குமிடையே ஒரு தடித்த இரும்புத்திரையை இட்டுவிடுகிறோம். நாம் பல கருமங்களில் ஆங்கிலேயரைப் பார்த்துக் கண்டபாவனையிற்கொண்டை முடிக்கின்றோம், ஆனால் இக்கருமத்தில் அவர்கள் கையாளும் நல்ல முறையினைப் பின்பற்றத் தயங்குகிறோம். ''சுருட்டு'', ''கட்டுமரம்'', ''சட்டி', ''நீர்கொழும்பு'', ''அணைக்கட்டு'' ''இஞ்சிவேர்'', ''வெற்றிலை'' ''மிளகு தண்ணீர்'' என்பன தமிழ்ச் சொற்கள். இவற்றை ஆங்கிலன் தனது மொழியில் Churuddu, Kaddumaram, Chaddy, Neercolumbu, Anaikaddu, Inchiver. Vettilai, Milagu Thanneer என்கிறானா? தன்னிடம் இல்லாது தனக்கு வேண்டிய இவற்றை எடுத்துக்கொண்ட அவன் தனது மொழிமரபில் Cheroot, Catumaram Chatty, Negombo, Anicut, Gingerfer, Betel, Muligatawny. என்கிறான்.

இப்படித்தான் மற்றமொழியாளரும் செய்ய நாம் மாத்திரம் இன்னும் அடிமைப்புத்தி தடித்திருக்கிறோம்.



இன்றுள்ள சமுதாய, அரசியல் நிலை எமது நாட்டின் பழைய மானியமுறைச் சமுதாய அரசியல் நிலையிலும் பார்க்க வேறுபட்டது. இப்போது நாம் காணும் மத்திய ஆட்சிநிலையங்களும் ஊராட்சித்தாபனங்களும் அக்காலத்தில் இருக்கவில்லை; எனவே காலத்துக்கேற்றவாறு, இத்தாபனங்கள், உத்தியோகவர்க்கங்கள் என்பவற்றுக்குரிய ஆங்கிலச் சொற்களையே திசைச் சொற்களாக்கி உபயோகித்துக் கொள்ளலாம். உதாரணமாக, Commission என்ற சொல்லை எடுத்துக்கொள்ளுவோம்; சந்தர்ப்பத்துக்கியைந்தவாறு இந்த ஒரு சொல்லுக்குப் பல கருத்துக்கள் உண்டு. இதற்குத் தமிழில் ஒரு சரியான பதம் சிருட்டிப்பது கடினம். அப்படித்தான் சிருட்டித்தாலும், அல்லது பழைய இலக்கியங்களில் துருவி ஆராய்ந்து ஒரு சொல்லைக் கண்டுபிடித்து உபயோகித்தாலும் அதனைச் சாமானிய மக்கள் இலகுவிற் புரிந்து கொள்ள மாட்டார்கள். இப்படியே Nurse என்ற சொல்லும். முற்காலத்திற் பெண்களே நேசுமாராக இருந்தனர். ஆகவே, தாதி, செவிலித்தாய் என்றின்னோரன்னவாறு அகராதிக்காரர் கூறிவந்தனர். இப்போது நேசுத்தொழில் ஆண்களுக்கும் உண்டு. இவ்வாறாகப் புதுக்கருத்துக்கள் பொலிந்துள்ள Commission, Nurse, Hospital, Bus, Fiscal, Warrant போன்ற சொற்களைச் சாமானிய மக்களும் புரிந்துகொள்ளும் முறையில் கொமிசன், நேசு. ஆசுப்பத்திரி, வசு, பிசுக்கால், விறாந்து என்று திசைச் சொற்களாக்கி தமிழுடன் சேர்த்துக் கொள்ளலாம். அப்படிச்செய்வது பிழையல்ல என்பதே அறிஞரின் அபிப்பிராயம். ''கொமிஷன்'', ''நர்ஸ்' என்று கூறுவதும் மரபாகாது. இதுபற்றி இன்னொன்றையும் இச்சந்தர்ப்பத்திற் கூறுவது பொருத்தமாகும்; அது ''ர்'' உச்சரிப்புறுத்தல் பற்றியது. ஆங்கிலர் இந்தியாவைக் கைப்பற்றிய அந்தக்காலத்திலே அங்கு தாபிக்கப்பட்ட ஆங்கிலக் கலாசாலைகளுக்கு ஆசிரியர்களாக வந்தவர்களில் அனேகர் இசுக்கோத்துலாந்து வாசிகள். அவர்களின் உச்சரிப்பு ஆங்கிலரின் உச்சரிப்புக்கு வித்தியாசமானது. ஆங்கிலப்பதங்களுக்கு இடையில் வரும் r எழுத்துக்களை அவர்கள் உறுத்தி உச்சரிப்பர். Morning (ஆங்கிலரின் சரியான உச்சரிப்பு ''மோணிங்'')

என்பதற்கு 'மோர்ணிங்' என்பர். இப்படியாக ர தடித்த இசுக்கோதிய ஆசிரியரிடம் படித்த இந்தியத் தமிழர் சிலர் தம் பத்திரிகைகளிலும் நூல்களிலும் "ர்" ஐப் புகுத்திவிட இலங்கையில் உள்ள எம்மவர் சிலரும் அதனைப் பின்பற்றுகிறார்கள். உச்சரிப்புக்கு முரணான, தமிழ் மரபுக்குப் பொருந்தாத "ர்" உபயோகத்தை திசை மொழிச் சேர்ப்பில் இருந்து நாம் விலக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

திசைமொழிச் சேர்ப்பு நடைபெறவொண்ணாது; எமது பழைய இலக்கியங்களில், இப்போதைய கருமங்களுக்கான சொற்கள் இருக்கின்றனவா என்பதனைத் துருவி ஆராய்தல் வேண்டும்; அப்படி ஆராய்ந்து கண்ட அச்சொற்களையே உபயோகிக்க வேண்டும்: அல்லது தனித்தமிழில் புதுச்சொல்லாக்கம் நடைபெறுதல்வேண்டும் என்று கூறும் சாராரும் உளர். பிறமொழிக்கலப்பால் தமிழுக்கு உரியதான தனித்தன்மை அற்றுவிடும் என்பது இவர்களின் வாதம். இவர்களின் தமிழார்வம் போற்றற்குரியது. ஆனால் இவர்களின் நெறி இன்றுள்ள நிலையில் நூற்றுக்கு நூறு விகிதம் அனுபவ சாத்தியமானதா என்பது ஒரு பெரிய கேள்வி.

உலகத்திலேயுள்ள எம்மொழிகளுக்கும், மொழிக் குறைபாடு இல்லாமல் இல்லை. ஆனால் அவர்கள் காலத்துக்கேற்ற கோலமாக பிறமொழிச் சொற்களைத் தமக்குள் அடக்கி விடுகிறார்கள். இப்போது நாம் பார்க்கும் ஆங்கிலத்துக்கும் 14ம், 15ம் நூற்றாண்டுகளில் இருந்த ஆங்கிலத்துக்கும் எவ்வளவோ பேதம் உண்டு. இப்போதுள்ள ஆங்கிலச்சொற்களில் ஏறக்குறைய அரைவாசி பிறமொழிகளில் இருந்து வந்தவை: அப்படியிருந்தும் ஆங்கிலம் தனது பெற்றியை இழக்கவில்லை. ஆங்கிலர் ஆதித்தன் மறையாச் சக்கராதிபத்தியத்தை அமைத்து உலகெங்கும் தம்மொழியைப் பரப்பிவிட்டனர். ஆங்கிலம் இன்று உலக மொழியாக மிளிர்கிறது. "ஆங்கிலம் ஆங்கிலனின் மொழி என்று ஆர் சொன்னது? அது உலகத் தனிமொழி" என்று இந்தியாவின் கல்வி மந்திரியான மௌலானா அபுல்கலாம் அசாத் அவர்கள் ஒரு முறை கூறியதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.



ஒரு மொழியின் வளர்ச்சி அம்மொழிக்குரியார் செலுத்திவரும் அரசியல் பொருளாதார செல்வாக்கிலேயே அதிகம் தங்கியிருக்கிறது; உலகமக்களில் பிரித்தானியர் தொகையில் அதிகமானவர்கள் என்று கூற முடியாது. ஆனால் அவர்கள் கடந்த 4 நூற்றாண்டு காலத்தில் தமது அரசியல் பொருளாதாரச் செல்வாக்கை உலகம் முழுவதும் பரப்பித் தமது ஆட்சியைப் பலவிடங்களிலும் நிறுவி அதன் காரணமாகத் தம் கலையையும் பண்பாட்டையும் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் புகுத்தியதாலேயே ஆங்கிலம் இன்று உலகமொழியாகும் நிலைமையை எய்தியது. அவர்கள் தமது பிரித்தானியத்தீவுகளுக்குள்ளேயே ஒதுங்கிவாழ்ந்து, தமது மொழியைப் பிறமொழிச் செல்வாக்குக்குள் ஆளாக்காது வைத்திருந்திருப்பரேல் ஆங்கிலம் தேடுவாரற்ற ஒரு மொழியாக இன்று இருந்திருக்கும்.

என்றும் மாறா இளமைப்பருவமுடையவள் எங்கள் செந்தமிழ்த்தாய்: அவள் எழிலரசி: அது இயற்கையாகவே அவளுக்கு அமைந்துள்ளது. இயற்கை எழிலுடன் பொலியும் அவளுக்குப் பிறமொழிப்பூண்கள் இன்னும் பேரழகு கொடுக்கும்.

ஆனால், மொழிமரபுக்கொவ்வாத பிறமொழிச் சேர்க்கையை அனுமதிக்க முடியாது. இயற்கையழகு வாய்ந்த ஒரு அழகிக்கு அலங்காரம் செய்யும் நிலையிற் பிறமொழிக்கலப்பு இருத்தல் வேண்டும். அலங்காரம் செய்வது என்று சொல்லி அவளின் உச்சிமுதல் உள்ளங்கால் வரை ஆபரணங்களைத் திணித்துவிட்டால் அவளது எழில் உருவம் மறைய அவள் ஒரு "வெருளி"யாகி விடுவாள். உதாரணத்துக்குப் பின்வரும் ஆங்கிலப்பதங்களையும் அவற்றுக்களிக்கப்பட்டுள்ள சமபதங்களையும் நோக்குக:

Parliament–பார்லிமெண்ட் (பாராளுமன்றம்)
Cheque—செக் (காசோலை)
Church—சர்ச்சு (தேவாலயம்)
Act—அக்ட் (சட்டம்)

Attorney—அட்டர்ணி (தரணி அற்றோணி)
Vote—வோட்டு (வாக்களிப்பு)
Bishop—பிஷப்பு (விசுப்பு அல்லது மேற்றிராணியார்)
Cabinet—காபினெட் (மந்திரசபை, மந்திரிசபை)
Censor—ஸென்ஸர் (தணிக்கையாளர்)
Chancellor—சான்ஸலர் (வேந்தர், தலைவர், மந்திரி, அத்தியட்சர்)
Colonial Office—கலோனியல் ஆபிஸ் (குடியேற்ற நாட்டுக்கந்தோர்)
Corporation—கார்ப்பரேஷன் (ஆண்மைக்கழகம்)
Directorate—டயறக்டர் கழகம் (இயக்குநர் கழகம்)
Dominion—டொமினியன் (சமவரசு)
Diocese—டயோசிஸ் (மேற்றிராசனம்)
Friar—பிரயர் (துறவி)
Court—கோர்ட்டு (நீதிமன்றம், நீதித்தலம், மன்றம், கோடு)

இச்சமபதங்கள் கன்னித்தமிழை உருக்குலைத்து அவளை நாசப்படுத்த வந்த அவலச்சொற்கள். அதிகாரப்போர்வைக்குள் புகுந்து அல்லல் தருவன. தித்திக்கும் மாங்கனியிருக்க புளிக்கும் காய்தின்று பல்லையும் வாயையும் பங்கப்படுத்துவான் நிலையில்தான் இந்தச் சமசொற்களை அமைத்தவர்கள் இருக்கிறார்கள் என்று கூறினால் அது மிகையாகாது.

மொழிபெயர்ப்புத் துறையில் ஈடுபடுவோர் ஒரு நடுப்பாதையினைக் கைக்கொள்ளுதல் வேண்டும். தனித் தமிழ்ப் பற்று நல்லது தான். ஆனால் இன்றைய நிலையின் அதன் வழிநிற்றல் அநுபவசாத்தியமாகாது என்று கூறுவர் உண்மை நிலையறிந்த அறிஞர். ஆங்கிலச்சொற்களை அப்படியே எழுத்துப் பெயர்ச்சி செய்து அதனை மொழிபெயர்ப்பு என்று சொல்வதும் தமிழன்னைக்குச் செய்யும் பாதகச்செயலாக முடியும். இதுபற்றி தினகரன் ஞாயிறு இதழ் ஒன்றில் ஆசிரியர் கூற்றாக வெளிவந்துள்ள கட்டுரையின் ஒரு பகுதியை மொழிபெயர்ப்பாளருக்குச் சமர்ப்பிக்கின்றோம். அது வருமாறு:



''தாய்மொழியாம் தமிழ்மொழியை நாம் கற்று அதன் உயர்வை மதிக்கப் பழகிக்கொள்வதோடு பிறமொழிகளைப் புறக்கணியாது அவற்றில் உள்ள உயர்வுகளையும் சிறப்புக்களையும் ஏற்று நமதாக்கிக் கொள்ள வேண்டும்.

''நாடு விடுதலைபெற்ற பின்னர் தமிழுக்கு உயர் நிலையளிக்க வேண்டுமென்று தமிழ்மக்கள் விரும்பினார்கள். ஆட்சியாளர்களும் அவ்வாறே செய்தார்கள்.

''ஆனால் ஒரு சில தமிழ்மோகப் போலிகள் ஆங்கிலம் முதலிய பிறமொழிகள் தமிழுக்குத் தேவையில்லை யென்று சிற்சில வேளைகளிற் கூக்குரலிட முற்பட்டுவிடுகிறார்கள்.

''இவ்வாறு செய்தால் தமிழ் உயர்ந்து விடும், தமிழர் உயர்ந்து விடுவர் என்பது தவறான எண்ணம்.

''நமது தாய்மொழியின் ஆக்கத்துக்கும் உயர்வுக்கும் உழைப்பதோடு பிறமொழியின் சீரையும் போற்றவேண்டும்.

அதுவே தமிழன் சால்பு''*

---

* தினகரன் ஞாயிறு இதழ் 23—8—53

# தமிழில் சேர்ந்து தமிழாகிவிட்ட சில பிறமொழிச் சொற்கள்.

## அரபுச் சொற்கள்

அத்தர்
ஆத்து (எல்லை)
அமானத்து
அமானி
அல்லா
ஆஸ்தான்
இஸ்லாம்
இலாகா
இருத்தல்
உலமா
கச்சேரி
கஜானு
கமிசை
கலாசி
கலால்
கலீமா
காப்பிரி
கூபம்
சன்னது
சாலாமிசிரி
சுபேதார்
சுல்தான்
சுவான் தார்
சுன்னத்து
சைத்தான்
சோபா
சலாம்
சரீபத்
ஷெரிப்
ஜப்தி

தாசில்தார்
தாலுக்கா
தினிசு
நகாசு
நகல்
நவாபு
நபி
பாக்கி
பாலம்
பைசல்
மசோதா
மராமத்து
மாஜி
மாமூல்
மிராசுதார்
முஸ்திப்பு
முஸ்லிம்
முலாம்
முனிசிப்
மோரு
மௌலானு
மௌலவி
யூனானி
ரகம்
ரஜா
ரத்து
ராஜி
ராஜிநாமா
வாய்தா
வகையரா



ஜாபிதா
ஜாமீன்
தகராறு
தமாஷ்

வாரிசு

## உருதுச் சொற்கள்

அசல்
அச்சா
அடானு
அண்டா
அபின்
அமீர்
அமுல்
அம்பர்
அம்பாரம்
அம்பாரி
அரக்கு
அல்வா
ஆசாமி
ஆபத்து
ஆரவாரம்
இராட்டினம்
இராவுத்தன்
இனும்
உசார்
உண்டி
உறுமால்
ஊதா
ஐவேசு
கசகசா
கசரத்து
கசாப்பு
கஜம்
கடுதாசி

கலாட்டா
கரார்
கலிபிலி
காகிதம்
காக்கி
காஞ்சிரா
காயலா
காராபூந்தி
காலி
சாவாலி
கிஸ்தி
கிராக்கி
கிராம்பு
கிருதா
குசால்
குசி
குஸ்தி
குப்பி
குமாஸ்தா
குல்லா
கூசா
கெஜம்
கைதி
கைது
கொத்தவால்
கோதா
சகானு

சந்தா
சர்க்கா
சவ்வாது
ஜவான்
சாகிப்
சாணை
சிராங்கு
சீரா
சீனி
சுக்காணி
சுக்கான்
சுங்கான்
சேர்
சொகுசா
சோடினை
சோடு
சோரன்
ஜட்கா
ஜதை
ஜமுக்காளம்
சரிகை
ஜரூர்
ஜல்தி
ஜாமின்
சாலம்
ஜிம்கானு
டப்பா
தபால்

தண்டயல்
தண்டோரா
தம்பிடி
தம்பூர்
தரம்
தராசு
தர்பார்
தாக்கல்
துக்கடா
துக்காணி
துப்பட்டி
தயிலா
தோட்டா
தோலா
நபர்
நதி
பங்கா
பஞ்சாயத்து
படுதா
பட்டாசு
பட்டி
பந்தோபஸ்து
பல்லக்கு
பிசாசு
பிராது
பில்லை
புகார்

கந்தூரி
கவாத்து
கப்பி
கம்பளி
கம்பாயம்
மாகாணம்
மாடி
மிட்டாய்
மிருதங்கம்
முகாம்
முத்திரை
மேஸ்திரி
மைதானம்
ராட்டினம்
ராஜு
ரூபாய்
ரொக்கம்
ரொட்டி
லங்கோடு
லட்டு
லேவாதேவி
லோட்டா
வியாபாரம்

சங்கிலி
சங்கு
சட்ணி
சதா
சதிர்
டப்பி
டாபல்
தொப்பி
தட்டு
தண்டல்
புஷ்பராகம்
புராணம்
புலாக்கு
பூரா
பேட்டி
ஜவாப்
தஸ்தாவேஜு
நிசார்
பகதூர்
பரவாய்
பாத்தியா
பீகம்
புராணம்

பேஷ்
மோஸ்தர்
ரசீது
ரஸ்தா
ருஜு
வாபீஸ்

## இந்துஸ்தானிச் சொற்கள்

ஹார்த்தல்
முண்டாசு
வங்களா

## பாரசிகச் சொற்கள்

அப்பு
அப்ரேக்
சராசரி
சிப்பந்தி
சிப்பாய்
சித்தார்

சொரிசு
சுமார்
சர்தார்
சால்வை
ஜமீன்
ஜமீன்தார்



## தெலுங்குச் சொற்கள்.

அக்கறை
அட்டி
அட்டிகை
அந்தஸ்து
அதிகம்
ஆசடியம்
ஆசாரம்
ஆஸ்தி
ஆத்திரம்
ஆர்ப்பாட்டம்
இடமாரம்
இடாப்பு
இடாம்பீகன்
இரம்பம்
இரவிக்கை
இரவை
இராணுவம்
இரேக்கை
இலஞ்சம்
இலத்தி
இலாகிரி
இலாகை
இலாடம்
இலாயம்
இலாவணம்
உக்கிராணம்
எக்கச்சக்கம்
எக்காளம்
ஏட்டிக்குப்போட்டி
ஏராளம்
ஒட்டியாணம்
ஒண்டி
ஒயில்
ஒய்யாரம்

சட்டப்பாரை
கட்டாரி
கந்தாயம்
கபோதி
கப்பம்
கம்மல்
கலவரம்
கிடங்கு
கிட்டங்கி
கிலி
குக்கல் (நாய்)
கூடாரம்
கூடு
கெட்டி
கேள்வு
கொஞ்சம்
கொப்பரை
கொலு
கோடாலி
சந்தடி
சம்பங்கி
சம்பிரதி
சரக்கு
சல்லாபம்
சல்லடம்
சல்லி
ஜவுளி
சன்னம்
சாடை
சாண்
சாராயம்
சாவணம்
சிக்கனம்
சிட்டிக்கை

சிப்பம்
சில்லறை
சீமாட்டி
சுளை
சுறுக்கு
செட்டை
செண்டு
செத்தை
செம்பு
செவிடு
சேகண்டி
சேதாரம்
சொகுசு
சொக்கட்டான்
சொக்காய்
சொச்சம்
சொட்டை
சொத்து
சொந்தம்
ஜோசியம்
தகடு
தடவு
தடவை
தப்பிதம்
தப்பிலி
தம்பட்டம்
தறுவாய்
தவலை
தளவாய்
தளுக்கு
தாடை

தாம்பாளம்
தாயித்து
தாராளம்
தாவடி
தாவளம்
தாறுமாறு
திகில்
திண்டு
தில்லானா
துரவு
துரைத்தனம்
தெந்தனம்
தெப்பை
தெம்பு
தொந்தரவு
தொந்தரை
தொன்னை
தோணி
தோது
நிம்மதி
பகடி
பகடை
பச்சைவடம்
பஞ்சை
படாடோபம்
பட்டயம்
பண்டவாளம்
பண்டிகை
பந்தயம்
பந்தி
பவிசு
பளு
பாகை
பாச்சிகை

பாட்டை
பாரபத்தியம்
பாரம்
பிகு
பித்தலாட்டம்
பிலுக்கு
பில்லை
பீலி
புருடா
பேரம்
பொட்டலம்
பொட்டு (தாலிப்பொட்டு)
பொந்து
பொம்மலாட்டம்
பொம்மை
போட்டி
போறை (உள்துவாரம்)
மகிடி
மச்சு
மடங்கு
மதகு
மதனி
மத்தியஸ்தம்
மப்பு
மய்யம் (மத்தி)
மரியாதை
மாதிரி
மிஞ்சி (ஆபரணம்)
மிருது
முகாரி
மும்முரம்
மெத்தை (மேல்வீடு)
மெருகு
மேட்டிமை

மோறை
ரீதி
ரெட்டி
வலோற்காரம்
வாடகை
வாடிக்கை
வாராவதி
வாலாயம்
விக்கிரயம்
விந்தை
வெட்டை
வெல்லம்
வேடிக்கை



## போர்த்துக்கீசம்

ஆயா
அலுமாரி
இலேஞ்சி
இறைசால்
உரோதை
ஏலம்
கதிரை
கிறுதி
கோப்பை
சப்பாத்து

சாய்ப்பு
சாவி
பத்தாயம்
பாதிரி
பிப்பா
பீரங்கி
மேசை
யன்னல்

## ஒல்லாந்தச் சொற்கள்

கக்கூசு
சாக்கு

## பிரேஞ்சுச் சொற்கள்

குசினி
சாம்பிராணி
திறுங்கு

பறங்கியர்
உரோந்து
இலாந்தர்

ஆரியத்தில் இருந்து தமிழில் இன்று வழங்கிவரும் சொற்கள் அளப்பில; அவற்றை ஈண்டுக்குறிப்பிடுவது மிகையென்றுவிடுத்தாம்.

# 11. கிரந்த எழுத்துக்கள்

ஸ, ஷ, ஜ, ஹ, க்ஷ, என்னும் கிரந்த எழுத்துக்களும் ஷு, ஸ்ரீ முதலிய குறியீடுகளும் தமிழ் இலக்கியங்களில் இப்போது சில காலமாகப் பெருமளவிற் கையாளப்பட்டுவருகின்றன. இவ்வெழுத்துக்கள் எமது இலக்கிய வளர்ச்சிக்கு இன்றியமையாதனதாமா? இவை இல்லாமல் தமிழ் இயங்க முடியாதா? அவையின்றி நாம் உலகக் கலையுலகிற் சீவிக்க முடியாதா? என்னும் இக்கேள்விகளை ஒரு சாரார் கேட்கின்றனர். இந்தக் கேள்விகளையும் மொழிபெயர்ப்பாளர் சிந்தித்தல் வேண்டும்.

எழுத்துக் குறைவு எந்த மொழிக்கும் உண்டு தான்; அதற்காக மற்ற மொழி எழுத்துக்களைக் கடன் வாங்க வேண்டுமா? ஆங்கிலத்திலே எமது ங், ஞ், ழ், முதலியன வற்றுக்கு எழுத்து இல்லை. இதனால் ஆங்கிலர் எங்களுக்குரிய இந்த எழுத்துக்களைக் கடன் வாங்குகிறார்களா? "ஞானப்பிரகாசம்" என்ற சொல்லை ஆங்கிலர் எழுதும் போது அதில் வரும் "ஞ்" உச்சரிப்பின் பொருட்டு "ஞanapragasam" என்று அவர்கள் எழுதுவதுண்டா? அப்படியான ஒரு உச்சரிப்புத் தேவையான இடங்களில் அவர்கள் தங்களுக்குரிய எழுத்துக்களுடனேயே சரிப்படுத்திவிடுகிறார்கள். ஆகவே, கிரந்த எழுத்துக்களைத் தமிழ் இலக்கியங்களில் இருந்து முற்றாக நீக்கிவிடவேண்டும் என்று நாம் மேலே காட்டிய அறிஞரில் ஒரு சாரார் வாதிக்கிறார்கள்.

முன் இருந்த நிலைமை வேறு, இன்றிருக்கும் நிலை வேறு; மொழிபெயர்க்கப்பட முடியாத பல வேற்றுமொழிச் சொற்கள் இப்போது தமிழில் இடம்பெற்றுவிட்டன. உதாரணமாக, தமிழ் பேசும் இனத்தவராகிய நமது இசிலாமியச் சகோதரர்கள் பல அரபுச் சொற்களைத் தமிழ் இலக்கியங்களிற் சேர்த்திருக்கிறார்கள். இச்சொற்களைத் தனித் தமிழ் எழுத்துக்களில் எழுதினால் சரியான உச்சரிப்புத் தோன்றாது. "அல் ஹாஜ்" என்ற சொல்லை தமிழ் மரபுப்படி கிரந்த எழுத்துக்கள் இன்றி எழுதுவோமானால் "அலுகாசி" அல்ல "அலகாசி" என்று இன்னோரன்னவிதமாகவரும். அது விபரீதத்திற் கொண்டுபோய்விட்டுவிடும். "ஞ்" என்ற உச்சரிப்பையும் "ழ்" என்ற உச்சரிப்பையும் ஆங்கிலத்திற் பெறுவதற்கு முறையே G ஐயும் N ஐயும், Z ஐயும் H ஐயும் இணைக்கும் தன்மையில் எமது எழுத்துக்களை வேற்றுமொழி உச்சரிப்பின் பொருட்டு இணைக்கும் ஒரு ஒழுங்கு முறை எமக்கு இப்போது இல்லை. அப்படியான ஒரு ஒழுங்குமுறையினை நாம் வகுத்துக்கொள்ளும்வரையில் கிரந்த எழுத்துக்களை அறவே புறக்கணிக்கமுடியாது என்று சாதிப்பர் இன்னொரு சாரார்.



மேலே காட்டிய இருவிதகொள்கையுடையார் கூற்றில் எது கொள்ளத்தக்கது, எது சரி, எது பிழை என்று ஆராய்ச்சிசெய்து ஒரு முடிவுகாண்பது அரிது. எக்கருமத்திலும் தீவிரப்போக்கு விரும்பத்தக்கதல்ல பிறமொழிச் சொற்களை நாம் உபயோகிக்கவேண்டிய அவசியம் ஏற்பட, அச்சொற்களைத் தனித் தமிழ் எழுத்துக்களில் எழுதின் அவற்றின் கருத்து தெளிவாக இராது என்று நிச்சயமாகக் காணப்படுமிடத்து கிரந்த எழுத்துக்களை உபயோகித்துக்கொள்ளலாம் என்பதே தக்க அறிஞர் கண்ட முடிபு, ஆனால் கண்டபடி கிரந்த எழுத்துக்களை உபயோகிப்பது விரும்பத்தக்கதல்ல. தவிர்க்கப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் யாவற்றிலும் அவற்றைத் தவிர்க்கவே வேண்டும்.

கிரந்த எழுத்துக்களைக்கொண்ட சாதாரணச் சொற்கள் சில கீழே தரப்பட்டிருக்கின்றன. அவ்வெழுத்துக்களைத் தவிர்த்து தமிழ் மரபுக்கியையும் வண்ணம் அச்சொற்கள் எழுதப்படும் முறையும் தரப்பட்டிருக்கிறது;

ஸ்தானம் _ தானம்
ஸ்தாபனம் – தாபனம்
ஸ்தலம் – தலம்
ஸ்துதி – துதி
அஹிம்சை – அகிம்சை
அஹிலம் – அகிலம்
அக்ஷரம் - அட்சரம்

அங்கஹீனம் _ அங்கவீனம்
அங்குஷ்டம் _ அங்குட்டம்
அஜம் — அசம்
அஸாக்கிரதை — அசாக்கிரதை
அஜீரணம் — அசீரணம்
அஸ்தி — அத்தி
அஸ்வம் — அசுவம்
அஷ்டதிக்கு – அட்டதிக்கு
அர்த்தநாரீஸ்வரர் — அர்த்தநாரீசுவரர்
அஷ்டபந்தனம் _ அட்டபந்தனம்
அஸ்தமனம் — அத்தமனம்
அதிருஷ்டம் – அதிட்டம்
அஸ்திரம் – அத்திரம்
அந்தியேஷ்டி – அந்தியேட்டி
அம்புஜம் _ அம்புயம்
ஆஸ்ரமம் — ஆசிரமம்
ஆஸ்பத்திரி – ஆசுப்பத்திரி
ஆஸ்திகன் – ஆத்திகன்
இராஜதானி - இராசதானி
இராஜன் — இராசன்
இராஜ்யம் _ இராச்சியம்
இஷ்டம் - இட்டம்
ஈஸ்வரன் — ஈசுவரன்
உத்ஸவம் — உற்சவம்
ஔஷதம் - ஔடதம்
கிறிஸ்தவர் — கிறித்தவர்
சமஷ்டி — சமட்டி
சமஸ்தானம் - சமத்தானம்
சமாஜம் — சமாசம்
சம்ஸாரம் – சம்சாரம்
சம்ஹாரம் — சங்காரம்
சாஸ்திரம் – சாத்திரம்
தஹனம் — தகனம்
தூஷணம் — தூடணம்
நாஸ்திகன் _ நாத்திகன்
நிஷ்டூரம் – நிட்டூரம்
நிமிஷம் - நிமிடம்



நீதிஸ்தலம் – நீதித்தலம்
பங்கஜம் — பங்கயம்
பஸ்பம் — பற்பம்
பாஸ்கரன் — பாற்கரன்
பாஷை – பாடை
புஷைரதஸ்தானம் – புஷையிரதத்தானம்
புஜபலம் _ புயபலம்
புஷ்பம் _ புட்பம்
புருஷன் - புருடன்
பூஜை — பூசை
பூஜ்யம் — பூச்சியம்
போஜனம் — போசனம்
மகிஷம் – மகிடம்
மத்தியஸ்தர் - மத்தியத்தர்
மனுஷர் = மனிதர்
மனோபீஷ்டம் — மனோபீட்டம்
மரணாவஸ்தை — மரணாவத்தை
ஸ்மரணை — மரணை
வருஷம் — வருடம்
வாசஸ்தலம் - வாசத்தலம்
விஷம் — விடம்
விஷயம் — விடயம்
விஸ்வநாதன் — விசுவநாதன்
விஷ்ணு - விட்டுணு
நர்ஸ் – நேசு
பஸ் _ வசு
சரஸ்வதி – சரசுவதி
சிருஷ்டி – சிருட்டி
சீஷன் _ சீடன்
ஸ்ரீதனம் _ சீதனம்
ஸ்ரீமத் _ உயர்திரு
ஸ்ரீலஸ்ரீ – மறைத்திருவாளர்
சிரேஷ்டர் – சிரேட்டர்
க்ஷீணதிசை _ சீணதிசை

ஜீவராசி – சீவராசி
ஜ்வரம் – சுரம்
சேஷ்டை – சேட்டை
க்ஷேத்திரம் – சேத்திரம்
ஜோதி – சோதி
ஜோதிஷம் – சோதிடம்
தக்ஷிணை – தட்சிணை
தமாஷ் – தமாசு
திருஷ்டி – திருட்டி
தீபஸ்தம்பம் – தீபத்தம்பம்
துவஜம் – துவசம்
துஷ்டன் – துட்டன்
ஸ்தோத்திரம் – தோத்திரம்
நடராஜன் – நடராசன்
விஜயம் – விசயம்
ஜனவரி – யனவரி அல்லது சனவரி
ஜூன் – யூன்
ஜூலை – யூலை
ஓகஸ்ற் – ஓகத்து அல்லது ஓகசித்து
ஜப்பான் – யப்பான்
ஜெர்மனி – யெருமனி அல்லது செருமனி
ஸ்கொத்லாந்து – இசுக்கோதுலாந்து
ஸ்விற்சர்லாந்து – சுவிற்சலாந்து
ஸ்வீடன் – சுவீடன்
அஸ்திரேலியா – அசுத்திரேலியா
அஸ்திரியா – அசுத்திரியா
ஹங்கேரி – அங்கேரி
பிரிட்டிஷ் – பிரித்தானிய
ருஷியா – உருசியா
யூகோஸ்லவியா - யூகோசிலேவியா
புரோட்டெஸ்தாந்தர் - புரத்தசித்தாந்தர்
கொமியூனிஸ்தர் - கொமியூனித்தர்



# 12 முடிவுரை

மொழிபெயர்ப்புக்கலை எமது நாட்டிலே இன்னும் ஆரம்பநிலையிலேயே இருக்கிறது. அதில் ஈடுபட்டு அதனை ஒரு கலையாக்கிகொள்ளுவாரும் சொற்ப தொகையினராகவே இருக்கிறார்கள். இக்கலை வளர்ச்சிக்கு வேண்டிய ஊக்கம் பாடசாலைகளில் இதுவரையளிக்கப்படவில்லை. ஆனால் இங்கு உதயமாகியுள்ள புதுயுகத்திலே மொழிபெயர்ப்புக் கலை விருத்தியாக இடமுண்டு; இதில் எமது பல்கலைக்கழகம் ஊக்கம் அளித்தல் வேண்டும். பல்கலைக் கழகத்துப் பரீட்சைகளுக்கு மொழிபெயர்ப்பையும் ஒரு பாடமாக விதித்தால் இத்துறையில் நல்ல முன்னேற்ற முண்டாக, சிறந்த மொழிபெயர்ப்புக் கலைஞரை நாம் பெறலாம். பல்கலைக்கழகப் பரீட்சைகளில் மொழிபெயர்ப்பையும் ஒரு பாடமாக எடுத்து அதிற் சித்திபெற்றோரையே நம் நாட்டிலே மொழிபெயர்ப்புச் சருமங்களுக்குப் பொறுப்பாக்கிவிட்டால் இக்கலை துரிதமாக விருத்தியடையும்.

இது மாத்திரமல்ல: மொழிபெயர்ப்பை ஒரு தனிப் பாடமாகவும் ஒவ்வொரு பாடசாலையின் பாடவிதானத்துக்குள் அடக்க வேண்டும். இப்போது பாடசாலைகளிலே கணக்கு, பூமிசாத்திரம், சரித்திரம் என்னும் இன்னோரன்ன பாடங்கள் இரண்டாம் வகுப்பில் இருந்து ஒரு படித்துறை முறையிற் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இதே முறையில் மொழிபெயர்ப்பினையும் கற்பித்து வருதல் வேண்டும். இப்படியான ஒரு பிரத்தியேக முயற்சி இதற்குத் தேவையா? ஒருவருக்கு ஆங்கில அறிவும் தமிழறிவும் இருந்தால் மொழிபெயர்ப்புத திறமை அமைந்துவிடாதா? என்று கேட்பாரும் உளர்தான். மொழியறிவிருப்பதனால் மாத்திரம் ஒருவர் மொழிபெயர்ப்பாளராகிவிட முடியாது. அது அனுபவத்தில் வருதல் வேண்டும். மொழிபெயர்ப்பு ஒரு தனிப்பட்ட அரிய நுண்கலை. சித்திரம், காவியம், சங்கீதம், ஓவியம் முதலியவற்றைப் போன்றுள்ள மாட்சிமிக்க கலை. நாம் எல்லாரும் பொன்னைக் கண்டிருக்கிறோம். அதனைப் புடத்தில் இட்டு உருக்கி

வேண்டிய வேண்டிய ஆபரணங்களைச் செய்துகொள்ளலாம் என்பதனையும் அறிவோம்; அவற்றை ஆக்குதற்கு வேண்டிய கருவிகளையும் அறிவோம், அப்படியிருந்தும் நாம் ஒரு பொன்வளையலைத்தானும் செய்துகொள்ளும் வன்மைபடைத்திருக்கிறோமா? எமக்கு அதிற் பரிச்சயமில்லை: அனுபவமில்லை. ஆங்கிலமும் தமிழும் தெரிந்த எத்தனை மேதாவிகள் ஒரு வசனத்தை ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் உரியவிதத்தில் மொழிபெயர்க்கும் வன்மைகொண்டிருக்கிறார்கள்? மொழிபெயர்ப்பில் அனுபவத்தைச் சிறுவயதில் இருந்தே கொடுத்து வருதல் வேண்டும்.

பாடசாலைகள் இதன்பொருட்டு ஒரு பாடத்திட்டத்தை வகுத்துக்கொள்ளலாம். மூன்றாம் வகுப்பில் இருந்தே இப்போது ஆங்கிலம் போதிக்கப்பட்டு வருகிறது. ஆகவே அவ்வகுப்பில் இருந்தே அதனைப் போதித்துவருதல் சிறந்தது. Cat என்றால் பூனை என்பது பிள்ளைகளுக்குத் தெரியும்தான். ஆனால் அதனை உரிய விதத்தில் எழுதுவிக்க வேண்டும்; இப்படியே மூன்றாம் வகுப்பில் பிள்ளைகள் படிக்கும் மிகச் சுலபமான ஆங்கில (அல்லது சிங்கள) பெயர்ச்சொற்களுக்கும் வினைச் சொற்களுக்கும் சமபதங்களை எழுதுவித்தல் வேண்டும்

நாலாம் வகுப்பிலே: The dog is barking<br>
It is raining heavily<br>
பசு பால் உதவும்<br>
நாய் வீட்டைக் காக்கும்

போன்ற சிறிய வசனங்களை மொழிபெயர்க்கச் செய்யலாம்.

இப்படியாக ஒவ்வொரு வகுப்பிலும் பிள்ளைகள் இம்மொழிபெயர்ப்புத் துறையில படித்துறை முன்னேற்றம் அடைந்து வருவாரானால், சி. பா. த ப. வதுப்பை



அவர்கள் எய்தும் காலத்தில் அதிவிரிந்த அனுபவத்தைப் படைத்தவராய், சட்டசம்பந்தமான இலக்கியங்களைத் தானும், சாத்திரோக்தமுறையில் மொழிபெயர்க்கும் ஆற்றல் நிரம்பியவராய் இருப்பர். இந்த ஆலோசனையை நமது கல்விப்பகுதியாருக்கு சமர்ப்பிக்க விரும்புகிறோம்.

மொழிபெயர்ப்புப்பணியில் ஈடுபட்டுள்ள தமிழ் அன்பர்கள் இன்றைய தமிழினத்து வாழ்விலே ஒரு பெரும் பொறுப்பை வகித்து வருகிறார்கள்; எட்டுத்திக்கிலுமுள்ள மலர்களைக் கொண்டுவந்து கன்னித் தமிழின் – தெய்வத் தமிழின்– திருவடிகளில் அருச்சித்து, அவற்றை நறுமண மாலைகளாக்கி அவளின் திருமேனியிற் சாற்ற வேண்டிய பெரும்பணி அவர்களுடையது. அப்பணியை அவர்கள் திறம்பட ஆற்றி முடிப்பதிலேயே தமிழினத்தின் எதிர் காலக் கலைச்செல்வநிலை தங்கியிருக்கிறது.

முற்றும்

சுதந்திரன் பிரஸ்,
தபால் பெட்டி இல: 1183,
கொழும்பு-12